584

உ

ஸ்ரீ குருவே நம:

[illegible]

மகாவாக்கியம்.

மூலமும் உரையும்.

[illegible]

அச்சிட்டது.

1937.

உ

ஸ்ரீ குருவே நமஃ.

தசகாரிய

மகாவாக்கியம்.

மூலமும் உரையும்.

சுருதிசார மகாவாக்கியமும்.

தாது வருஷத்திற்கு
சாலியவாகன சகாப்தம் 1798-ம் வருஷம்
முனியப்ப முதலியாரவர்களால்
முன்பதிப்பித்த பிரதிக்கிணங்க

வடபாதிமங்கலம்
சோ. ஜானகி அம்மாள் அவர்களால்

திருவாரூர்
எட்வார்ட் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வர-வூ 1937.

OFFICE OF THE REGIS...
5 - NOV 19..

OFFICE OF THE ...
-NOV 1937
MADRAS

உ

ஸ்ரீ குருவே நம:

சுருதிசாரமகாவாக்கியம்.

தேசிகன்றன்னடிவணங்கிச்சுருதிசாரத்-திறனுரைப் பாஞ்சுகர்க்குபதேசித்திடும்வாக்கியங்க, ளாசில்பிரபஞ் சமதேபிர்ம்மோஹம்பேகமேவாத்வைதம் - பிர்ம்மோ ஹமதற்கப்பாலாய்ப், பேசியபாவா பாவாதீதம் பிர்ம் மோஹம்-பேசரியசுவானுபவாதீதம்பிர்ம்மோஹம், நா சமிலாதிவைநான்குவாக்கியங்கடம்மை-நாரதாதியர்நா லவர்நவின்றாரன்றே. (௧)

வெறும்பழுதையேபாம்பாம்விவர்த்தத்தாலு-மேவு சுகதுக்கமொன்றாய்விடலாற்பாலன், பெறும்பிதாவே யென்னுமாரம்பத்தாலும் - பெய்தயிரும் பால்தானே யென்றுபேசல்,உறும்பரிணாமத்தாலுமொக்கத்தோன் றி-லொன்றுறிலொன்றொழிக்குநித்தங் கூடாதத்தால், தெறும்புனலேயலையாமுற்பத்தியாலுஞ் - செகம்பிர்ம் மோகமென்றேசெப்பலாமே. (௨)

சொருபமொன்றேபிரமமென்பதெவ்வாறென்னிற்-சுசாதிகவிசாதிகசுகதபேதம், வருவதில்லையானுமபாவங்களுன்கும்-வந்தனவானுந்தோற்ற மனத்தாலன்றித் தருவதில்லையானுமண்ணைத்தவிரப்பாண்டந் - தானில்லையானுமத்தோற்றந் தானுங்கானல், உருவலது வேறு பொருளில்லையானு-மொன்றலதுஜகமில்லையென்றுணர்த்து நூலே. (௩)

பாவாபாவாதீதம்பிர்மோகமேதாற்-பழுதையின்றிப் பாம்புவராப் பண்பிஞலும், தாவாதவனுபவத்திலிரண்டதானுந் - தன்னறிவிஞுறைப்பிரண்டாதலாலும், மூவாதுதானவனுஞலாகா - முன்னமிரண்டுளவானுமூன்றுய்நின்ற, தேவாகிலசத்து சடந்துக்கநீங்காத்-திறத்தானுமிரண்டறுதல் சிவமேயான்மா. (௪)

தனித்தசுவானுபவாதீதம்பிர்ம்மோகமேதாற் - ருனவனுயிருப்பதுவுஞ் சங்கற்பத்தானுந், அனித்தமெனவிடிற்சூன்யமாதலானு- மதுமறவாவிடினினைவாயழிதலானும், இனித்தநிட்டைசாதனமாயிருத்தலானு-மேதுமற்ருன்மூடமென்றேயியம்பலானும், தொனித்தசுபாவமுங்கடந்ததீதந்தானே-சுயம்பிரகாசமென்றே சொல்வர்தாமே. (௫)

சுருதிசாரமகாவாக்கியம்-முற்றிற்று.

உ

தசகாரிய

மகாவாக்கியம்

மூலமுமுரையும்.

பாயிரம்.

(அவதாரிகை.)

OFFICE OF THE REGISTRAR 5 - NOV 1922 MADRAS

சீவர்களஞ்ஞானவந்தகாரவிர வினித்திரை செய்துக்கொண்டு இருப்பதால் எப்போதுஞ் சம்சாரமாகிய துற்சொற்பனங்கண்டு தாபத்திரய துன்பமுற்றிருப்பதையு மவர்களுக் கற்பாயசாயு மற்பபுத்தியாயுமிருப்பதையு மாத்மவிவேகமின்றியும் அவ்விவேகமெளிதிலடைய வுபாயமில்லாமலு மிருப்பதையும் பார்த்துச் சாஸ்திரமாகின்ற சூரியவுதயத்தாலவர்கள் துன்பத்தை நீங்கி முத்தியின்ப மடையும் பொருட்டுப் பூர்வத்திற் சங்கராசாரிய சுவாமிகள் ஆரியபாஷையிற் கூறிய மகாவாக்கியத்தை இக்காலத்தி லவர்களெளி

தாகவாத்ம விசாரஞ்செய்த ஆத்மஞான மடையும் படிக்குப் பேரருளால் திராவிட பாஷையில் விருத்தப் பாவாக மொழிபெயர்க்கத் தொடங்கிய விந்நூலாசிரிய ரிந்நூல்தேகமனமதவாதிகளின்விக்கினமின்றியினிதி னிறைவேறவு மிந்நூல்படிப்பவர் கேட்பவர்க்குத் தேகவிக்கினமின்றி யேகாக்கிர சித்தமுண்டாகவு மிந் நூற் பாரம்பரையாய் விளங்கவு மிதனந்தரங்கமான சத்தியக்கியான வனந்தானந்த வஸ்துவை நித்தியமா யும் நிட்களமாயும் நிராவரணமாயும் நிர்விட்சேபமாயு மிருக்கின்ற சொரூபமாயும் சர்வாதாரமாயும் சர்வ வியாபகமாயும் சர்வ காரணமாயும் சர்வாத்மகமாயு மிருக்கின்ற கடவுளை உபாசிக்கின்றார்.

(கவி.)

உலகமுதற் பொருளையுப்பார்க் குணர்வரிதாம் பொருளைப், யோதியவேதாகமத்தி னுச்சியினுட்பொ ருளைப். பலகலையின்பொருண் முடிவின் முடிவான பொருளைப்பற்றறப்பற்றியபெரியோர்பரவியவான்பொ ருளை, யலைதிவலைநுரை கடலினுதித்தொடுங்குமாபோ; லகிலாண்ட முதித்தொடுங்குமதன் மூலப்பொருளை, யிலகியசற்குருவாகியாளுகும் பொருளை, யெங்குமாம் பரப்பொருளை யாமும்வணங்குதுமே.

(இதனது பதப்பொருள்)

உலகமுதற்பொருளை-சகத்தின் முதன்மையான வஸ்துவை உம்பர்க்கு-தேவர்களுக்கும். உணர்வரிதாம் பொருளை-அறிவதற் கரிதாகியவஸ்துவை. ஓதிய-புருஷார்த்தத்தைச் சொல்லாநின்ற வேதாகமத்தின்- இருக்குமுதலிய நான்குவேதங்கள் காமிகமுதலிய விருபத்தெட்டுச் சிவாகமங்களாகிய விவைகளினுடைய, உச்சியின்-முடிவில் விளங்குகின்ற, உட்பொருளை- அந்தரங்கமானவஸ்துவை, பலகலையின்பொருள்-நானுசாஸ்திரங்களிற் கூறப்பட்டு பருத்தங்களின், முடிவின்-முடிவாயுள்ள தெய்வங்களுக்கு, முடிவானபொருளை - மேலாகிய வஸ்துவை, பற்றற-விடயத்திற்பொருந்துதலின்றி பற்றிய- பொருந்துகின்ற, பெரியோர்-மேலோர், பரவிய-துதிக்கின்ற, வான்பொருளை- சிரேஷ்டமான வஸ்துவை, அலை-திரையும், திவலை-துளியும், நுரை-பேனமும், கடலில்-சமுத்திரத்தில், உதித்து -தோன்றி, ஒடுங்குமாபோல் - இருந்து அடங்குகின்றதன்மைபோல, அகிலாண்டம்-சகல அண்டங்களும், உதித்து-தோன்றி, ஒடுங்கும்-இருந்து அடங்குதற்கு, அதன் காரணமென்னுமவைகளுக்கும், மூலப்பொருளை-காரணமான வஸ்துவை இலகிய- விளங்காநின்ற, சற்குருவாகி - ஞானுசாரியராகின்ற வஸ்துவை, யாணுகும் பொருளை- நாணுகின்றவஸ்துவை, எங்குமாம் இங்ஙன

மிருக்கின்ற எவ்விடத்திலும் வியாபகமாகிய, பரம்பொரு ளை-மேலானவஸ்துவை, யாமும்-நாமும், வணங்குதும்- மனவாக்குக்காயத்தாற் பணிகின்றோ மென்றவாறு, ஏ-அசை,

(பதசாரம்.)

பிரளயகாலத்திற் பிரமாதிதேவதைகளசித்தும் நசியாதசத்தாமாத்திரமாயுமவர்களா லுபாசிக்கப்பட்டதாயு மவர்களஞ்சி நடக்குமாக்கினை யுள்ளதாயுமிருக்கின்ற சொரூபமென்பார் உலைகமுதற்பொருளெனவும், எழுவகைப்பிறவியிலுமறிவின்மிக்கதேவர்களாலேயுஞ் சுட்டியறிதற்கரியதற் சாட்சியாயும் விருத்தியோர்விடயத்தைச்சுட்டினுற்றிரும்பிவிடயத்தைச் சுட்டல்போற்றன்னையறிந்தாலவ் விருத்தி திரும்பிவேறொன்றைச் சுட்டாது தன்மயமாகும்படியான தன்மையுள்ளதாயும், வடிவமற்றும் வடிவமாயுங் காரணமற்றுங் காரணமாயும் பொருந்தலற்றும் பொருந்தியுமிருக்கின்ற சொரூபமென்பார் உம்பற்குணர் வரிதாம் பொருளெனவும், தருமார்த்தகாமமாகிய அபர புருடார்த்த மூன்றைச் சொல்லுமிருக்காதிவேதத்தின் கன்மபத்திகாண்டத்துக்குங் காமிகமாதி யாகமத்துக்கு மேலான மோட்சமாகிய பரபுருடார்த்தத்தைச் சொல்லுஞானகாண்டமாகிய வுபநிடதத்திலும் வாதுளாகமத்திலும்விளங்கா

நின்ற மகா வாக்கியார்த்த சொரூபமென்பார் ஓதிய வேதாகமத்தினுச்சியினுட் பொருளெனவும் புராண விதிகாச சமய சாஸ்திரங்களின் றேவதைகளாகிய வாச்சியார்த்தங்களுக்கு லட்சியார்த்த சொரூபமென் பார் பலகலையின் பொருள் முடிவின் முடிவான பொரு ளெனவும் வயது முதலியதாற் பெரியவரா யிருப்ப தின்றிச் சாக்கிர சொப்பனசுழுப்தி மூன்றறக்கப்பாற் பட்ட துரியாவஸ்த்தையை யடைந்திருத்தலான் மகான்களா யிருப்பவராற் பாதத்துவம்பர வொளிபர மாத் விதமான பரமசிவ மெனத்துதிக்குஞ் செசுரூப மென்பார்- பற்றறப்பற்றிய பெரியோர் பரவிய வான் பொருளெனவும்- சராசரப்பிரவஞ்சங்களுக்குக் கார ணமென்னுந் தேகமுத லுருத்திரன் வரைக்காரணங் கட்கு மாதிகாரணமான சர்வாதாரமாயுஞ்சர்வவியாபக மாயுஞ் சர்வகாரணமாயுஞ் சர்வாத்மக மாயுமிருக் கின்ற சொரூபமென்பார் அலைதிவலை நுரைகடலி னுதித்தொடுங்குமாபோ லகிலாண்ட மூதித்தொடுங் மதன் மூலப்பொருளெனவும் விராட்டாதி யொன்பது வாச்சியநீங்கிய தத்பதலட்சியார்த்தமாகிய பிரமமென் பார் இலகியசற்குருவெனவும்-தூலமாதியொன்பது வா ச்சியநீங்கிய துவம்பதலட்சியார்த்தமாகிய கூடஸ்தசொ ரூபமென்பார் - யானுதும் பொருளெனவும் - தத்பத லட்சியமான பிரமமுந்துவம் பதலட்சியமான கூடஸ் தரும் ஐக்யமாகிய அசிபதார்த்தமாய் விளங்குமகண்ட

சொரூபமென்பார் - எங்குமாம் பரம்பொருளெனவும் அவ்வைக் யவனுபவத்தாற் றற்போதமொழுக்கின்றோ மென்பார்-யாமும் வணங்குதுமெனவுங் கூறினர்.

விசேடம்.

உலகமுதற் பொருளென்றதனுல் - நித்தியமென வும் - உம்பர்க்குணர்வரிதாம் பொருளென்றதனுல் நிஷ்களமெனவும்-பரவியவான்பொருளென்றதனுல்சத் தியக்கியானவனந் தானந்த வஸ்துநிராவரண நிர்விட் சேபமெனவும் - அகிலாண்டமுதித் தொடுங்குமதன் மூலப்பொருளென்றதனுல் சர்வாதார சர்வவியாபக- சர்வகாரணசர்வாத்மகமெனவும்-அவதாரிகையிற் கூற ப்பட்ட தெனக்கொள்க.

கடாதிகெட்டும் - மண்ணுதி கெடாததுபோலக் காரியமான பிரபஞ்சங் கெட்டுங் காரணமான சொரூ பங்கெடாமையால்-வடிவமற்றும் வடிவமாயிருத்தலெ னவும் - பழுதையிற் பாம்புதடிமாலை தோற்றல் போல் சொரூபத்திற் சீவேஸ்வரசகம்விவர்த்தமாகத் தோற் றுகையால் காரணமற்றும் காரணமாயிருத்தல்- எ- ம்- இரும்பினுடைய அடியாதிவிகாரமதைப் பற்றிய வக்கி னிக்கில்லாததுபோற் றேகாதியின் சுகதுக்க முதலிய் விகார மவையிற்பொருந்திய சொரூபத்துக்கில்லாமை

யாற் - பொருந்தலற்றும் பொருந்தி யிருத்தல் எ-ம் வயது முதலியதாவன-வயது-செல்வஞ்-சாதி யாச்சிரமம் - வித்தை-கன்மம் - பத்தி-யோகம் சாதன சதுட்டயம் - சிரவணம் மனனம் நித்தியாசனம்- சமாதி எ-ம்-அலைபாதிகடலுக் காதாரமாயில்லாது அவைகட்குக் கடலாதாரமாயிருத்தல்போல் அகிலாண்டஞ் சொரூபத்துக் காதாரமாயில்லாது அவைகட்குச் சொரூபமாதாரமயிருத்தலால்-சர்வாதாரம்-எ -ம் -அலையாதியுள்ள விடத்துமில்லாத விடத்துங் கடலிருக்கக் கடலுள்ள விடமெல்லாம் அலையாதி யில்லாமைபோல அகிலாண்டமுள்ளவிடத்து மில்லாதவிடத்துஞ் சொரூபமிருக்க அச்சொரூப விடமெல்லாம் அகிலாண்டமில்லாமையால்- சர்வவியாபகமெனவும் - அலையாதி கடலிற்றோன்றி யொடுங்க அஃதலைவயிற்றோன்றி யொடுங்காமைபோல அகிலாண்டஞ் சொரூபத்திற் றோன்றி யொடுங்க அஃதலைவயிற்றோன்றி யொடுங்கமையால் சர்வகாரணம் - எ - ம் அலையாதியிற்கடலின் குளிர்ச்சியாதிலட்சணமிருக்க அதில் அலையாதியின் றிரட்சியால்லட்சண மில்லாமைபோல அகிலாண்டத்திற் சொரூபத்தின் சச்சிதாநந்த லட்சணமிருக்க அதில் அவைபில் அனுர்தாதிலட்சண மில்லாமையால் சர்வாத்மகம்-எ-ம்- தேக முதலிய காரணமென்பதும் அவைகாரணமல்லவென்பதுமாவன.

உலகாயுதன், மாதாபிதாக்களாற் சிருஷ்டியுண்டாகின்றது கண்டதேகாட்சியாதலால் வேறே தெய்வமில்லை ஆதலாலவர்களே செகத்காரண மென்பது மாதா பிதாக்கள் ஆண் இச்சித்தால் பெண்ணும் பெண்ணிச்சித்தா லாணுமிரண்டு மன்றியில் அலியுமுண்டாகையாலும் அவர்களுக்குப் பிராணனில்லாதபோது வொருதொழிலுநடவாது பிராணனுண் டானபோது சகல தொழிலு நடத்தலாலுஞ் சுக்கில சுரோணிதத்தையிவர்களொன்றுஞ் செய்யாதிருக்க வேறேயொரு ஈஸ்வரன் கரசரணாதி யவ்யவங்களாய் செய்தலாலுமிவர்கள் பஞ்ச பூதத்திற் பிறந்திறத்தலாலுங் கூடாது.

சுபாவவாதி மஞ்சளுஞ் சுண்ணாம்புஞ் சம்பந்தப் பட்டவிடத்திற் சிவப்புண்டாதல் போற்சுக்கிலமுஞ் சுரோணிதமுஞ் சம்பந்தப்பட்டவிடத்திற் கரசரணாதி யவயவமுண்டாதல் சுபாவமாதலினாற் சகத்காரணத்துக்கு வேறேதெய்வமில்லை என்பது, மஞ்சளையுஞ் சுண்ணாம்பையுஞ்சேர்ப்பிக்கிறதற்குவோராள்வேண்டுவதுபோற் சுக்கில சுரோணிதத்தைச் சம்பந்தப் படுத்துகிறதற்கு வேறொரு ஈஸ்வரன் வேண்டுதலாற் கூடாது.

சாருவாகன், பிராண னிருக்குங் காலத்திற் சகல தொழிலும் நடந்து பிராணனீங்கிய காலத்திலொரு

தொழிலும் நடவாதிருத்தலாற் பிராணனசைவிஞ லேயே சுக்கில சுரோணிதஞ்சேர்ந்து சிருஷ்டி யுண் டாகிறதுவேறே தெய்வமில்லை பிராணனே சகத் காரண மென்பது, மனதில்லாத சுழுத்தியிற் பிராண ஞலை யொருதொழிலு நடவாதிருத்தலாலும் மனதா னது அதை யடக்கிவிடுதலாலும் பிராணஞனது இன் னபக்கத்திலோடுகிறேமென்கிற வறிவில்லாத செடமா தலாற் சுக்கில சுரோணிதத்தையறிந்து சேர்ப்பிக்கிற தற்குச் சித்தா யிருக்கின்ற வேறேயொரு ரூஸ்வரன் வேண்டுமாதலாலும் அபஞ்சீகிருத பூதாரசோகுண சமஷ்டியிற் பிராண னுண்டாயிறத்தலாலுங் கூடாது.

உபாசகன், மனதிருக்கின்ற காலத்திற் சிருஷ்டி நடக்கிறது மனதில்லாதகாலத்திற் சிருஷ்டி நடக்க வில்லை ஆதலால்மனதே சகத்காரணம் வேறேதெய்வ மில்லை யென்பது, புத்தியில்லாதபோது மனஞ் சஞ்ச லிக்கின்றபடியாலும் மனதைப்புத்தியானது சங்கற் பிக்கவும், சங்கற்பியாதிருக்கவும் செய்தலாலுஞ்சிருட் டிக்கிறதற்கு மனசுக்குச் சுதந்தர வறிவில்லா திருத்த லாற் சுதந்தர வறிவுடைய வேறேயொரு ரூஸ்ரன் வேண்டுதலாலும் மனது அபஞ்சீகிருத பூதசத்துவ குண சமஷ்டியிலுண்டாயிறத்தலாலுங் கூடாது.

க்ஷணிகவாதியானவன், புத்தியில்லாத போது சங்கற்பந்திரப்படாமற் சிருஷ்டியில்லாமற்போதலாலு

மிருக்கும்போது சங்கற்பந் திரப்பட்டுச் சிருட்டி நடக்கின்றதாலும் புத்தியே சகத்காரணம், வேறேயொரு தெய்வமில்லை யென்பது, பிரியமில்லாதபோது - நிச்சயித்த தொழில் நடவாமல் பிரியமிருக்கின்றபோது நிச்சயித்த தொழில் நடக்கின்றதாலுஞ் சிருட்டிக்கிறதற்குப் புத்திக்குச் சுதந்தாவறிவில்லாதிருத்தலாற் சுதந்தரவறிவுடைய வேறேயொரு ஈஸ்ரன் வேண்டுதலாலும் அபஞ்சீகிருத பூதங்களின் சத்துவகுண சமட்டியிற் புத்தியுண்டாயிறத்தலாலுங் கூடாது.

பவுத்தனுனவன், பிரியமிருக்குங் காலத்திற் சிருட்டி நடக்கிறது பிரியமில்லாதகாலத்திற் சிருட்டி நடக்கவில்லை யாதலால் ஆனந்தமே சகத்காரணம் வேறேயொரு தெய்வமில்லை யென்பது, சுயவானந்தமாயில்லாது, ஆத்மப்பிரதி பிம்பானந்தமா யிருத்தலாலுஞ் சிருட்டிக்கிறதற்கவ் வானந்தத்துக்குச் சுதந்தர வறிவில்லா திருத்தலாற் சுதந்தரவறிவுடைய தெய்வம் வேறேயொரு ஈஸ்வரன் வேண்டுதலாலும் அவ்வானந்தம் அவித்தையி லுண்டாயிறத்தலாலுங் கூடாது.

பிரசாபத்தியன், ஆனந்தமயனுன சீவன் கிஞ்சிக்ஞனுதலும் நினைத்த பிரகாரஞ் சிருட்டிக்கக் கூடாதிருத்தலாலுஞ் சர்வக்ஞனுய் நினைத்த பிரகாரஞ்

சிருட்டிக்கின்ற பிரமாவே ஜகத்காரணம் வேறே தெய்வமில்லை யென்பது, பிரமாவானவன் அவனுடைய பஞ்சசிரசிலொரு சிரசைக் கிள்ளினகாலத்திலதைச் சிருட்டித்துக்கொள்ள வல்லமையில்லாதவனாதலாலும் விட்டுணுவினுந்தியிலுதித்துப் பிரளயத்திலொடுங்குகையினாலுங் கூடாது.

வைணவன், விஷ்ணுவினுந்திக் கமலத்தில் பிரமாபிறந்து ஜகசிருட்டி பண்ணுகையால் விஷ்ணுவே ஜகத்காரணம் வேறொரு தெய்வமில்லை யென்பது, பிறந்ததையைச் சிருட்டித்துக்கொள்ள சத்தியில்லாததினாலும் விஷ்ணு சிவனாலுண்டாக்கி யொழிக்கப் படுகையினாலுங் கூடாது.

சைவாகமக்காரர், சிவனது பாதம் விஷ்ணுகாணாதபடியினால் சிவனே, ஜகத்காரணம் வேறொரு தெய்வமில்லை யென்பது, சிவனாகிய உருத்திரன் மாயையிற்றோன்றி யொடுங்குதலாற் கூடாது எனவுங் கொள்க.

தாற்பரியம்.

தத்வமசிவாக்கியத்தினால் அகண்டமாயும் அத்துவிதமாயும் அபரிச்சின்னமாயும் விளங்கும் பிரமசொரூபத்தை வணங்கினதாம். (௧)

(அ-கை-) முற்செய்யுளிற் கடவுள் வணக்கங் கூறி யிச்செய்யுளில நித்தசுத்த புத்தமுத்தசத்திய பரமானந்தாத்து விதமான அக்கடவுளே சீவர்கள் படுந் துன்பத்தைப் பார்த்து அதை நீக்கும்படி நீரா லாங்கட்டியானது போலவும் நெய்தடித்தது போலவும் வடிவமின்றிய வாகாயம்வடிவமானது போலவும் மானிடச் சட்டை சாத்தியெழுந்தருளி வந்த தமது ஞானாசாரியரை வணங்கித் துதிக்கின்றார்.

கவி.

இருவிழிகளுலகறிந்துந்தனையறியாததுபோ லியானறியும்பொருளலதிங் கனை யறியாமையினாற், கருவிடை புக்கின்பதுன்பக்கடலிடையே சுழன்று கண் கலக்கப்படுவேனைக் கருணைவிழியதனால், அருவினைகளறநோக்கி யாணவமேபோக்கிய கமகமென் றிருந்த வெலாமறிவு கொண்டே நீக்கிப், பருவமதிற்பதந்தாக் கிக் கற்பனைகளியாவும் பாழாக்கித் தானாக்கும் பரகுருநவைப்பணிவாம்.

(இ-ள்) இருவிழிகள்-உபய நேத்திரங்களானவை உலகறிந்தும் - கடபடாதியான பிரபஞ்சத்தை யுணர்ந்தும் அக்கடபடாதி யாகாரமாகின்றதே தவிர - தனை யறியாததுபோல்-அக்கண்களினியல்டையறியாதிருக்

கின்றதுபோல-இயனறியும் பொருளலது- நான் சரா சாப்பிரபஞ்சங்களையறிந்து மென்னலறியப்பட்ட வப் பிரவஞ்சாகாரமான தேதவிர - இங்கெனையறியாமையி ஞல் - பிரத்தியட்சமாகிய வெனது எதார்த்த சொரூ பத்தைத் தெரிந்துக்கொள்ளாமையினல் - கருவிடை புக்கு - மாதாவினது கற்ப்பத்தின்கணுற்று - இன்ப துன்ப சுகதுக்கமாகிய கடலிடையே - சமுத்திரமத் தியிலே - சுழன்று - சுற்றி - கண்கலக்கப்படுவேனை மனம்நொந்து அழுகின்றவென்னை கருணைவிழியத ஞல்- கிருபாதிருஷ்டியினல் - அருவினைகளற- எனது அரிதாகிய சஞ்சிதவினைக ளொழியும்படி - நோக்கி- பார்த்து-பருவமதில் பக்குவகாலத்தில் - பதந்தாக்கி திருவடி தீட்சைசெய்து ஆணவமே போக்கி- அறியா மையைநீக்கி - அகமக மென்றிருந்தவெலாம் - நானு னென்றிருந்த வனைத்தையும் - அறிவுகொண்டே -ஞா னத்தினலேயே-நீக்கி-வேருக்கி, கற்பனைகளியாவும் - ஆரோபமான வவையனைத்தையும்- பாழாக்கி-மித்தை யாக்கி- தானுக்கும் அம்மித்தையை யுந்தன் மயமாக் கின-பரகுருவை மேலாகிய ஞானசிரியரை - பணி வாம் வணங்குகின்றோம் எ - று.

பதசாரம்.

பிறத்தல் முதலிய பஞ்சகோசத்தின் சட்பாவ விகாரமாகியும் பெண்டுபிள்ளை பண்டபதார்த்தமா

கிய பிரவஞ்சாகாரமாகியும் பேனேனே யல்லது அகண்டவறிவானவெனது எதார்த்த சொரூபத்தை யறியவில்லையதனுலென்பார் - இயானறியும் பொருளலை திங்கெனே யறியாமையினுலெனவும் பழுதையை யறியாதவஞ் ஞானத்தினுலே பாம்பு தோன்றுவதுபோல ஆத்மாவை அறியாதவஞ் ஞானத்தினுலே கருப்பத்தின் கணுற்றென்பார் கருவிடைபுக்கெனவும் சுகதுக்கங்களளவிடப்படாததென்பார் - இன்பதுன்பக் கடலெனவும் தாபத்திரயமாகிய வச்சுக துக்கங்கள் மாறிமாறிவருதலால் வருத்தமுற்றென்பார் - சுழன்றெனவும் - அந்தகனுனவன் இது மேடுபள்ளமுடையவழி இதுநல்லவழி யென்று சொல்வதற்குத் தெரியாமற் றுன்புறு கின்றது போலத் துன்பமான பந்தத்தை நீக்கி யின்பமான மோட்சத்தை யடைய வுபாயந்தெரியாமையினுல் வெய்யிற் புழுப்போல் வருந்துகின்ற அதிதீவிர மூமுட்சு வென்பார் - கண்கலக்கப்படுவேனெனவும் - சடமான மச்சமானது தனது நேத்திர திருஷ்டியினுற் றனது சினைகளவ்வுருவ நீங்கித் தன்னுருவமாகும்படி பார்க்கின்றதுபோல சின்மாத்திர சொரூபமாகிய ஆசிரியர் தன்னையடுத்த சீடனது அற்பமான ஆகாமிய பிரார்த்தகன் மங்களுக்கேதுவாகிய மிகுதியானசஞ்சித வினைநீங்கி அச்சீடன்றன்னைப் போலச்சின்மாத்திர சொரூபமாகும்படி தான்பிரமத்தியானம் பண்ணி அத்தியானத்துடன் பார்ப்பதாகிய

கிருபாநேத்திரத்தினாற் பார்த்தென்பார்கருணைவிழிய தனாலருவினைகளறநோக்கியெனவும் - சடமானகோழி யானது தனது கரு முட்டையை நீங்கித் தன்னுருவா கும்படி பரிசித்துப் பக்குவத்திற் குஞ்சு பொரிப்பது போல் சித்ரூபமாகிய ஞானாசிரியர் தன்னுடைய சீட னது தேகவுருவநீங்கித் தன்னைப்போலச் சித்துரூப மாகும்படி சாதனங்கள் நிறைந்த பக்குவத்திற்றிருவ டி தீட்சை செய்தென்பார் - பருவமதிற்பதந்தாக்கியெ னவும் - குளவியானது தானெடுத்துவைத்த புழுவின துருவத்தைச் சத்திக்கின்றதனால் நீக்கித் தன்னுருவ மாகச் செய்கின்றதுபோல ஞானாசிரியர் தனது சீட னறியாமையையுக் தூல முதலொன்பதும் விராட்டு முதலொன்பதுமாகிய தேகாதியைத் தானென்பதை யும் கர்மபத்தி யோகங்களில் நீக்கக்கூடா தாகையால் மகாவாக்கியவுபதேசஞ்செய்து அகண்டாகாரவிருத்தி ஞானத்தைக்கொண்டே நீக்கிச் சர்வ சாட்சியாகிய சொரூபமாக்கினாரென்பார் - ஆணவமே போக்கியகமக மென்றிருந்தபெதலாமறிவுகொண்டே நீக்கியெனவும் - நேதிகளையப்பட்ட சீவீஸ்வர ஜகத்தைக்கானற்சலம் போல மித்தையாக்கினாரென்பார் - பழுதையிற் றோன் றியவாரோ பிதசர்ப்பம் பழுதையே யாவதுபோல அம்மித்தையா தோற்றத்தையும் பரிபூரணப்பிரமமா கிய தன் வடிவாக்கினாரென்பார் - தானாக்குமெனவும் சிவதுரியம் - பாதுரியஞ் சிவதுரியமாகிய விவேகட்

கப்பால் பிளங்குந் துரியாதீத சொரூபமென்பாற் பர குருவெனவும் - அத்தன்மையவனுபவத்தி லிருக்கின் றேமென்பார் - பணிவாமெனவுங் கூறினர்.

தூலமுதலென்பதாவன தூலசரீரம் - சூட்சுமசரீரம் - காரணசரீரம் - சாக்கிராவஸ்தை - சொப்பனவஸ்தை - சுழுத்தியவஸ்தை - விசுவன் தைசதன் - பிராக்ஞனெனவும், விராட்டுமுதலொன்பதாவன விராட்டு இரணியகர்ப்பம் அவ்வியாகிருதம் சிருட்டி திதி சம்மாரம் - வைசுவாநரன் - சூத்திராத்மா அந்தரியாமியெனவுமறிக.

(இ-ம்) அபக்குவனுயனுத்மாவே தானெனன் றிருக்கு மூடனும் சீவகாருண்ணியமுதலிய நான்குமே திருமேனியா யெழுந்தருளியிருக்கின்ற அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரமசொரூப மாகிய ஞானசாரியரை யடைந்தாற் பரமான்மாவாவனென்பதாம்.

(உ)

(அவதாரிகை)

கல்விமுதலிய நற்குணங்கள் கொர்வ முண்டாயின் வீணுய்க் கெடுமாகலின் இந்நூலாசிரிய ரப்படிக்கு வித்யாகொர்வந்தமக்கின்றென்ப தறிவிக்குநிமித்தம வையடக்கங்கூறுகின்றூர்.

கவி.

முன்பு செய்ததவப்பயனுன் மூதறிவின் பயனுன் முன்னுரைத்த பன்னூலின் முறைதெரிந்தபயனு, லன்புசெய்து சற்குருவினருள் படைத்தபயனுலடைந்தவர் செய்தொழில்காட்டு மறிவிலியேபோலத், தன் புதல்வர்க்கிரங்கிய தாயெனவுலகோர்க்கெல்லாஞ் சங்கரசற் குருவருள் வேதாந்தநன்னூற்பொருளை, வன்புகொடுதமிழ்போலுந் தமியேன் புன்கவியால் வகுத்துரைப்பேனெனத் துணிந்தவாய் மதர்ப்புமிதுவே.

(இ-ள்) முன்புசெய்த - பூர்வ ஜென்மங்களிற் பண்ணிய தவப்பயனுல்-மகாதபோபலத்தினுலும் மூதறிவின் - முதிர்ந்த விவேகத்தினுடைய பயனுல் - பலத்தினுலும் - முன்னுரைத்த- அநாதியாய்க் கூறப்பட்டிருக்கின்ற பன்னூலின்-பலசாத்திரங்களின் முறைதெரிந்த கிரமத்தையறிந்ததின் பயனுல் - பிரயோஜனத்தினுலும் அன்புசெய்து சற்குருவின் ஞானசாரியாருக்குப் பணிவிடைசெய்து அவருடைய அருள்படைத்த அனுக்கிரகம் பெற்றதின் பயனுல் - பேற்றினுலும் அடைந்தவர் - பிரமானந்தத்தைப் பெற்றவர்கள் செய்தொழில்- பண்ணுகின்ற கிருத்தியம்போல காட்டும்பாவனையாகக் காட்டுகின்ற - அறிவிலியே போல - மூடனேபோன்று தமியேன் நாயேன். தன் புதல்வர்க்கு-தனது சுதருக்கு, இரங்கிய அருள்சுரக்

இன்ற தாயென மாதாவைப்போல உலகோர்க்கெல்லாம் மூமுட்சுகளனைவருக்கு முபமெயாக மாக சங்கர சற்குரு வருள் சங்கராசாரிய சுவாமிகளெனும் நாம தேயத்தை யுடைய ஞானதேசிசர் கிர்வாணத்திற் கூறிய வேதாந்த நன்னூற்பொருளை - உபநிடதமுடிவான மகாவாக்கியநூலை வன்புகொடு, புத்தியின் றிடத்தைக்கொண்டு தமிழ்போலும் - செந்தமிழ் போன்று புன்கவியால் - புல்லியசெய்யுளால் - வகுத்துரைப் பேனெனத் துணிந்த -பகுத்துக் கூறுவேனெனத் துணிவுகொண்ட - வாய்மதர்ப்புமிது-வாக்கின் கொர்வத்தா லுண்டான திந்நூலாம்-எ-று.

(ப-ம்) பூர்வஜன்மங்களில் நிட்காமியமாகச் சாந்தராயணமாதி விரதம் பஞ்சாக்கினி மத்தியாதிதவம் யாகாதி கருமங்கள் பிரமாதிதேவவுபாசனை இயமாதி யட்டாங்க யோகமாகிய இவைகளாலுண்டான பாவ நிவர்த்தியும் சித்தவேகாக்கிரமு மென்பார், முன்பு செய்த தவப்பயனெனவும் - அவற்றுற் சுரர்முதற்றுபரமீறுகிய வெழுவகைப் பிறவியினுள்ளுந் துன்பமே யன்றி யின்பமில்லை யென்னும் விவேகத்தால் எப்போது ஜனனமரணத்தை நீங்கி மோட்சமடைவோமென் றுண்டான கவலையென்பார்- மூதறிவின்பயனெனவும்- அதனலவைகளுக்குபாயஞ்சொல்லாநின்ற நூதன கற்பிதமின்றி யனுதியாயுள்ள வேதாதிபல சாத்திரங்க

ளிற் பிரமமாத்திரஞ் சத்தியம்மற்ற சீவீஸ்வர ஜகத் அசத்தியமென்கிற கிரமத்தை விசாரித்தறிந்ததனு லுண்டான சாதனசதுட்டயமைத்திரியாதி குணங்க ளென்பார், முன்னுரைத்த பன்னூலின் முறைதெரிந்த பயனெனவும் அவைகளாற் றலைரோமத்தில் நெருப்புப் பற்றிக்கொண்டவனைப்போலவும் சிலதினப்பட்டினிக் காரனைப்போலவும் மடலூருங்காமியைப் போலவும் அதிதீவர பக்குவமுற்றுப் பிரமக்கியானுதிநான்கு மோர் திருமேனியெனக்கொண்டெழுந்தருளிய ஞானு சாரியரை யடைந்து அவருக்கு ஆப்தம அங்கந்தான ஞ்சத் பாவமாகிய நான்குவிதப் பணிவிடைகளைச் செ ய்து மகாவாக்கிய அனுக்கிரகம் - பெற்று அதனுலுண் டான தத்துவஞானமென்பார் - அன்புசெய்து சற்கு ருவினருள் படைத்தபயனெனவும் - இங்ஙனம் தத்து வ ஞானம் பெற்றதனுற் பிரமானந்தமுற்ற ஞானிகள் வாக்காதியில் நிகழுஞ் செயல்களை மேற்கூறியவற்றுள் ஒன்றுமின்றிய அஞ்ஞானியானவன் பாவனையாய்க் காட்டுதல்போலென்பார் அடைந்தவர் செய்தொழில் காட்டுமறிவிலிபோ போலெனவும் - தூர்ப்புத்திரனை யும் தாயானவ ளமுதூட்டி வளர்த்தல்போல் அபக்கு வானும் பிழைக்கும்பொருட்டு வைராக்கியாதி யாறு லட்சணமு முடைய சங்கராசாரிய சுவாமிகள் பேரரு ளினுலே அறிவை வளர்த்தற்குக் கூறிய உபநிடத முடிவாகிய மகாவாக்கிய நூலென்பார் தன்புதல்வர்க்

கிரங்கிய தாயென வுலகோர்க்கெல்லாஞ் சங்கரசற்குரு வருள் வேதாந்த நன்னூற்பொருளெனவும் - அந்தச் சுவாமிகளுக்குள்ள பேரருளும் பூரணஞானமில்லாத யான் அகங்கொண்டு கூறியதிதுவென்பார் வன்பு கொடுதமிழ்போலுந் தமியேன் புன்கவியால்வகுத்து ரைப்பேனெனத்துணிந்த வாய்மதர்ப்பு மிதுவெனவு ங் கூறினர்.

(வி-ம்.) மைத்திரியாதி குணங்களாவன, மைத்திரி-கருணை-முதிதை-யுபேட்சை- நிராசை - பொறுமை-உதாரம்- சாந்தியாதி எனக்கொள்க, வைராக்கியமாதியாறுலட்சணமாவன, வைராக்கியம்- சாபானுக்கிரகசாமார்த்தியம் - அஞ்ஞானலட்சணமறிந்-தகற்றியிருத்தல் ஞானலட்சணமறிந்தடைந்திருத்தல் - சீவேசுரவுற்பத்திநாசத்தை யனுபவமாயறிந்திருத்தல் - அவித்தை மாயையுற்பத்தி நாசத்தை யனுபவமாயரிந்திருத்தல்-எனவறிக.

(இ-ம்.) திரிவிதவுலகத்தும் பரிபூரண ஞானியருமையாயும் அவராற்பிரயோசனமடைபவ ரேகதேசமாயும் அவரைப்போற் பாவனையாகக் காட்டுகின்றவர்களருமையில்லாமலு மவர்களாற்பிரயோசனம் அடைபவர் அனேகராயு மிருப்பதுபோலவும் - இராஜாவினிடத்துள்ள மாங்கனியைப்பெற்றனுபவிப்போ ரேக

தேசமாயும் சேவகன் கையிலிருக்கின்ற மாங்கனியை ப்பெற்றனுபவிப்போ ரனேகராயுமிருப்பதுபோலவும் ஆரியபாஷைக் கதிகாரமும் அதிகவிற்பத்தியு முள்ள வர்களால் ஆரியபாஷையிலுள்ள மகாவாக்கிய நூலி னூற்பயன்பெறவேண்டி யிருப்பதால் அதனாற் பயன் பெறுவர் ஏகதேசமுந் திராவிட பாஷையிலுள்ள இந்த மகாவாக்ய நூலினாற் சகலரும் பயனடைவதா யிருப்பதா லிதனாலடைபவ ரனேகருமா மென்பதாம். (ரு)

(அவதாரிகை.)

இந்நூற்குரிய வதிகாரி லட்சணமும் இந்நூலு ண்டான வரலாறுங்கூறல்.

கவி.

வேறு

சற்குருவினருளாலுந் தவமுடிவின் பயனாலுஞ் சனனநீங்கிச், சிற்கனவாழ்வடைவதற்கே சிந்தைசெ யுந்திறமுடைய சிலராகி, நிற்குநிலைசாதனங்க ளோரு நான்குமறைநான்கு நீந்தியோக, வற்கமொடு சகல கலைகளுந் தேர்ந்துஞான நெறிவருவராமால்.

(இ-ள்) சற்குருவின் - ஞானாசாரியருடைய, அருளாலும், கிருபையினாலேயும், தவமுடிவின் - முடிந்த தவத்தின் - பயனாலும் - பலத்தினாலேயும் - சனன நீங்கி - பவமொழிந்து - சிறக்கன வாழ்வடைவதற்கே அகண்ட வறிவானந்தத்தையே பெறும்பொருட்டு - சிந்தைசெயும் - கருதுகின்ற திறமுடைய - தன்மையையுடைய சீலராகி நற்குணசாலிகளாகி - நிற்குநிலே சாதனங்க ளொருநான்கும்-நித்தியமான வொப்பற்ற சாதன சதுட்டயத்தைப்பெற்றுநின்று - மறைநான்கும்- இருக்காதிவேத நான்கினத்தியயனப்பயனேயும் - யோகவர்க்கமொடு - இயமாதியஷ்டாங்க யோகவப்பியாசப்பயனேயும் - சகலகலேகளும் - சாத்திரங்களனேத்தின னுஷ்டானப்பயனேயும் - தேர்ந்து விசாரித்து நீந்தி அவைகளேவிடுத்து - ஞானநெறி மோட்சமார்க்கத்தில்-வருவர்-வாநின்ற முமுட்சுக்கள், ஆம். இந்நூற்கதிகாரிகளாம்-எ-று.

(ப-ம்) அஞ்ஞானலட்சணமறிந் தகற்றியிருத்தல் ஞானலட்சுணமறிந்தடைந்திருத்தல்- சீவவுற்பத்தி நாசமனுபவமாயருந்திருத்தல் ஈஸ்வாவுற்பத்தி நாசமனுபவமாயறிந்திருத்தல் அவித்தையுற்பத்தி நாசமனுபவமாயறிந்திருத்தல்-மாயையுற்பத்தி நாசமனுபவமாயறிந்திருத்தலாகிய ஆறுலட்சணமுமுடைய் ஞானசிரியரென்பார் - சற்குருவெனவும் - சிரவணமனன தியான சமாதியாகியசத்துவதவ முடிவிலுண்டாகுந் தத்துவக்

தியானமென்பார் தவமுடிவின் பயனெனவும் - தலை ரோமத்தினெருப்பு பற்றிக்கொண்டவன் சார்வபூமாதி செல்வங்களையு மிச்சியாமற்றுபநீக்குவதாகிய தண்ணீர்மட்டி லிச்சிக்கின்றதுபோலச் சனனமரணதுன்பமுடைய சிவசாயுச்சியவரைச் சரீரமுத்தியையுங் கருதாமல் அசரீரமுத்தியாகிய அகண்ட ஞானனந்தச் செல்வத்தில் மட்டுமிச்சையுடைய முமூட்சுவாகியென்பார் - சனனநீங்கிச் சிற்கனவாழ்வடைவதற்கே சிந்தைசெயுந்திறமுடைய சீலராகியெனவும், அவதி பரியந்தம், நித்தியா நித்திய வஸ்து விவேகம் இகாமுத்திரார்த்த பலபோகவிராகம் சமாதிசட்கசம்பத்தி-முமூட சுத்துவமாகிய ஞானசாதன நான்குமடைந்தென்பார், நிற்குநிலை சாதனங்களொருநான்குமெனவும்-வேதாத்தியயனத்தாற் பிரமலோக மாத்திரங் கிடைப்பதென்றும் - அஷ்டாங்கயோகத்தாலணிமாதி சித்திகளும் பிரமலோகமுங் கிடைப்பதென்றும்-சமய சாஸ்திரானுட்டானத்தாற் பதமோட்சங்கிடைப்பதென்று மறிந்தவைகளை விடுத்தென்பார், மறைநான்கு நீந்தியோகவற்கமொடு சகலகலைகளுந்தேர்ந்தெனவும் தேனிரம்பிய மலரைத்தேடும் வண்டைப்போல சற்குருவைத் தேடியடைந்து சிரவணாதி செய்பவரென்பார் - ஞானநெறி வருவரெனவுங் கூறினர். (சு)

(அவதாரிகை) இதுமது.

கலி.

இப்படியே சாதனமு மன்புவணக்கமு ஞானத் தியல்பும் பூண்டிங், கெப்படியாகிலும் பிறவா திறவா முத்தியிச்சித்தார்க்கியல்பதாகச், செப்பவல்லமகாவா க்கியத்திறமிதனையுலகோர்க்காய்ச் செப்பினோமென், றப்படியோர் சீடனுக்குச் சங்கராசாரியரன் றறைந்த தாமால்.

(இ-ள்.) இப்படியே-முற்கூறிய வண்ணமே சாதனமும்- சாதன சதுஷ்டயமும் அன்பும் - சிரத்தையும் வணக்கமும் - அடக்கமும் ஞானத்தியல்பும்-ஞானத்துக்கேதுவான குணமும் பூண்டு - பொருந்தி இங்கு இவடத்திலேயே எப்படியாகிலும் - எவ்விதத்திலாயினும் பிறவாதிறவாமுத்தி - உற்பத்தி நாசமற்ற பரமோட்சத்தை இச்சித்தார்க்கு அடையவேண்டுமென்று விரும்பிய முமுட்சுகளுக்கு - இயல்பதாக- சுபாவமாக செப்பவல்ல - உபதேசிக்கத்தகுந்த மகாவாக்கியத்திறமிதனை - மேன்மையான விம்மகா வாக்கியத்தை உலகோர்க்காய் - சகத்திலுள்ள சகலபக்குவாளுக்கு முபகாரமாக செப்பினோமென்று - கூறுகின்றோமென அப்படி யோர்சீடனுச்கு - முன்மொழிந்ததுபோன்று அதிதீவர பக்குவமுள்ள வோர்மாணாக்

கனுக்கு - சங்கராசாரியர் - சங்கராசாரிய சுவாமிகள் அன்றறைந்ததாம் - முற்காலத்தில் விளம்பியதிதன் முதனூலாம் எ-று.

(ப-ம்) மோட்சமாத்திரத்திலாசையுடன் அவதி பரியந்தம் சாதனங்கள் பெற்று சற்குரு சாத்திரம் சொரூபத்தில் சிரத்தையுற்று இவையுண்டானதினூ கொர்வமடையாமல் மைத்திரியாதி குணங்கள் நிறைந்த தென்பார்-இப்படியே சாதனமு மன்பும் வணக்கமும் ஞானத்தியல்பும் பூண்டெனவும் சாலோகாதி சிவ சாயுஜபவரைப் பன்னிரண்டுபதமோட்சமு மன்னிய மான உற்பத்திநாசஞ் சரீரந்துக்கமுள்ள வபாமுத்தி யானதால் அவையல்ல அனன்னியமா யுற்பத்திநாச மற்றதாயகண்டானந்தமாயுள்ள பரமுத்தியென்பார்-பிறவா திறவாமுத்தியெனவும் பாக்கியகன்மத்தாற் சித்தியாததாயாந்தர் கன்மத்தாற் சித்திக்கிரதாயிருந்தா லும் அந்தப்படியே நிரந்தர நெடுங்காலநேசத்துடனே அப்பியாசஞ்செய்து பெற்றுக்கொள்ளுவோமென்று மிச்சையுடையதீவரதர முமூட்சுவுக்குத் தடையில்லாமலுபதேசிக்கத் தகுந்ததென்பார் எப்படியாகிலும் பிறவா திறவாமுத்தி யிச்சித்தார்க்கியல்பதாகச் செப்பவல்லதெனவும், பாவநீக்கும் நிஷேத வாக்கியத்துக்கும் புண்ணியத்தை வர்த்திக்கும் விதிவாக்கியத்துக்கு மேலான சித்தார்த்தபோத வாக்கியமென்பார்-

மகாவாக்கியத்திறமெனவும், ஓர்பக்குவனுக் குபதேசிக்கிலவன்மட்டுக்கும் பிரயோசனமாகு மாகையான் மந்தமுதலிய பக்குவாளும் பிழைக்கும்படி வியாசர் சூதருக்குத் தெரிவித்ததுபோல் ஓர் பக்குவனை முன்னிட்டுச் சாத்திரஞ் செய்ததென்பார்-உலகோர்க்காய்ச் செப்பினேனென்றபடியோர் சீடனுக்குச் சங்கராசாரிய ரன்றறைந்ததாமெனவுங் கூறினர்.

(இ-உ-க-ம்) சாதனமுஞ் சற்குரு கிருபையுந்தத்துவஞானமுமன்றியிற் பரமோட்சமடையக் கூடாதென்பதாம். (ரு)

(அவதாரிகை.)

நூற்பெருமை கூறல்.

கவி.

அத்தகைமைபெற்ற மகாவாக்கியந்தா னேதெனில் வேதாந்தமாகிச், சுத்தபரிபூரணமுந்தோற்றுசராசர நிலையுந் துணிந்தோர்க்கெல்லாம், பெத்தமது நீங்குகையும் பெறும்பேறுமுரைக்கும் ரகசியப்பேருகு, முத்தரிதற் குண்மையு மீரைந்துளதென் றுரைப்பரைமொழியுங்காலே.

(இ-ள்) அத்தகைமைபெற்ற - அவ்வளவு மகிமை பொருந்திய, மகாவாக்கியம் - மகாவாக்கிய நூலினில க்கணம், ஏதெனில் - இயாதென்றுகேட்கின் வேதாந் தமாகி - உபநிஷத்து சொரூபமாயிருப்பதன்றி, சுத் தபரிபூரணமும் - அமலமாயகண்டமாயிருக்குஞ் சொ ரூபத்தையும், தோற்றுசராசரநிலையும்-ஆரோபமா யு ண்டாகிய பிரமாதிஸ்தப்ப பூச்சிவரை சரமும் குறுமு ளைமுதற் கற்பக விருட்சம்வரை அசரமுமான பிரபஞ் சத்தினிருப்பையும், துணிந்தோர்க்கெல்லாம் - அனு ஷ்டித்துத் தெளிந்தோரனைவர்க்கும், பெத்தமது- பந்தமானது, நீங்குகையும்-நிவர்த்தியாகின்றதையும் பெறும்பேறும்- இதனாலடையும் பயனையும், உரைக் கும் - இந்நூற் கூறுகின்றது ரகசியப்பேருகும் - மே லுமிந் நூலாலந்தரங்கமாய்ப் பயன்பெறத்தக்கதாகும்- இந்த நூலிற் கூறுமகாவாக்கியங்களுக்குள்ள லட்சண மெத்தனையெனில்-முத்தர்-அவித்தை நிவர்த்தியானவ ர்கள் இதற்கு இந்நூலிற் கூறுமாவாக்கியங்களுக்கு, உண்மையும்உள்ள இலட்சணமும்-ஈரைந்துளதென்று பத்திருக்கின்றதென, உரைப்பர் - சொல்லுவார்கள் - அதை மொழியுங்கால், அவைகளை யுரைசெய்யுமிட த்தில் என்றவாறு.

(ப-ம்,) உபநிடதத்திலுள்ள வாக்கியங்களே ஆரி யபாஷையிலுள்ள மகாவாக்கிய நூலிலிருக்கின்றதென்

பார் வேதாந்தமாகியெனவும் - சீவாதிக்குள்ள அசுத்தமற்றதென்பார் சுத்தமெனவும் - தேசகாலவஸ்துவாகிய மூன்றுவிதபரிச்சேதமுமற்ற பிரமமென்பார் பரிபூரணமெனவும் - பழுதையினிடத்திற் பாம்பாரோபிதமாய்த் தோற்றுவதுபோல ஆத்மாவினிடத்தில் அத்தியாசமாகச் சராசரப்பிரபஞ்சந் தோற்றுதலென்பார் தோற்றுசராசர நிலையெனவும் - விளக்கு யாவருக்கும் பொதுவாய்ப் பிரகாசங்கொடுப்பதுபோலப் பிராமணனுலும் நீசனுலும் சமுசாரியானுலும் சந்நியாசியானுலும் பிரமமே சத்தியம் ஜகத்தசத்தியமென்று நிச்சயமுடையவர்களுக்கு, கட்டுப்பட்டவனுக்குச் சுதந்தரத்துவமின்மைபோலச் சாட்சிமாத்திரமாயிருக்குஞ் சுதந்தரமில்லாமற் போகும்படி செய்யும் பஞ்சகோசகட்டு நீங்கலென்பார் துணிந்தோர்க்கெல்லாம் பெத்தமது நீங்குகையுமெனவும் மனுடானந்த முதலிரணிய கர்ப்பானந்தவரையோர் திவலையாகத்தக்க பிரமானந்த சாகரமென்பார் பெறும்பேறெனவும் - புருடன் ஸ்திரீயிடத்திற் கலவியினின்பம் ரகசியமாய்ப் பெற வேண்டுவதுபோல இந்நூல் தனித்திருந்தனுட்டித்து அனுபவம் பெறத்தக்கதென்பார் - இரகசியப்பேருகுமெனவும் அஞ்ஞானமு மதன்காரியமும் விடுபட்டவரென்பார் - முத்தரெனவுங்கூறினர்.

(வி-ம்) சாதிவன்னுச்சிரமங்க ளதற்குச்சொன்ன தன்மா தன்மங்கள் அதின்பலமான சொர்க்க நரகாதி

கள் அவைகளின் விசேஷமான வனந்தகோடி சன்மங்கள் முதலான தொடக்குப்பட்டலேகின்ற ஜீவர்கிருபையவதாரமாச்சரியமுதலானதொடக்குப்பட்டிருக்கின்ற ஈஸ்வரன் சீவருடைய சங்கத்தினால் அசுத்தப்பட்டிருக்கின்ற பூதங்களிவை கட்கெல்லா மன்னியமாயிருக்கின்ற பிரம மித்தனைகளுடனுங்கூடி நின்றாலும் அதை யசுத்தம் பற்றாதபடியினாலும் அவையெல்லாம் பிரம விவர்த்தமானபடியினாலு மெப்போதுஞ் சைதன்னியமாயிருக்கின்ற பிரமஞ் சீவாதியி னசுத்தப்பற்றாதசுத்தமெனவும் பிரமமானது தேசகாலவஸ்துவால் அபரிச்சின்னமெனவரும், மூன்றுவிசேஷம் யாதுக்குத் தேசத்தாலபரிச்சின்னத்துவமென்றாற் போதாதோவெனில் ஆகாயஞ் சகல தேசத்திலும் வியாபகமாயிருக்கின்றமையாலதற்குத் தேசத்தாலபரிச் சின்னத்துவமாகின்ற அகண்டத்துவம் வரும் அதைநிராகரிக்கு நிமித்தங் காலத்தினாலும் அபரிச்சின்னத்துவமெனும் இரண்டாம் விசேஷமும்வேண்டும் அவ்வாகாயத்துக்குக் காலத்தினா லபரிச்சின்னத்துவ மில்லையாவெனின், அதுசிருட்டிகாலத்தி லுண்டாய்ப் பிரளயகாலத்திலிறத்தலாலில்லை ஆனாலவ்விரு விசேஷமாத்திரம் போதாதோவெனில் காலமை விபுவாயிருக்கின்றபடியினால் தேசத்தினாலு மாகாசத்தினாலு மபரிச்சின்னமாயுந் தன்னாலே தனக்குப் பரிச்சேதங் கூடாததாயு மிருக்கின்றமையாலதற்கு அகண்டத்துவம் வரும் - அதைநிராகரிக்கு

நிமித்தம் வஸ்துவினுலும் அபரிச்சின்னத்துவமெனும் மூன்றும் விசேஷமும்வேண்டும் அக்காலத்துக்கு வஸ்துவினுல் அபரிச்சின்னத்துவ மில்லையாவெனில் அது ஆகாசாதி வஸ்துவல்லாதபடியாவில்லை ஆகையால் ஆத்மாவைத்தவிரக் - காலம் வஸ்துதேசங்களுக்குத் திரிவிதபரிச்சேதசூனியமான அகண்டத்துவங்கூடாது - அப்படியே யாத்மாவுக்கும் நானிந்தத்தேசத்திலிருக்கின்றேனந்தத்தேசத்தி லிருக்கவில்லையென்று தேசத்தினுலும் நான் முன்வருடத்திற் பிறந்தேன் கொஞ்சநாளைக்குப்பின் னிறந்துவிடுவேனென்று காலத்தினுலும் நான்பிருதிவியாதிகளல்லவென்று வஸ்துவினுலும் பரிச்சின்னத்துவமிருக்கிறதேயெனில் அது அத்தியாசமாய்த்தேகத்தை யபேட்சித்து வருகிறதே தவிர ஆத்மாவுக்கில்லை கடமிருக்குது படமிருக்குது பிருதிவியிருக்குது அப்பு விருக்குதுவென்று பூதபவுதிகமாகிய சமஸ்த பிரபஞ்சத்திலும் ஆத்மா வியாபகமாயிருப்பதாற் றேசத்தா லபரிச்சின்னத்துவமும் ஆத்மா அனுதியாயிருப்பதாற் பூதகாலத்தாலும் நித்தியனுயிருப்பதாற் பவுஷியகாலத்தாலும் பரிச்சின்னத்துவமும் சர்வாத்மனுயிருப்பதாலும் சுஜாதிவிஜாதி சுவகதமாகிய மூன்று பேதமு மில்லாதிருப்பதினுலும் வஸ்துவா லபரிச்சின்னத்துவமும் ஆத்மாவுக்கிருக்குது அப்படி அல்ல கடமிருக்குது தேவதத்தனிருக்கின்ற சைத்திராத்மாவென்று சுசாதிகமுஞ் சுசாதி

கபேதமும்பிருவியாதியென்றுங்கடாதியென்றும் விசா திகமும் விசாதிகபேதமும் இச்சாத்துவேஷ சத்துவ ரசோதமமென்று சுவகதமுஞ் சுவகதபேதமுமிருக்கு தேயெனில் - ஆகாசமுபாதியாற் கடாகாசாதியாகத் தோற்றல்போலாத்மாவுஞ் சரீரவுபாதியாற் றேவதத் தனுதியாகத்தோற்றலாற்சுசாதிபேதமும்-பிரபஞ்சம் சத்தாகையால் விசாதிபேமும்- இச்சையாதி யந்தக் கரண சுபாவமாகையாற் சச்சிதானந்தமாத்திர வாத் மாவுக்குச் சுவகதபேதமும் இல்லை - சத்துச்சித்து ஆனந்தமென்னும்பேதம் ஆத்மாவுக்கில்லையோவெனி ல் குளிரிளகல்வெண்மையென்னும்பேதம் நீருக்கில்லா ததுபோற்பேதமில்லை இந்தப்பிரகாரமாய்ப் பிரமந் தேசகாலவஸ்துவாகிய மூன்றுவிதபரிச்சேதமும் அ ற்ற பூரணமெனவும்-அழகிளமை யாரோக்கியந் திட காத்திரஞ் சகலரையுஞ்செயிக்கும் பெலமுடையவனு ய்ச் சகலசாஸ்திரமும் வல்லவனுய்ச் சகலராலும் வாழ்த்தப்பட்டவனுயிருந்து ஐம்பதுகோடி பூமண்ட லமும் ஓர் குடைக்கீழாள்பவனுக்கு மனுடானந்தம்- இதற்குமேல் மனுடகெந்தருவனுனந்தம்- பிதிர்த்தே வனுனந்தம் - பிறவித்தேவனுனந்தம் - கருமதேவ னுனந்தம்- தேவானந்தம்- இந்திரானந்தம்-பிரகஸ்பதி ஆனந்தம் -விராட்புருடனுனந்தம் - இரணியகருப்பனு னந்தம்-ஆகிய இவைகளொன்றுக்கொன்று நூறுபங்கு

அதிகமாயின வதிசயமுடையதாய் அளவுபட்டதாய் அனித்தியமாய் அனர்த்தமாய் அன்னியமாய்ப் பங்கிட்டனுபவிக்கிறதாயிருக்கையாற் பிரமானந்தசாகரத்துக் கோரிவலையாகுமெனவுங்கொள்க.

(இ-ம்) தனித்தேகக்கிர மாயனுஷ்டியா விடிலிதனாற் பயனுண்டாகாதென்பதாம். (கூ)

(அவதாரிகை)

தசகாரியநாமங்கூறல்.

கவி.

பழமறையினந்தமகவாக்கியங்களுன்கதனுற்பத்திபேதங், குழைவுதருமகிமையதன்பிரகாச மஞ்ஞானக்குடும்பநீக்கந், தழையுமதற்கவதியதினிண்ணயம்பெற்றோர்கதைசாதகர்தியானம், பிழையிலதனுரையிவையீரைந்துமுண்மையிதனடைவேபேசலுற்றும்.

(இ-ள்) பழமறையின்-அனுதியான இருக்காதி நான்குவேதங்களின் அந்தம்-முடிவாகிய ஞானகாண்டத்திலுள்ள - மகாவாக்கியங்களுன்கதனுற்பத்தி, நான்கு மகாவாக்கியங்களினுற்பத்தியும் பேதம்-வாக்

யபேதமும் குறைவுதருமகிமை-சித்தத்தைக்கரைக் கப்பட்ட வாக்கியமகிமையும் அதன் பிரகாசம்- அவ் வாக்கியப் பிரகாசமும் அஞ்ஞானக்குடும்ப நீக்கம் - வாக்கியத்தா லஞ்ஞானத் துக்கபேதமாகிய சதுசார நிவர்த்தியும் தழையும்-மேலான அதற்கு-அவ்வாக்கி யத்துக்கு அவதி-அவதியும் அதினிண்ணயம்-அவ்வா க்கியத்தினுடைய நிண்ணயமும் பெற்றோர்கதை வாக் கியத்தினு லடைந்தவர்களினது கதையும் சாதகர் அப்பியாசிகளின் தியானம் - வாக்கியத் தியானமும் பிழையிலதனுணர -குற்றமற்றவாக்கியவுரையும்-இவை ஈரைந்து-ஆகியவிந்தப் பத்துக்காரியமும் உண்மை- அவ்வாக்கியங்களின் எதார்த்தலட்சணங்களாம் இத னடைவே-இக்கிரமப்படியே பேசலுற்றும் -கூறுகின் றோம்-எ-று.

(ப-ம்) ஆகமாதிகள்போலவுற்பத்தியின்றி மீமாம் சையார் நிச்சயப்படி அநாதியானவேதமென்பார்பழ மறையெனவும் - வாக்கியங்கள் கேட்டமாத்திரத்திற் சித்தத்தைக்கரைத்துப் பிரமானந்தங்கொடுக்கப்பட்ட தென்பார் குறைவுதருமெனவும் - மற்றவாக்கியங் களுக்கு மேலானதென்பார் - தழையுமெனவும் - சித் தாந்த வாக்கியமென்பார்-பிழையிலதெனவுங்கூறினார்.

(இ-ம்) தசகாரியங்களைக் கூறத்தொடங்கினதாம்.

பாயிரம்-முற்றிற்று. (எ)

நூல்.

(அவதாரிகை.)

வாக்கியவுற்பத்தி கூறல்.

கவி.

முந்தியவேதோற்பத்தி பிரக்ஞானம் பிரமமென மொழியும் வாக்கியஞ், சிந்தைசெயுமிரண்டிலகம் பிரமாஸ்மியெனும் வாக்கியஞ் செப்புமூன்றில், தந்தொமசியெனும் வாக்கியகாலாவதயமான்மாப் பிரமமென்ன, வந்தவிந்த வாக்கியந்தானதர்வணத்திலுற்பத்தி வகுத்தவாறே.

(இ-ள்) முந்தியவேதம் முதலாவது இருக்குவேதத்தைத்திரியவுவநிடதத்தில் பிரக்ஞானம் பிரமமென பிரக்ஞானம் பிரமமென்று மொழியும் வாக்கியம் சொல்லும் லட்சணவாக்கியத்தின் - உற்பத்தி உற்பத்திகூறப்பட்டிருக்கின்றது இரண்டில் - இரண்டாவதான எசுர்வேதத்தைத் திரிய வுபனிடதத்தில் அகம் பிரமஸ்மியெனும்-அகம்பிரமாஸ்மியென்றுசொல்லும் - சிந்தைசெயும் வாக்கியம் சிட்டனறியாணிக்கின்ற வாக்கியத்தி னுற்பத்திசொல்லப்பட்டிருக்கின்றது மூன்றில் மூன்றுவதான சாமவேதச் சாந்தோக்கிய

வுபநிடதத்தில், தத்தொமசியெனும் - தத்தொமசியெ ன்று சொல்லும், செப்பும் வாக்கியம்- ஆசிரியருபதே சிக்கின்ற வாக்கியத்தினுற்பத்தி சொல்லப்பட்டிருக் கின்றது நாலாவது - நான்காவதான அதர்வணத்தில் அதர்வணவேதத்துமாண்டூக்கிய வுபநிடதத்தில், அயமாத்மாப் பிரமமென்றவந்த அயமாத்மாப் பிரம மென்று சொல்லும் இந்த வாக்கியம் - இச்சாட்சாத் காரவாக்கியத்தி னுற்பத்திசொல்லப்பட்டிருக்கின்றது உற்பத்திவகுத்தவாறு வாக்கியங்களினுற்பத்தி சொல் லப்பட்டிருக்கின்ற திவ்விதமாம் எ-று தான் ஏ-அசை கள்.

(இ-ம்) வாக்கியத்தை நம்பி யனுஷ்டிக்கும்படி சகலருக்கும் பிரமாணமா யுள்ளவேதத்தினுபநிடதத் திலுற்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றதென்று அறிவி த்ததாம். (அ)

(அவதாரிகை)

மகாவாக்கியம் நான்காய்ப்பதப்பட்ட திவ்விதத் திறனெனக்கூறல்.

(கலி.)

பேதமென்பதாசானுஞ்சீடனுமுத்தரஞானம் பிரபமென்று, ரியாததுவே தென்றுரைத்தா னகமென்றுமெந்தவகமென்றுன்சீடன், மாதவநின்றேகமகஞ் சொரூபமகமிரண்டுமலமற்றுமென்று, ரேதுவிலையிரண்டுபட்ட தென்றுனெல்லாம் பிரமமென்று னெங்கோன்.

(இ-ள்) பேதமென்பது - வாக்கியங்களின் பேதமென்றுசொல்லப்படுவது, ஆசானும் - குருவும் சீடனும்-மாணுக்கனும், உத்தரக்கூறிய-உத்தரப்பிரிதியுத்தரங்களிஞலுண்டாயிற்று எங்ஙனமெனில் - ஞானம்பிரமபென்றார் அத்துவித பிரமமென்றார் - அத்துவிதபிரமசொரூபத்தை யறிந்தார் சமுசாரதுன்பமகலுமென்றுணர்ந்து ஓராசிரியரையடுத்த சீடனுக்கறிவேபிரமமென்பதாக அவ்வாசிரியருபதேசஞ் செய்தார் யாததுவேதென்றுரைத்தான் அவ்வறிவுயாதென் றச்சீடன் விஞவினன் அகமென்றார் நானென்று விளங்குகின்றதே அதுவென்றாசிரிய ருபதேசித்தார் சீடன்-மாணுக்கனவன், எந்தவகமென்றுன் நான் பருத்தேன் நான்பசியாயிருக்கின்றேன் - நான் பேசினேன் நான் கேட்டேன் நான் சங்கற்பித்தேன் நான் நிச்சயித்தேன் நான் பிரியப்பட்டேன் நான் அறிந்தேன்

என்று விளங்குகின்றதே இவற்றுள் எந்த நானென
வினவினன், யாதவ மதத்தாகிய தவமுடைய சீடனே
நின்றேகமகம் உனது சரீராதிகளை நானென்கின்றதும்
சொரூபமகம் - அந்தரியாமிவரை நானென்கின்றதும்-
இரண்டுமல- ஆகியவ்விருவகையுமல்ல மற்றுமென்றுர்
இவைகளுக்கு வேறுனது அவவறிவாகுமென வாசிரி
ய ரனுக்கிரகித்தார் ஏதுவினல் சுவாமிகளிங்ஙனங்
கூறியமூலமாய் இரண்டுபட்டதென்றுன் - துவிதமாய்
ப்போயிற்றேயென்று, அச்சீடன் விண்ணப்பஞ்செய்
தான், எங்கோன் எமதிறைவனுகிய வாசிரியர் - எல்
லாம் யாவையும் பிரமமென்றுன்- பிரமசொரூபமே
யென்று அருளிச்செய்தார் - எ - று அது வென்பது
பகுதிப்பொருள் விகுதி.

(ப-ம்) பஞ்சேந்திரிய வழியாய்ப் பஞ்ச விடயங்
களையறிகின்ற அறிவே பரிபூரணமான பிரம சொரூப
மென்றுரென்பார் - ஞானம்பிரமமென்றுரெனவும்-அ
வஸ்தாத்திரயத்தின் அன்னுவயவிதிரேகங்களைக் கா
ணுஞ் சாட்சியாய் விளங்குகின்ற கூடஸ்தரென்று
ரென்பார், அகமென்றுரெனவும் சிரவணுதிசத்துவ
தவ முடையவனே யென்றுரென்பார் - மாதவவெனவும்
தூலதேகமுதலொன்பது வாச்சியத்துக்கும் அந்
தரியாமிவரை யொன்பதும் வாச்சியத்துக்கும் விலட்ச
ணமான வறிவாகிய பிரமமென்றுரென்பார்- நின்றேக

மகஞ் சொரூபமகமிரண்டு மலமற்றுமென்றுமெனவும்: பொன்னிலுண்டான கடகமாதியும் மண்ணிலுண்டான கடமாதியும் கடலிலுண்டான அலையாதியும் இரும்பிலுண்டான ஈட்டியாதியும் பொன்-மண்-கடல்-இரும்பைவிட வேறல்லாததுபோலப் பிரமத்தினிடத்தில் அத்தியாசமான வாச்சியங்களாகிய சீவேஸ்வர ஜகத்தனைத்துப் பிரமத்தைவிட வேறல்லவென்றுமென்பார் எல்லாம் பிரமமென்றுமெனவுங் கூறினார்.

(வி-ம்) சீடன் - துவம்பதத்திலெலந்தவகமென்று கேட்க ஆசிரியர் அதற்குத் தானுத்தரங் கூறியபின் அவன் தத்பதத்திற் கேட்கும்படி யிடம்வையாமல் நின்றேகமகஞ் சொரூபமகமிரண்டு மலவென்றதையுஞ் சேர்த்து உத்தரங்கூறினாரென்றறிக.

(இ-ம்) மோட்சமடைவதற்குச் சகலத்தையுந் திருக்குதிரிசியமாய் வேறுபடுத்திக்கண்டு அத்திரிசிய முந் திருக்கைவிட வேறல்லவென் றறியவேண்டுமென்பதாம். (கூ)

(அவதாரிகை.)

வாக்கியமகிமை கூறல்.

(கவி)

முக்கியமாகிமைசொல்லின் முதன்மொழிக்காகா மியம்போ முடிவுகாணத், தக்கவிரண்டாமொழிபாற் சீவாத்மாப்பிரமமதாய்த் தாளுய்நிற்கு, மிக்கருமப் படிமூன்ரும் வாக்கியத்தாலென்னதிபா னென்றனிங் கு, நெக்குருகிநாலாம் வாக்கியத்தாற் சஞ்சிதவினையு நீங்குந்தானே.

(இ-ள்) முக்கியமாம்- மேன்மையான, மகிமை- வாக்கியங்களின் பெருமையை, சொல்லின்-கூறுமிடத் து, முதன் மொழிக்கு- முதல்வாக்கிய சிரவணவப்பி யாசத்தினுல், ஆகாமியம் - புண்ணியபாவம், போம்- நீங்கும், முடிவுகாணத்தக்க- ஆத்மசாட்சாத்காரமறி யத்தகுந்த, இரண்டாமொழியால்-இரண்டாம்வாக்கிய மனனத்தினுல், சீவாத்மா-கூடஸ்தரே, பிரமமதாய்- பிரமசொரூபமாய், தாளுய்- பிரமசொரூபமேகூடஸ் தராய், நிற்கும்-இருக்கின்ற அத்துவிதானுபவமுண் டாகும்,இக்கருமப்படி-இந்தச்சிரவணமனன அப்பியா சத்தால் நிச்சயித்த பிரகாரம், மூன்ரும்வாக்கியத்

தால்-மூன்றும்வாக்கிய நிதித்தியாசனுப்பியாசத்தால், என்ன தியானென்றல்-தேகேந்திரியாதிகளே யானென்பதும் செகத்தை யெனதென்பதும், நீங்கும்-ஒழியும் நாலாம வாக்கியததால்-நான்காம் வாக்கியசக்சவப்பியாசத்தால், சஞ்சிதவினையும்-கட்டுப்பட்ட புண்ணிய பாவவினையும், நெக்குருகி-கெட்டு, நீங்கும்-அகன்று போம்-எ-று

(ப-ம்) அனித்தியமாகாத மகிமையென்பார் - முக்கியமாமகிமையெனவும் - கடத்தின் விகாரமதைக்காண்கின்ற கண்ணுக்கில்லாததுபோல இருபத் தெட்டுத் தத்துவங்களின் றொழிலாகிய புண்ணியபாவம் அவைகளை அறிகின்ற அறிவுக்கின்றெனத் தெரியவருவதுந் தவிபக குதிரைச்சவாரியினுற் பிராமணனைக்கொன்ற வொருபெரியவருக்குப் பாவநீங்கியதுபோல் முதல் வாக்கிய சிரவணுப்பியாசஞ் செய்வோருக்குப் புண்ணிய பாவத்தொடர்பிலொது நீங்குமென்பார் முதன்மொழிக் காகாமியம் போமெனவும் - வியட்டி அறிவாகியதானே பிரமாதிஸ்தம்பவரையிலுள்ள அறிவென்று ஏகாத்யாவாய் சீவாத்துவிதஞ் சித்திக்குமென்பார் சீவாத்மாப் பிரமமதாய்த் தானுய் நிற்குமெனவும் கானற்சலமபோலத் தேகாதிசெகத்துப் பொய்யாகிப்போய் பரிபூரணப்பிரமமேதானு மென்பார்- என்ன தியானென்றல் நீங்குமெனவும் அங்ங

னம் பரிபூரணமான பிரமத்தைவிட சஞ்சிதமென அற்பமும் வேறொருவஸ்துவில்லாமற் போய்விடுமென்பார் சஞ்சிதவினையு நீங்குந்தானே யெனவுங் கூறினார்.

(வி-ம்) குதிரைச்சவாறியினாற் பிராமணனைக் கொன்றவருக்கு அப்பாவ நீங்கியவிவரமாவது - ஒரு பெரியவரெப்போதும் நாம் அகாத்தா அசங்கன் அசங்சாரி-அபோக்தா அறிவு சொரூப மென்றனுசந்தானம் பண்ணிக்கொண்டிருக்கிற வழக்கப்படியே ஒருநாள் அவ்வனுசந்தானத்துடன் குதிரைச்சவாரி செய்யும்போது ஒரு பிராமணன் அக்குதிரைக்காலில் கப்பட்டிறந்து போனதால் அப்பிரமகத்தியானது திரிலோகாதிபதியான தேவேந்திரனைப் பிடித்து வருத்த அவனிதன் மூலமறிந்து அப்பெரியவரிடத்திற் பிராமணன் போலவந்து தெரியாமற் பிரமகத்திசெய்தீரே யெனக்கூற அப்படியாவென்றனு சந்தானம்விட்டுக் கேட்கவே அப்பிரமகத்தி அவரைப் பற்றினதைக் கண்டு தேவேந்திரன் அகல அவர் நமக்கேதிதுவென அனுசந்தானத்தைச் செய்தவுடன் அப்பிரமகத்தி மறுபடி தேவேந்திரனைப் பிடித்து வருத்த அவனதற்கேற்ற கருமஞ்செய்ததில் நிவாரணம் பெற்றானென்னவும்-முதல் வாக்கிய அப்பியாசத்தால் ஏகாத்ம சித்தியால் - யானென்னதுநீக்கம் - சஞ்சிதநீக்கம் வாராதோ

வெனில் ஆசிரியர் போதித்தமட்டுக்கும் சிரவணத்தால் இருபத்தொன்பது தத்துவங்களில் அதன் தன்மையை மாத்திரமறிவதேதவிர தானுத்மா வென்பதும் தேகாதிபொய்யென்பதும் எல்லாந் தானென்பதும் தெரியாதாகையால் வாராதெனவும்-இரண்டாம் வாக்கியாப்பியாசத்தால், யானென்பதுநீக்கம், சஞ்சிதநீக்கம் வாராதோவெனில் - ஆசிரியர்போதித்த மட்டுக்கு மனனத்தால்தேகாதி ஜகத்துக்கு விலட்சணமான பூரணுத்மா தானெனத் தெரிவதுமாத்திரமே தவிர ஜகத்துக்குப் பொய்யாயும் எல்லாந்தானுயுந் தெரியாதாதலால், வாராதெனவும் மூன்ரும்வாக்கிய வப்பியாசத்தால் சஞ்சிதநீக்கம் வாராதோவெனில் ஆசிரியர் போதித்தமட்டுக்கும் நிதித்தியா சனத்தல் பரிபூரணமான தனக்கு விலட்சணமான ஜகத்துப்பொய் யென்று மாத்திரந்தெரிவதேதவிர அவையுந் தானுகப் போகாததால் வாராதெனவும்- முந்தினவாக்கிய வப்பியாசத்தினுலேயே சித்திக்கத்தக்கதைப் பிந்தினவாக்கிய வப்பியாசத்தாற் சித்திக்காதாவெனக் கேட்கவேண்டுவதின்று.

(இ-ம்) இவ்வாக்கிய நான்கையும் அனுட்டித்தஞற் பிரமசாட்சாத்காரமுண்டானபோதிலும் பிராரத்தவினையை யனுபவிக்கவேண்டுமென்பதாம். (௪)

(அவதாரிகை)

இன்னவாக்கியத்தா லின்னது பிரகாசிக்குமெனக் கூறல்.

கவி.

தூயபிரகாசந்தான் முந்தியவாக்கியமதனாற்றுலங் குஞ்சத்தே. யாயவிரண்டாமொருபாற்சித்துத்தான் பிரகாசமாகுமூன்றி, லேயதொருவானந்தம் பிரகாச நாலாம் வாக்கியத்தாலெண்ணி, னேயபரிபூரணந்தான் பிரகாசமெனமறைகணிகழ்த்துமாறே.

(இ-ள்) தூயபிரகாசம்- வரிசுத்தமான வாக்கியப் பிரகாசத்தைச் சொல்லுமிடத்து-முந்தியவாக்கியமதனால்- இலட்சணவாக்கியமாகிய முதலாவதுவாக்கியாப்பியாசத்தினால், சத்தே - ஆத்மாவின் சத்து லட்சண மாத்திரம், துலங்கும்- பிரகாசிக்கும், என- எனவும், ஆயவிரண்டாமொழியால் - அனுபவவாக்கியமாகிய இரண்டாவது வாக்கிய வப்பியாசத்தினால் சித்துத்தான்- ஆத்மாவின் சித்துலட்சணமாத்திரம் பிரகாசம்- விளங்குமெனவும், ஆகுமூன்றில் - உபதேச வாக்கியமாகிய மூன்றாவது வாக்கியவப்பியாசத்தினால், ஏய்தொருவானந்தம்- பொருந்தாநின்ற ஒப்பற்ற ஆத்மாவினானந்த லட்சணமாத்திரம், பிரகாசம்-துலங்குமெனவும், எண்

ணின் - விசாரிக்குமிடத்தில், நாலாம்வாக்கியத்தால் - சாட்சாத்கார வாக்கியமாகிய நான்காவது வாக்கியவப்பியாசத்தினால், நேய-பிரியமான, பரிபூரணந்தான்- ஆத்மாவின் பரிபூரண லட்சணமாத்திரம், பிரகாசம்- விளங்குமெனவும், மறைகள் - இருக்காதிவேதங்கள், நிகழ்த்துமாறு-கூறுகின்றவிதமாம்-எ-று,

(ப-ம்) விகாரமற்ற பிரகாசமென்பார் தூயபிரகாசமெனவும்-தேகாதி அனாத்மாதானென்றும்- ஆத்மாவில்லையென்று மிருந்தவனுக்குச் சிரவண வப்பியாசத்தினால் ஆத்மாவுண்டென விளங்குமென்பார் துலங்குஞ் சத்தேயெனவும்-மனனவப்பியாசத்தாற் சமட்டி வியட்டி சரீரத்திரயமும் விலட்சணமாயவைகட்கு வேறான சாட்சிதானென விளங்குமென்பார்- சித்துத்தான் பிரகாசமெனவும்-நிதித்தியாசவப்பியாசத்தாற் கனவு கானற்சலம் போலப்பிரபஞ்சம் பொய்யாய்ப் போய் நன்மை தீமை சுட்டுதலற்றதால் மனுடானந்த முதவிரணிய கருப்பானந்தவரை பதினொருவகையானந்தத்துக்கு மேலாகிய பிரமானந்தம் விளங்குமென்பார் ஏயதொருவானந்தம் பிரகாசமெனவும் சகசவப்பியாசத்தாற் கானலானது சூரியன்மாத்திரமாய் லட்சியமற்றதுபோல மூன்று பரிச்சேதரகிதமாகிய வகண்டசொரூபம் விளங்குமென்பார் பரிபூரணந்தான் பிரகாசமெனவுங் கூறினார்.

(வி-ம்) முதலாவது வாக்கிய வப்பியாசத்தால் சித்து ஆனந்தம் - பரிபூரணம் விளங்காதோவெனில் ஆசிரியர்போதித்த மட்டுக்குஞ் சிரவணத்தா லாத்மா பரோட்சமாக மாத்திரம் விளங்குகின்றதே தவிர அபரோட்சமாக விளங்காததால் சித்து ஆனந்தம் பரிபூரணம் விளங்காதெனவும் - இரண்டாம்வாக்கிய வப்பியாசத்தால் - சித்து ஆனந்தம் - பரிபூரணம் விளங்காதோவெனில் - ஆசிரியர் போதித்தமட்டுக்கு மனனத்தாலாத்மா பிரத்தியட்சமாய் விளங்குகின்றதால் உண்டெனப்ப ரோட்சமாகச் சித்து விளங்காது அபரோட்சமானாலுஞ் சத்தியமான ஜகவிலட்சணமாக மாத்திரம் விளங்குகின்றதா லானந்தமும் பரிபூரணமும் விளங்காதெனவும் முன்றாவது வாக்கிய வப்பியாசத்தால் சத்துசித்து பரிபூரணம் விளங்காதோவெனில் ஆசிரியர் போதித்தமட்டுக்கும் நிதித்தியாசனத்தால் ஆத்மா வபரோட்சமாய் விலட்சணமான ஜகத்துப் பொய்யாய்ப் போயானந்தம் விளங்குகின்றதால் உண்டெனப் பரோட்சமாய்ச் சத்துஞ் சத்தியமான ஜகவிலட்சணமாகச் சித்தும் விளங்காது ஆனாலும் பிரவஞ்சம பொய்யாய்மாத்திரம் விளங்குகின்றதால் சொப்பன விடயம் பொய்யானாலும் நேதியெனப் பேசுகின்றதுபோல் விபரீதமுந் துன்பமு நீக்கினாலும் விட்சேபந் தோற்றலாற் பரிபூரணம் விளங்காதெனவும் நான்காவதுவாக்கிய வப்பியாசத்தாற் சத்துசித்து

ஆனந்தம் விளங்காதோவெனில் ஆசிரியர்போதித்த படி சகசாப்பியாசத்தால் ஆத்மா வபரோட்சமாய் விலட்சணமான செகத்துப்பொய்யாய்ப் போனதுஞ் சொப்பனவிடயந்தானுய்ப் போனதுபோலத் தானுய்ப் பரிபூரணம் விளங்குகின்றதால் உண்டெனப் பரோட் சமாகச் சத்துஞ் சத்தியமான சகவிலட்சணமாகச் சித்தும் விலட்சணஜகம் பொய்யாக ஆனந்தமும் விள ங்காதெனவு மறிக - எனவென்பதைக் கடைநிலைத் தீபகமாக நான்கோடுங்கூட்டுக.

(இ-ம்) மோட்சவிருப்ப முடையோருக்கு அப் பியாசக்கிரமங்கூறி அவ்வப்பியாசத்தினுல் சத்தியக் கியானவனந்தானந்த வஸ்துத்தானுக விளங்குமெனக் கூறியதாம். (௫க)

(அவதாரிகை)

வாக்கியத்தாலஞ்ஞான நிவர்த்திகூறல்.

கவி.

மலமாகுமஞ்ஞான நிவர்த்திசொலுமிடத்து முத ல் வாக்கியத்தாற், கிலமாகுமாவரணமிரண்டாம் வாக் கியத்தால்விட்சேபம்போகு, நலமாகா வவித்தையொ டு மாயையும்போமூன்றிலப்பாலுலாஞ்சொல்லா, லுல கான நாமரூபங்கள்போமெனப் பெரியோருரைப்பர் தாமே.

(இ-ள்) மலமர்கும் - களங்கமாகின்ற அஞ்ஞான நிவர்த்தி - வாக்கியத்தாலஞ்ஞான நிவர்த்தியை சொலுமிடத்து-விளம்புமிடத்தில் - முதல் வாக்கியத்தால் முதலாவது வாக்கிய வப்பியாசத்தால், ஆவரணம் மறைப்பானது, இலமாகும் - நாசமாகும், என எனுவும் - இரண்டாம்வாக்கியத்தால்- இரண்டாவது வாக்கியவப்பியாசத்தினுல், விட்சேபம் - பேதத்தோற்றமானதுபோகும் - நீங்குமெனவும் - மூன்றில் - மூன்ருவதுவாக்கிய வப்பியாசத்தினுல் - நலமாகா வவித்தையொடு - நன்கல்லாத வறியாமையுடன் மாயையும் - அவித்தையும்போம்- ஒழியுமெனவும் அப்பால் அதன்பின்பு நாலாஞ்சொல்லால் - நான்காம் வாக்கிய வப்பியாசத்தினுல் உலகான - பிரபஞ்சமாகிய நாமரூபங்கள் - பெயருருவமான கிரிசியங்கள் போம் - அகலுமெனவும் பெரியோர் - மகான்கள் உரைப்பர் கூறுவார்கள் எ-று.

(ப-ம்) ஆத்மசொரூபத்தை மறைத்துத் துன்பந் தருவதென்பார் மலமாகுமெனவும் - திரைநீங்கி லந்த மறைவி லிருந்தவர்களுடைய பகுப்புத் தெரிதல்போல - இருபத்தொன்பது தத்துவங்களின் பேதந் தெரியாதமறைப்பு நீங்கி யதனதன்றன்மைகள் தெரியவருமென்பார் - இலமாகுமாவரணமெனவும் - ஓடத்திலிரு

ப்பவனுக்குக் கரையினிற்கின்ற விருட்ச மோடுவ தாய் மாறுபாடாய்த்தோற்றல் நீங்கல்போலத்தேகந் தானெனத் தோற்றினும் பரிபூரணமாகியசொரூபமே நானென்கின்ற மனனத்தாற்றேகம் நானென்கின்றபுத் திபோமென்பார் விட்சேபம் போகுமெனவும் தேகத் தைச் சத்தியமாகப்பண்ணி எழுவகைப் பிறவித்துன் பங்கொடுக்குமென்பார்-நலமாகாவெனவும் தேகாதிப் பிரவஞ்சஞ் சத்தியம்போலத் தோற்றுவிப்பது நீங்கிக் கானற்சலம்போலப் பொய்யாய்ப் போமென்பார் அவி த்தையொடுமாயையும் போமெனவும் - மூலாஞ் ஞா னங்கெடுமென்பார் - உலகான நாமரூபங்கள் போமெ னவுங் கூறினர்.

(வி-ம்) முதலாவது வாக்கியவப்பியாசத்தால் விட் சேபநீக்கமும் அவித்தைமாயைநீக்கமும் மூலப்பிர கிருதி நீக்கமு முண்டாகாதோ வெனில் - ஆசிரியர் போதித்தமட்டுக்குஞ்சிரவண வப்பியாசத்தால் இரு பத்தொன்பது தத்துவங்களில் அதனதன்றன்மையை மாத்திரம் தெரிகின்றதே தவிரத் தான்பூரண வாத்மா வென்பதுந் தேகாதிசெகத்துப்பொய் யென்பதுமெல் லாந்தானென்பதும் தெரியாதாகையால்இரையை நீக் கவே அதை நீக்குமுன் அதற்கப்பாலிருப்பவராரோ வென்றிருந்த மயக்கப்பட்டு நீங்குமேதவிர உற்றுப் பார்த்தபின் அவரின்றொன்று தெரியவருகின்றதும்

யோசித்ததின்பேரில் பகையாளியல்லவென்றுதெரியவ ருகின்றதும் சொந்தமென்றறிந்ததின்பேரிலவர்களின் நினைப்பற்றுப்போகின்றது அத்திரைநீக்கமாத்திரத்தி லுண்டாகாததுபோல் ஆவரண நீங்குமேதவிர மனன வப்பியாசத்தலுண்டாகின்ற அவித்தைமாயை நீக்கமு ம் சகலவப்பியாசத்தா லுண்டாகின்ற மூலப்பிரகிருதி நீக்கமும் உண்டாகாதெனவும் இரண்டாவதுவாக்கிய வப்பியாசத்தால் அவித்தைமாயை நீக்கமும் மூலப்பிர கிருதி நீக்கமுமுண்டாகாதோவெனில் ஆசிரியர்போதி த்தமட்டுக்கும் மனனவப்பியாசத்தால் பூரணவர்த்மா வாகிய தனக்குத் தேகாதிஜகத்துவிலட்சண மென்று மாத்திரந்தெரிகின்றதே தவிர அவை பொய்யென் பதும் எல்லாந் தானென்பதும் தெரியாதாகையால் முற்கூறிய திட்டாந்தம்போல விட்சேப நீங்குமே தவிர நிதித்தியாசன சாட்சாத்கார வப்பியாசத்தாற் சித்திக்கின்ற அவித்தைமாயை நீக்கமும் - மூலப் பிரகிருதி நீக்கமுமுண்டாகாதெனவும் - மூன்றுவது வாக்கியவப்பியாசத்தால் மூலப்பிரகிருதி நீக்கமுண் டாகாதோவெனில் ஆசிரியர் போதித்த பட்டுக்கும் நிதித்தியாசன வப்பியாசத்தாற் சத்தியமாய்ப் பரிபூர ணமான தன்னிடத்திற் கற்பிதமான தேகாதிஜகத்து மித்தையென்று மாத்திரந் தெரிகின்றதே தவிர அவையெல்லாந்தானெனத் தெரியாதாகையால் முற் கூறிய திட்டாந்தம்போல அவித்தைமாயை நீங்குமே

தவிரச் சாட்சாத்கார வப்பியாசத்தால் சித்திக்கின்ற மூலப்பிரகிருதி நீக்கமுண்டாகாதெனவும் - முந்தின வாக்கிய வப்பியாசத்தினுலேயே சித்திக்கத்தக்கதைப் பிந்தினவாக்கிய வப்பியாசத்தினுலே சித்திக்காதா வெனக் கேட்கவேண்டுவதில்லை யெனவறிக தாம்-எ- அசைகள்.

(இ-ம்) இந்நான்கு வாக்கிய விசாரணையினுலே மூலப்பிரகிருதியும் அதன்காரியமான ஆவரணுதி நான்கும் நீங்குங் கிரமத்தைக் கூறியதாம். (௫௨)

(அவதாரிகை)

வாக்கியவப்பியாசத்துக்கவதிகூறல்.

கவி.

அவதிமுதல் வாக்கியத்துக்கவத்தையொரு மூன் றுமறிந்தப்பானிற்றல், புவனவாதனைவரினு மிரண் டாற் போக்கிக் கூத்தபோற்றுறுதல், கவலையின்றி மூன்றும் வாக்கியத்தா லானந்தமெலாங் கரைகண் டோங்கல், தவநெறியானுன்கிலெல்லாம் பிரமமென் றேயுற்றிருக்குந் தன்மைதாமே.

(இ-ள்) முதல் வாக்கியத்துக்கு-முந்தினவாக்கிய வப்பியாசத்திற்கு - அவத்தைபொருமூன்றும் - சாக்கிராதியவஸ்தாத்திரயத்தையும்- அறிந்து- தெரிந்து அப்பானிற்றல்- வேறாயிருக்கின்றது அவதி- அவதியாம் இரண்டாம் - இரண்டாம்வாக்கிய வப்பியாசத்திற்கு புவனவாதனைவரினும் - பிரபஞ்ச வாசனையுண்டானபோதிலும் போக்கி- நீக்கி கூத்தர்போல- வேஷதாரியைப்போல தானுதல்- ஜகத்துக்கு வேறாகிய சர்வசாட்சிதானுகின்றதே அவதியாம் மூன்றாம் வாக்கியத்தால்-மூன்றாம் வாக்கிய வப்பியாசத்திற்கு கவலையின்றி - துக்கமின்றி ஆனந்தமெலாம் மனுடானந்த முதலிய விடயானந்தமனைத்தையும் - கரைகண்டு - அளவிட்டு ஓங்கல்- மேலாகிய வானந்தமாயிருக்கின்றதவதியாம் நான்கில்-நாலாம்வாக்கிய வப்பியாசத்திற்கு தவநெறியால்-சத்துவதமாகிய சிரவணுதிமார்க்கப்படி எல்லாம்-மித்தையான தேகாதிஜகத்தனைத்தும்-பிரமமென்றே-பிரமசொரூபமென்பதாகவே உற்றிருக்கும் அமைந்திருக்கின்றதன்மைத்து - இயல்பையுடையது ஆம்- அவதியாம் எ-று.

(ப-ம்.) முதலாவது வாக்கியவப்பியாசத்துக்கு- அறிவையாதென விசாரிக்கத்தொடங்கிச் சரீரத்திரயத்துளதனதன் றன்மைகளைப் பகுத்தறிதல்-எது-அவைகளுற்பத்தி நாசமுள்ள தாயுந்தானு யறிதலின்றி

யொன்றைப்பற்றிய றிவதாயுமிருப்பதா லவைகளுக் கறிவுவேறெனவறிதல் - சொரூபம் - உற்பத்திநாச முள்ளதாயுந் தானாய்விளங்குவதன்றிச் சூரியனைப்பற் றி விளங்குகின்றதாயுமுள்ள சடத்துக்குச் சூரியன் வேறுபோலச் சரீரத்திரயத்துக்கும் அறிவு வேறு தானென்று இவ்விதயுத்திகளோடு நிச்சயஞ்செய்தல்- காரியம் இங்ஙனஞ்சரீரத்திரயத்துக்கு மறிவு வே றென நிச்சயஞ்செய்து அதிற்சமுசயம் வாராமல் நிலைத்திருக்கின்றது அவதியென்பாற அவதி முதல் வாக்கியத் துக்கவத்தையொருமூன்றுமறிந்தப்பாணிற் றலெனவும் - இரண்டாவது வாக்கிய வப்பியாசத்திற் குத் திரிசியத்தைவிட - திருக்குவேறென்னு மாறாத நிச்சயமே-வது- அந்தத்திருக்கோ நானென்னுமறிதல் -சொரூபம்-கடத்தின் மேற்றமாதியைக் கண்கண்டுகட த்தினாற் கண்காணப்படாதிருத்தல்போலத் திரிசியத் தினன்னுவய வெதிரேகங்களையறிந்து அவைகளால் நாமறியப்படாதிருக்கின்றதால நாம் அகண்டமான திருக்குத்தானென்று இவ்விதமான யுத்நகளோடு நிச்சயித்தல்-காரியம்-தானறிபவன் செய்பவன் புசிப் பவனோரிடத்திலிருப்பவனொருவர்கூட விருப்பவனாக த்தோற்றினாலும் பெண்வேடம் போட்டவனுக்கு வே டம் வேறெனவுந் தான்புருடனெனவும் நிச்சய மிருத் தல்போல் நாமறிபவன் செய்பவன் புசிப்பவன் ஓரிட த்திலிருப்பவன் ஒருவர்கூடவிருப்பவனல்ல நமக்குத்

தேகாதி செகத்துவேறு நாம் சர்வ சாட்சிதானென்
று சகசமாயிருக்கின்றது அவதியென்பார் - புவனவா
தனை வரினுமிரண்டாற்போக்கிக் கூத்தர்போற்றானத
லெனவும் - மூன்றாவது வாக்கிய வப்பியாசத்திற்குத்
திரிசியமான தேகாதிஜகத்து விலட்சணமாகிய அக
ண்டமான திருக்குநாமென்னுமாறாத நிச்சயமேவது-
சரீரத்திரயமுமித்தை யதற்கு விலட்சணமாகிய சாட்
சியாகின்ற நாமே சத்தியம்-நாமே மற்றெல்லாச் சரீர
த்திரயத்துக்கும் விலட்சணமாகிய சர்வசாட்சி அத்
தேகமெல்லா மித்தையெனவறிதல்-சொரூபம்-பொன்
னாதிமெய்-பூடணாதிபொய்போலச் சர்வசாட்சியாகிய
நம்மிடத்திற்றோன்றிய தேகாதிப் பிரபஞ்சமித்தை
நாமேசத்தியமென் றிவ்விதயுத்திகளோடு நிச்சயித்த
ல்-காரியம்-ஜகத்துமித்தையாகையால் மூவகைக்கிருத்
தியங்கள் - செய்யவேண்டுமென்னுந் துன்பமின்றிப்
பதினொருவகையானந்தம் புசிப்பவனும் நாமொருவ
னே யென்றறிந்து பிரமானந்தமயனாயிருக்கின்றது
அவதியென்பார்-கவலையின்றி மூன்றாம் வாக்கியத்தா
லானந்தமெலாம்கரைகண்டோங்கலெனவும் - நாலாவ
து வாக்கிய வப்பியாசத்துப் பிரமமேதானாயிருத்தல்-
ஏது-மித்தையானசகத்துந்தானே யென்றறிதல்-சொ
ரூபம் - பொய்ப்பானபூடணாதி பொன்னாதியேயாவது
போல மித்தையானசகத்துந்தானேயென்று இவ்வித
யுத்திகளோடு நிச்சயித்தல்காரியம்- சர்வமும் பிரம

மயமாய்ப்போனதாற் சுட்டற்று நிற்கின்றது அவதி யென்பார்- தவநெறியானுன்கிலெல்லாம் பிரமமென் றே யுற்றிருக்குந் தன்மைத்தாமெனவுங்கூறினர்.

(வி-ம்.) மூவகைக்கிருத்தியங்களாவன தாரித் திரியநோய் சத்துருவின் துன்பநீக்குகின்றதற் கேது வான உழவு தொழவு வரைவு வாணிடம் வித்தை சிற் பமாகிய இகலோக கிருத்தியமும் நரகதுன்பநீக்குகின் றதற் கேதுவான யாகதானதர்ம தவவிரத மந்திர செப முதலாகிய பரலோககிருத்தியமும் ஜனன மரண துன்பநீக்குகின்றதற்கேதுவான சிரவணமனன தியா னசமாதியாகிய மோட்சகிருத்தியமுமென்றறிக, அவ தியென்பதை அடி நிலைத்தீபகமாக நான்கிடத்துங் கூட்டுக.

(இ-ம்) சிற்சடம் வேறுய்வாசனுட்சயமாய் மனோ லயமாய் சாட்சாத்காரமுண்டாகுமென்பதாம். (௫௩)

வேறு.

(அவதாரிகை.)

வாக்கியநிண்ணயங் கூறல்.

வாக்கியத்தினிண்ணயங்கள் வகுக்கின் முதற்றரமாம் வாக்கியநாலாம் வாக்கியவல்லமையே தென்றாற், றாக்குமொழியந்து விதமாதலினா லிரண்டாந்தர மூன்றாம்வாக்கியம் மாந்தத்வ மசியெனலா, லாக்கிய மூன்றாந்தரமா மிரண்டாம் வாக்கியந்தானகமென்றே சீடனுரைக்கப் படிகாட்டுதலா, லேணாக்கியபறிபாவறிவே பிரமமென்றவதனா னுண்ணிய நாலாந்தரமா றவனு முதன்மொழியே.

(இ-ள்) வாக்கியத்தின் - வாக்கியங்களினுடைய நிண்ணயங்கள்-தாத்தினது நிச்சயங்களை - வகுக்கின் கூறுமிடத்தில் - வாக்கியநாலாம்-நான்காம் வாக்கியமானது - முதற்றரமாம்- முதலாவதுவகையாகும்-வாக்கியவல்லமையேயதென்றால் - அவ்வாக்கியத்துக் கங்கனமாகுந் திறமையாதெனில் - தாக்குமொழி-பொருந்திப அவ்வாக்கியமானது அத்துவிதமாதலினால் அனைத்துமொன்றானவனுபவங் கொடுக்கின்ற தாகையாலதுவே அத்திறமையாம் மூன்றாம் வாக்கியம் மூன்றா

வது வாக்கியமானது தத்வமசியென்லால் - பிரமநீயெ ன்று ஆசிரியருபதேசித்துப் பிரமமாக்கின்றதிஞல் இரண்டாந்தரம் - இரண்டாவது வகையாகும். இரண் டாம் வாக்கியமானதும் அகமென்றே சீடனுரைக்கு நான் பிரமமென்று சீடனனுபவஞ் சொல்லும்படி - அப்படிகாட்டுதலால் அவ்விதமேலட்சணமாய்த் தெரி வித்தலால் - ஆக்கிய மூன்ருந்தரமாம் வேருக்குகின்ற மூன்ருவது வகையாகும்- நுவலுமுதன்மொழி - சொ ல்லப்படுகின்ற முதல்வாக்கியமானது நோக்கியறியா வறிவே - பரோட்சமாயறிந்த பிரக்ஞானமே - பிரம மென்றவதஞல் பிரமசொரூப மென்கின்றதிஞல் - நுண்ணிய - கடையான - நாலாந்தரமாம் நான்காவது வகையாகும் எ-று.

(ப-ம்) பொய்யாய்த் தோன்றும் அலையாதிகடலே யாகின்றதுபோல மித்தையாய்த் தோன்றும் பிரகிரு திமுதலிய ஜகசீவபரங்களனைத்துஞ் சத்தியஞான வ னந்தானந்த சொரூபமானதன்னை விடவேறல்ல வென் று ஒன்ருகின்றவனுபவமென்பார் அத்துவிதமென்ருர்

(இ-ம்) அப்பியாசிக்கும்பொருட்டு வாக்கியங்க ளினுயர்வு தாழ்வு தெரியக்கூறியதாம். (௰௪)

(அலதாரிகை)

வாக்கியவுபதேசத்தினுல் மோட்சமடைந்தோர் களது கதைகூறல்.

கவி

கோதில்கதைமுதன் மொழியாற்குச் சரியநாட் டிற் கோவதைசெய்சக்கிலியன் குறைகடவிர்ந் தடைந்தா, னீதியிரண்டாமொழியாற் கெர்ப்பணியே குருவாய் நிசிசரன்றன்பவமகற்றி நேறமையில் வீடடைந்தான், சோதிசெய்மூன்றுமொழியா லஞ்ஞானச்சுதாற்றன் பறுவேடுவச்சிபரசுக மடைந்தாளிவையே, யோதிய நாலாமொழியா லந்தணன் செய்வினையாலுதவியிலரிப் புசிப்புதவியுயர்ந் தண்டயுங்கதையே.

(இ-ள்) கோதில்கதை - குற்றமற்றவாக்கிய கதையைக் கூறுமிடத்து-முதன்மொழியால் - முதலாவது வாக்கிய வனுக்கிரகத்தால் குச்சரிய நாட்டில்-குச்சவிதேசத்தில் கோவதைசெய் சக்கிலியன் - பசுக்கொலை செய்துவந்தவோர்சக்கிலியனுனவன்குறைகடவிர்ந்து- அக்கோகத்தி பாவமுதலிய மோட்சப்பிரதிபந்தமான குறைபாடுகணீங்கி-அடைந்தான்-விதேக முத்திபெற்றுன்-கெர்ப்பணியே- கருப்பந்தரித்த ஓர் ஸ்திரீயே-

நீதிருவாய்-நியாயமான சற்குருவா யனுக்கிரகித்த இரண்டாமொழியால்-இரண்டாம் வாக்கியத்தால் நிசிசரன்- ஒரிராக்கதன் தன்பவமகற்றி - தனது ஜனன மரணத்தை நீக்கி-நேர்மையில் வீடடைந்தான்- ஒப்பற்ற முத்திபெற்றான்-அஞ்ஞானச்சுதரால்-அஞ்ஞான முதலிய பிள்ளைகளால் துன்புறுவேடுவச்சி- துயர்மனமான வேடஸ்திரீ - சோதிசெய்மூன்றுமொழியால்- சுயப்பிரகாச மாகுகின்ற மூன்றும்வாக்கிய வனுக்கிரகப்பெற்றதால் பரசுகமடைந்தாள்-பேரின்பம்பெற்றாள் அந்தணன் செய்வினையால் ஒரு பிராமணனுனவ ரேவற்பணிசெய்து- உதவியிலாப் புசிப்புதவி- கொடுக்கக்கூடாதபோகத்தைக் கொடுத்து, ஓதியநாலாமொழியால்- அனுகிரகித்த நாலாம்வாக்கியத்தால் - உயர்ந்ததையும்- மோனமுத்திபெற்றார் இவையே - இவைகளே-கதை - வாக்கியத்தால் மோட்சம் பெற்றோர் சரித்திரங்களாம்.

(ப-ம்) தேகாத்மபுத்தியைக் கொடுக்கின்ற மூற்றைக்கதைகளுக்குள்ள குற்றமின்றிய கதைகளென்பார் கோதில்கதையென்றார்.

(வி-ம்) குச்சரியதேசத்திற் கதிபதியாகியதுலுக்கராஜன் அரண்மனைச் சமையலுக்காகத் தினந்தோறும் (நூ) பசு வதைசெய்துவந்த வோர் சக்கிலியானவன்

அவ்வரசன் ஒரு காலத்தில் வேட்டைக்குப்போன போது கூடப்போகச்சே ஓர் நதிக்கரையில் ஓர் மகாத்மா கோகத்தி புராணம் வாசித்து அதிற் பசுக்களை யிம்சைசெய்யக்கூடாதென்றும் பசுவானது பயிரைத் தின்றன் முதலிய தீங்குசெய்தாலப்போதும் வெட்டியைத் தோல்சீவி அதைக்கொண்டு தண்டித்து விலக்க வேண்டு மென்றும் அப்படியின்றி வேறுவிதமாய்த் தண்டித்து வொருரோமமாவது வுகிர்ந்தால், ரவுரவாதி நரகப்ராப்தி யுண்டாமென்றுஞ் சொன்னதை அந்தச்சக்கிலியன் பூருவசன்மத்துப் புண்ணிய பரிபாகத்தாற் கேட்டுத் தினமொன்றுக்கு - ௵ - பசுவாக அந்தப்பசுக்களைக் கொன்றிருப்பதாற்றான் செய்தபாவத்துக்களவில்லையென்றும் எந்தவிதத்தில் தீரப்போகுமென்றும் பயமடைந்து அந்த மகாத்மாவின் பாதத்தில் வணங்கித்தனது பாவகிருத்தியங்களெல்லாந் தெரிவித்து அப்பாவநீங்கி நற்கதியடையச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அந்த மகாத்மா இவ்வளவு அதிபாதகனைப்பார்க்கவுங்கூடாதென்று தமது கிரகத்துக்கெழுந்து போய்பின்வாசல் வழியாகச்சஞ்சரித்துக் கொண்டிருக்க அவரெழுந்துபோம் போதுபின்னாலே கூடச்சென்ற அந்தச்சக்கிலியனானவன் அவர் கிரகத்துக்கு முன்வாசலில் அவரதருளை நாடிக்கொண்டு அன்னாகாரமில்லாமல் நிற்க இவ்விதமோர் மண்டலஞ்சென்றபோது அம்மகாத்மாவின் பத்

தினியார் அச்சக்கிலியன் நிற்கின்றதை நோக்கி அவ னுக்கனுக்கிரகஞ்செய்யும்படி அவரிடத்தில் விண்ணப் பஞ்செய்ய அவர் இவன் அளவற்ற லோகத்திகாரனு னதாற் கூடாதென்று கூறினதற்கு அவ்வன்னையார் பரமாத்மாவாகிய தேவரீஸரயடைந்துப் இவனுக்கப் பாவம் நீங்காதிருக்கலாமா இன்னஞ் சிலநாழிகையில் அவனிறந்து போகின்றதாயிருப்பதாலும் பசுக்களைக் கொன்றதுந் தின்றதும் பாவமும் மற்றெல்லாமுஞ் சுவாமியாயிருப்பதாலும் அனுக்கிரகிக்க வேண்டுமெ ன்று விண்ணப்பஞ்செய்ய - அதின்பேரிற்சம்மதித்து அந்தமகாத்மா முதல் வாக்கியத்தை யனுக்கிரகம் பண்ண அதைக்கேட்டு அந்தச் சக்கிலியனனவன் லோகத்திப்பாவமும் நீங்கித்தத்துவஞானமும் பெற்று விதேகமுத்தியடைந்ததே முதல் வாக்கியகதையெ னவும்.

ஓரிராக்கதனனவன் வனத்தில் வருகின்ற ஜனங் களைப்பிடித்துப் புசித்துக்கொண்டிருக்குங் காலத்தில் ஓர்பிராமண கெர்ப்பஸ்திரீயானவள் அந்தவனத்தில் வர அவளைப்பிடித்துக்கொல்லத்துடங்கினபோது உன க்குப்பசிதீர வேண்டியதே பிரதானமாகையால் நீ யென்னைக்கொன்று புசித்ததின்பிறகு நானிப்போதுப தேசிக்கின்ற மந்திரத்தா லென்னையெழுப்பி விட்டு விடென்று வோர்மந்திரமுபதேசிக்க அவ்வரக்கனந்த

ப்படி அவளைக் கொன்றுதின்று அம்மந்திரத்தாலெ ழுப்பி அப்பால் நிதம் இரைக்காகவனத்தில் அலைய வேண்டுவதில்லையென்று அவளையே கொன்றுதின்று எழுப்பிவர அதனாலவள் மிகவுந்துன்புற்றுப் பிரமாவையுபாசிக்க அவர் பிரசன்னராய் சனனமரண துன்பம் நீங்கும்படியாயிரண்டாம் வாக்கியத்தை யனுக்கிரகிக்க அதை அவள் கேட்டுப் பிரமக்கியானம் பெற்றதுந்தவிர அவ்வரக்கனுக்கும் உபதேசிக்க அவனும் அதன் மூலமாய்த் தத்துவஞானம் பெற்று மோட்சமடைந்ததே யிரண்டாம் வாக்கியக்கதையெனவும்.

ஓர்வேடஸ்திரிக்கு அஞ்ஞானம் ஆவரணம் விட்சேபம் மாயையென்னும் நான்குபிள்ளைகள் பிறந்து அப்பிள்ளைகளான்மிகுந்த துன்பத்தை யடைந்து அதை நீக்கிக் கொள்ளும்பொருட்டு அப் பிள்ளைகளுடனே மகாத்மாக்களிருக்குமிடந்தேடிப்போ யோர்மகாத்மாவைக்கண்டு தன்றுன்பத்தைத் தெரிவித்து அந்தப் பிள்ளைகளை யொப்புவிக்கவே அந்தமகாத்மா அவளுக்கு மூன்றாம் வாக்கியமனுக்கிரகஞ்செய்ததால் அவள் தத்துவஞானம்பெற்று மோட்சமடைந்ததே மூன்றாம் வாக்கியக்கதையெனவும்.

முமுட்சுவான ஓர் பிராமணர் ஒருமகாத்மாவைக் குருவாயடைந்து உபதேசம்பெற்றுக்கொள்ளும் பொ

ருட்டுப் பணிவிடை செய்துக்கொண்டிருக்குங் காலத்தில் அந்தமகாத்மா ஒருநாள் தாகத்துக்குச் சலங்கொண்டு வரச்சொல்ல அச்சீடன் போயிருக்கும்போது அவர் பரிபூரண நிசை யடைகின்ற சமைய நேரிட்டதால் நாலாம்வாக்கியத்தை மணலிலெழுதிவைத்துப்போட்டுப் பரிபூரணமாய்விட்டார் அதைப்பார்த்திருந்த ஓர் கூத்தாடிச்சி அவ்வாக்கியத்தைத் தன் காதோலையிலெழுதிப்போட்டுக்கொண்டு இம்மணலி லெழுதியிருந்ததை யழித்துப்போட்டுப் போனபின்பு அந்தச்சீடரானவர் வந்து குரு பரிபூரணமாய் விட்டதையும் மணலிலெழுத்தழிப்பட்டிருந்ததையுங்கண்டு துக்கித்துப் பக்கத்திலின்றவர்களாற் றன்குருவெழுதின வாக்கியத்தைக் கூத்தாடிச்சி காதோலையி லெழுதிப் போட்டுக்கொண்டு போனதுதெரிந்து அக்கூத்தாடிச்சியிடத்திற்போய் அவள் அந்த வாக்கியத்தை மனோரம்மியமாய்க் கொடுக்கப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு அவளிட்ட பணிவிடையெல்லாஞ் செய்துக்கொண்டு வரும்போது அவள் காதில் அவ்வாக்கியமிருந்த மகிமையினால் அவள் பேர் பூமியிற் பிரசித்தமாகி யொருராஜாவிடத்திற்போய்க் கம்பநாட்டி யதிலேறி யாடும்போது அவளுக்குத் தாகமெடுத்துத் தண்ணீர் கேட்க அந்தப்பிராமணரான பணிவிடைக்காரர் ஒரு செம்பிற்சலங்கொண்டுபோய் உயரநீட்ட அவ்வாக்கிய மகிமையால் அக்கூத்தாடிச்சி கையிற்போய்ச்சேர்ந்த

தாலும் - அவள் தாகத்துக்குச்சாட்பிட்டு வுடனே செம்பைக் கீழேவிடவே அந்தப்பிராமணரது பணி விடைமகிமையால் அவர்கையில் வந்து சேர்ந்ததும் அந்தராசாவானவன்கண்டு அந்தப்பிராமணரை அழைத்து அந்தச்செம்பு வுபரப்போனதும் வந்ததும் யாதினலெனை வினவ அப்போது அந்தப்பிராமணர் தன் குருவெழுதின வாக்கியம் அவள் காதிலிருக்கின்ற மகிமையினலும் அவள் மனேரம்மியமா யதைகொடுக்கும்பொருட்டுத் தான்செய்து வருகின்ற பணிவிடையினலுமென்றுகூற அதைக்கேட்டு அந்தவரசன் அக்கூத்தாடிச்சியை வரவழைத்து அவளுக்கு வேண்டிய திரவியத்தைக்கொடுத்து அவள் மனேரம்மியமாய் அந்தக் காதோலையை அப்பிராமணருக்குக் கொடுக்கும்படி செய்ததால் அவரதை வாங்கி அந்த நாலாம் வாக்கிய வப்பியாசத்தால் தத்துவஞானம்பெற்று பரமோட்சமடைந்ததே நாலாம் வாக்கியக்கதையெனவுங்கொள்க.

இதல்லாமற் பாடபேதமாய்ச்சில பிரதிகளில் இரண்டாம் வாக்கியத்திற்குக்கதைசொல்லி யிருப்பதில் கெற்பணிசேய் குருவாமெயன்பதற்குக் கதை ஓரிராக்கதனைவன் வனத்தில் வருகின்ற சனங்களில் ஞானியாயுள்ளோரையறிந் தனுக்கிரகம் பெறும்பொருட்டு நீ யார் எங்கேயிருக்கிறதென்று கேட்டு அதற்குச் சொ

ல்லுகின்ற உத்தரத்தால் அஞ்ஞானிகளாய்க் காணப்பட்ட பெயர்களையெல்லாங் கொன்றுதின்று வருகையில் ஒரு தினமோர் கெர்ப்பஸ்திரீ அவ்வனத்தில்வர அவளிடத்திற்போய் நீ யார் எங்கேயிருக்கிறதென்று கேட்டபோது அவளவனைக்கண்ட பயத்தினால்மயங்கி நிற்க அப்போது அவள் வயற்றிலிருந்த சிசுவானது நான் பிரமசொரூபம் பூரணமாயிருக்கிறேனென்று கூற அதைக்கேட்டு அவ்வரக்கன் அச்சிசுவையே குருவாகக்கருதி அந்த கெர்ப்பஸ்திரீயைக் கொண்டு போய்க் காப்பாற்றி அக்குழந்தை பிறந்தபின்பு இரண்டாம் வாக்கிய வனுக்கிரகம் பெற்றுத் தத்துவஞான முற்றுப் பரமோட்ச மடைந்ததெனவும்.

நாலாம் வாக்கியத்துக்கு வேறொரு விதமாய்ச் சொல்லப்படுகின்றகதை-யொருபிராமணராயிருக்கின்றபெரியவர் மணலைச் சாதமாய்ச் சமைத்துச் செங்கலைத் துவைபலாய்ச்செய்து தரத்தக்க-கற்புடைய பெண்ணை விவாகஞ்செய்துக்கொள்ள வேண்டுமெனக் கருதிக் கொஞ்சமணலு மொருசெங்கல்லு மெடுத்துக் கொண்டு தேடிப்போனவிடத்தில் மற்றைச்சாதியிற் கற்புடைய பெண்ணில்லாமல் சூத்திரசாதியிலோற் பெண் அம்மணலையுஞ் செங்கல்லையும் வாங்கித்தன் கற்பினாலே சாதமுந் துவையலுமாய்ச் செய்துகொடுக்க அதன்பேரில் அப்பெண்ணை விவாகஞ்செய்துக்

கொள்ள அவள் பணிவிடைசெய்துக்கொண்டிருக்குங் காலத்தில் அவளுக்கு நாலாம் வாக்கியத்தை அனுக்கிரகஞ்செய்ய அதனால் அவள்தத்துவஞானம்பெற்று மோட்சமடைந்ததெனவும் கூறுவாருளர்.

இங்ஙனம் வாக்கியகதை வேறுபட்டிருப்பானேனெனில் - சுருதியில் இந்த நான்கு மகாவாக்கியத்துளொவ்வொரு வாக்கியத்தினால் அனேகம்பேர் மோட்சமடைந்திருக்கின்ற அனேகங்கதைகள் கூறப்பட்டிருப்பதாலும் அவ்வைகளில் முன்னோர்கள் அவாளவாளுக்குச் சம்மதமானகதையையெடுத்துவெளிப்படுத்தியிருப்பதாலும்வேறுபட்டிருக்கின்றதெனவுமறிக.

(இ-ப்) நாலுவாக்கியங்களையும் விசுவாசித்து அனுஷ்டிக்கும்படியாயதிலதில்லடைந்தோர் கதைகளைக் கூறியதாம். (ரு)

(அவதாரிகை.)

வாக்கியவப்பியாசஞ் சித்திக்கும் பொருட்டுச் செய்யுந் தியானங்கூறல்.

கலி

இந்தவகைப்படியே தியானமுதன்மொழிக்காமெ ந்தை பரகுருத்தியான மிரண்டாம்வாக்கியத்துக், கந் தமிலாவறிவதுவே தானுகியிருந்தங்ககண்டமெலாம் பிறித்தறித லனுபூதியதனுற், றந்தோமசியெனுமொ ழிக்கே தக்கதியானந்தான்றன்னறிவிற் கண்டமுந்தா னகண்டமுமாயிருத்தல், கந்தமறநாலாம் வாக்கியத் தியான மகண்டாகாரமாயிருத்தலிவை கைவல்யத்தி யானம்.

(இ-ள்) இந்தவகைப்படியே தியானம் - இவ்வண் மே மோட்சமடைவதற் கப்பியாசிகள் செய்யவேண்டி ய தியானத்தைக் கூறுமிடத்தில் முதன் மொழிக்கு முதல்வாக்கிய வப்பியாசஞ் சித்திக்கின்றதற்கு எந் தை-எமது பிதாவாகிய பரகுருத்தியானமாம்-மேலா ன ஞானதேசிகருடைய திருமேனியைத் தியானித்த லாகும் இரண்டாம்வாக்கியத்துக்கு - இரண்டாம் வா க்கிய வப்பியாசஞ் சித்திக்கின்றதற்கு அந்தமிலாவறி வு நாசரகிதமான கூடஸ்தர் தானுகி - தனது சொரூப மாகி அதுவே - அக்கூடத்தராகிய தானே அகண்டம் வியாபகமான சர்வசாட்சியாக இருந்து-அமர்ந்து அங் கதனுல்-அவ்வுணர்வினுல் எலாம்பிறித்தறிதல் - தேகா திப் பிரபஞ்சமனைத்தையும் வேறுபடுத்தி யுணர்தல்

அனுபூதி தியானமாகும்-தந்தொமசியெனுமொழிக்கு அது நீதியானுயென்னும் மூன்ருவது வாக்கியவப்பியா சஞ் சித்திக்கின்றதற்கு தானகண்டமும் - தான்பூரண மானமெய்யாயும் தன்னறிவிற்கண்டமுமா யிருத்தல் அறிவுசொரூபமாகின்ற தன்னிடத்திலுண்டான பிரப ஞ்சமனைத்தும் பரிச்சின்னமான பொய்யாயுமறிந்திரு க்கின்ற தக்கதியானம்-தகுந்ததியானமாகும் கந்தமற பிரபஞ்சம் பொய்யென்கிற வாசனையின்றி அகண்டா காரமாய் - பூரணசொரூபமாகவே இருத்தல்- இருக்கி ன்றது நாலாம் வாக்கியத்தியானம் - நான்காவது வாக்கிய வப்பியாசஞ் சித்திக்கின்றதற்குத் தியானமா கும் இவை-இந்நாலாம் வாக்கியத்தியானமே கைவல்ய த்தியானம் சாட்சாத்கார மோட்சங்கொடுக்கின்ற தியா னமாகும் எ-று.

(ப-ம்) சீடன் அற்பபுத்தியுடையவ னுகையாலு மறிவு அபரோட்சமாகாமையாலுஞ் சுருதியில் நீராலா ங்கட்டியாய்த் தடித்ததுபோல அறிவே குருமூர்த்த மாகுமென்று தெரிவித்தலாலுங் குருதிருமேனியைத் தியானிக்கவேண்டு மென்பார்-எந்தை பரகுருத் தியா னமென்ருர்.

(இ-ம்) இன்னவாக்கிய சித்திக்கின்னவிதந் தியா னித்தலெனக்கூறியதாம். (சு)

(அவதாரிகை.)

முதல்வாக்கியவுரை கூறல்.

கவி.

ஞானமே பிரமமென்ற முதன்மொழியின் பயன் கேளுச்செவிகண் மெய்மூக்கு நயந்தபொறியதனு, லானசுவையோசையொளி பரிசம் வாசனைபா லறிவது வேஞானமதின் பிரகாசமுரைக்கில், வாணிரவிதிங்க ளங்கி பிரகாச மதிலுமலர்விழிகள் பிரகாசமனமதிற் பிரகாசந், தானமுறு சீவனதிற் பிரகாசமதிலுந் தன் னறிவே பிரகாசத்தானமென வறியே.

(இ-ள்) ஞானமேபிரமமென்ற - பிரக்ஞியானமே பிரமசொரூபமென்று முதல் வேதத்திற் கூறிய - முதன்மொழியின் - முதலாவது வாக்கியத்தின் - பயன் அருத்தத்தை கேள் இயாங்கூறுது நீ கேட்பாய் - நயந்த விடயத்தைவிரும்புகிற - நா-சிங்குவை-செவி-சுரோத்திரம் கண்-சட்சு மெய்-துவக்கு மூக்கு-ஆக்கிராணம் பொறியதனுல் ஆகிய பஞ்சேந்திரியங்களின் வழியாக ஆன இடையிற்கற்பிதமா யுண்டான சுவை - இரசம் ஓசை-சத்தம் ஒளி-ரூபம் பரிசம்-பரிசம் வாசனையால்-கந்தமாகிய பஞ்சவிடையங்களை அறிவதுவே-அறிகின்றவறிவெதுவோ அதுவேஞானம்-ஞானமென்னும்ப

தத்தினருத்தமாம் (அதின்பிரகாசவிபல்பு யாதெனில்) அதின்பிரகாசம்-அவ்வறிவின்விளக்கத்தைஉரைக்கில் சொல்லுமிடத்தில் வானிரவி-ஆகாயத்திற் சஞ்சரிக் குஞ் சூரியனும், திங்கள்-சந்திரனும், அங்கி-அக்கினி யும் பிரகாசம் - உலகத்திற் பிரகாசமென்று சொல்லப் படுவதாம் அதிலும்-அவைகளினும் மலர்விழிகள்-விக சிதமான நேத்திரங்கள் பிரகாசம் அதிகவொளி யு டையதாகும் அதில் - அவைகளினும் - மனம் அந்தக் கரணமானது பிரகாசம் - அதிகதேஜசுடையதாகும் அதில் அதனினும் தானமுறு ஓரிடத்திற் பற்றி விள ங்குகின்ற சீவன்-சிதாபாசன் பிரகாசம் அதிகஜோதி யுடையதாகும் அதிலும்- அச்சீவனிலும் தன்னறிவே சுயஞ்சைதன்னியமான சாட்சியே பிரகாசத் தான மென எல்லாவற்றினுமதிகமான அதிட்டானப் பிரகா சமென்பதாக அறி - தெரிந்துக்கொள்வாய் எ-று.

(ப-ம்.) சூட்சும பூததாமத குணத்திலுண்டான தூலபூதபவுதிகங்களுக்குள் சூரியாதிகள் அக்கினியம் ஸம் மிகுந்துடையதென்பார் வானிரவிதிங்களங்கி பிர காசமெனவும் - அக்குணத்துக்கு மேலானசத்துவகு ண வியட்டியிலுண்டானதாயுஞ் சூரியாதிகளைவிளக்கி யறிவதாயுமிருக்கின்ற சட்சிந்திரியமதிலுமதிகப் பிர காசமுடையதென்பார் அதிலும் மலர் விழிகள் பிர காசமெனவும் அச்சத்துவக்குண சமட்டியிலுண்டான

தாயுஞ் சட்சிந்திரியாதிசளை விளக்கி யறிவதாயும் அவை தொழிற்படுவதற் கேதுவாயுமிருக்கின்ற அந்தக் கரணமதிலு மதிகப் பிரகாசமுடையதென்பார்-மனமதிற் பிரகாசமெனவும் சூட்சுமபூதத்திற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் தாமதகுணத்துக்குமேலான இராசத்குணத்திலுண்டானதாயு மந்தக்கரண முதலான்னதை விளக்கி யறிவதாயுமவை தொழிற்படுவதற் கேதுவாயுஞ் சாக்கிரத்திற் புருவமத்தியிலும் சொப்பனத்திற் கண்டஸ்தானத்திலுப்-சுழுத்தியி லிருதயஸ்தானத்திலும் துரியத்தில் நாபியிலும் விளங்கப்பட்டதாயுமிருக்குஞ் சிதாபாசன் அதிலும் அதிகப்பிரகாசமுடையவனென்பார்-தானமுறு சீவனதிற் பிரகாசமெனவும் - உற்பத்தியில்லாததாயு மாரோபப் பிரகாசங்களுக்கு அதிட்டானமாயும் சீவன் முதலியதை விளக்கியறிவதாயு மவைகள் தொழிர்படுவதற்கேதுவாயுமிருக்குஞ் சுயஞ்சைதன்யமான சாட்சியே எல்லாத்திலு மதிகப்பிரகாசமுடையதென்பார் தன்னறிவே பிரகாசத்தான மெனவுங் கூறினர். (ரு)

(வி-ம்.) சீடனெதிரேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கவும் ஆசிரியர் கேளென்றது விசேடமான காரியஞ்சொல்லப்போவதால் வேறு சிந்தையற்றுச் சித்தமேகாக்கிரகப்படும்படி அபிமுகப் படுத்திக்கொண்டதெனவறிக.

(இ-ம்.) ஞானமென்னு முதற்பத்ததுக்குரைகூறி ச்சூரியாதியட்டப் பிரகாசமுஞ் சுயவறிவான ஆத்மப் பிரகாசத்தின் பிரதிபிம்பமென தெரிவித்ததாம். (எ)

(அவதாரிகை)

அவ்வறிவையானறிந்துகொள்வதெங்ஙனமெனில்.

கவி.

அவ்வறிவையறிவிக்கும் வகையுரைக்கி லுடலே யறிவாகுமெனிற் பொறிகளைந்துமிலாதறியாக கவ்வி யவிந்திரியந்தா னறிவென்றாலந்தக் கரணமிலாதறியா து காரணமறிவென்று, லெவ்விடயந்தானறிந்துந்தனை யறியாததனை யெழிற்சீவனுட்டிவிக்குஞ் சீவனறிவெ ன்றால், வவ்வியதானல்லாத வெல்லாந்தானென்றே மய ங்குமதைப் பகுத்தறியவந்த வறிவறிவே.

(இ-ள்.) அவ்வறிவை - அந்தவதிட்டான ஞான சொரூபத்தை அறிவிக்கும் வகை-தெரிவிக்கின்றவித த்தை உரைக்கில் விளப்புமிடத்தில் உடலே- தேகமே அறிவாகுமெனில் - ஞானசொரூபமாகு மென்றால்

பொறிகளைந்துமிலாது - பஞ்சேந்திரியங்களின்றி - அறியா- தேகமொன்றையு மறியமாட்டாது-கவ்விய- விடயங்களைப் பற்றுநின்ற இந்திரியம்-பொறிகள் அறிவென்றால்-உணர்வாகுமென்னில் அந்தக்கரணமிலாது அந்தக்கரணமின்றி அறியாது இந்திரியங்களொன்றையு மறியமாட்டாது-கரணம் அந்தக்கரணமானது அறிவென்றால் - சைதன்னியமாகுமென்னில் எவ்விடயம்-சத்தாதிகளெந்தவிடயத்தையும்-தானறிந்தும் - அந்தக்கரணமானதுணர்ந்தும் தனையறியாது - தன்னைத் தெரிந்துக்கொள்ளமாட்டாது அதனை - அவ்வந்தக்கரணத்தை எழிற்சீவன் - அழகுபொருந்திய சிதாபாசனவன் ஆட்டிவிக்கும் - அசைப்பிப்பவன் சீவன் அச்சிதாபாசனவன் - அறிவென்றால் சித்தாகுமென்னில் வவ்விய-கவருகின்றதானல்லாத அச்சிதாபாசனுயிராத எல்லாம் அந்தக்கரணாதியனைத்தையும் தானென்றே-நானென்கிறதாக மயங்கும் மோகிப்பன்-பின்னை 'அறிவுதானியாதெனில் அதை - அச்சிதாபாசனை பகுத்தறியவந்த பிறித்துணருகின்ற- அறிவுபோதமே அறிவு அதிட்டானஞானசொரூபமாம்.

(ப-ம்) தேகாத்மாவாகிய அறிவென்று சுருதியிருப்பதாலுந் தன்னைச்சூழ்ந்தபதார்த்தங்களையறிதல் வனிதாதிபோகங்கள் தனக்கு வேணுமென்று சம்பாதித்து அனுபவித்தல் சூரியனில்லாவிடினு லோகவிவ

கார நடவாமைபோற் சரீரமில்லாவிட்டா லிவைகட்குப்பிரயோசனமில்லாதிருத்தல் முதலியயுத்தி யிருக்கையாலும் - சகலரும் சரீரம் பொசிக்கின்றதையே நான் பொசிக்கின்றேனென்றும் நான் பிராமணுதிவன்னம் பிரமச்சாரியாதி யாச்சிரமம் பிறத்தல் முதலியவை யுடையவனென்றுஞ் சரீரமே அறிவாய்ப்பேசு மனுபவமிருக்கையினாலும் சரீரமே யறிவாகுமென்னில் தேகமறிவல்லவென்று அனந்தஞ் சுருதி யிருப்பதாலுஞ் சூரியனஸ்தமனமானாலுலோக விவகாரம் நடவாமைபோல-மரண மூர்ச்சைபால் ஞானேந்திரியங்களில்லாதபோது தேகமிருந்துந் தன்னைச்சூழ்ந்த பதார்த்தங்களை யறியாதிருத்தல் வனிதாதிகளையறிந்து அனுபவிக்காதிருத்தல் அவைகள் பிரயோசனமில்லாதிருத்தல் முதலியயுத்தியிருப்பதுமல்லாமல் மூங்கிலினமேலே கட்டுமியானை முதலியதைப் போல விருத்தல் யோகிகள் கூடுவிட்டுக் கூடுபாய்தல் சொப்பனத்திலிவ்வுடலன்றித் தொழில் நடத்தல் மரணத்தின்பின் ஊஷ்ணுதிதெரியாதிருத்தல் நிழல்போலச் சுதந்தரமின்றி பிராணனாலேயாட்டியடக்கப்படல் இது தேகமென்றறியப்படலா லன்னியமாயுஞ் சூட்சுமபூத தாமதகுண பரிணமமான பஞ்சபூதத்திலுண்டானதாகையா லுற்பத்தியுள்ளதாயும் பிறத்தற்கு முன்னு மிறந்ததற்குப் பின்னுஞ்சுழுத்தி சொப்பனமூர்ச்சை தூஷ்ணீம்பூதாவத்தை யோகஞ் சமாதிகாலத்

திலுந்தேககினைப்புவருகிறதற்கு முன்னும்பின்னு மில்லாததுந்தவிர அந்நினைவு காலத்திலும்பஞ்சபூதமாய் வாதிக்கில் அத்தேகமில்லாததால் அசத்தாயும் சுழுத்தி நீங்கல் முதலிய காலத்திற் சரீரத்திற்பொருந்தும் - நன்மை தீமை கூடவறியாமையாற் சடமாயுங் கருப்பாசயப்பையுறுத்தன் முதலியதற் கேதுவாகையாற் றுக்கமாயுங் கருமுதற்றேகாந்தம் வரை நூறு வருடத்துட்கணந்தோறு மழிவதாயிருப்பதால்- அனித்தியமாயும் நாலுமுழமட்டா யாகாயத்தைக்குறித்தே யிவ்வளவென்று சொல்லக்கூடாத அற்பமாயிருப்பதாற் கண்டமாயும் நவத்துவாரத்திலு மலமொழுகல் முதலியதால் அசுத்தமாயும் பிறத்தல்முதலிய சட்பாவ விகாரமிருக்கையால் விகாரமுள்ளதாயும் வாலீப மாதியவஸ்தை முதலியதுங் கடம்போலத்தெரிதலாற் றிரிசியமாயுமிருக்கின்ற யுத்தியிருப்பதாலும் என் சரீரம் பொசிக்கின்றதென்றும் என்சரீர மின்னவண்ணமாகி பிறத்தல் முதலிய தடைந்ததென்றும் பேசுகின்ற வனுபவ மிருப்பதாலுந் தூலதேகமும் இதன்றியிற் பிராணுதிவாயுகன் மேந்திரியங்களை யறிவென்று சுருதி யிருப்பதாலும் பிராணன்நீங்கினவுடன் றேகம்பிணமாதல் - சகலவிந்திரியமு மடங்கின சுழுத்தியிலும் பிராணனிருத்தல் காற்றுள்ளபோது கப்பலோடு தொழில் நடத்தல்போல் பிராண னுள்ளபோது சரீரவிவகார நடக்குதல் முதலிய யுத்தியிருப்பதாலும் நா

ன்பிலவான் பசியுடையவன் பேசினேனென்பதுமுத லிய வனுபவமிருப்பதாலும் பிராணாதிகளையறிவென் னிற் பிராணாதிவாயு கன்மேந்திரியங்களறிவல்லவென் றனந்தஞ் சுருதியிருப்பதாலுஞ் சமாதியோக மூர்ச் சைகாலத்திற் பிராணனில்லாதிருந்தும் தேகம் பிண மாகாதிருத்தல் கப்பலிற்பாய்கட்டுமாளில்லாதபோது காற்றினாற் கப்பலோடுந் தொழினடவா ததுபோல மனமில்லாதசுழுத்தியிற்பிராணனுடற்காவலாயிருந்து மதனாற் சரீரவிவகாரமொன்று நடவாதிருத்தல் அது பிணம்போல்மூட்டைகடித்தலாதியையறியாதிருத்தல் முதலியயுக்தியிருப்பதுமல்லாமல் ரதத்தையிழுக்குங் குதிரை செல்லுமிடத்தையறியாததுபோலப் பிராண ன்வசனாதிதொழில் நடத்தலையறியாதிருத்தல் மனதி னாலாட்டி யடக்கப்பட இது பிராணாதியென அறியப் படலா லன்னியமாயுஞ் சூட்சுமபூதராசதகுணத்தின் சமஷ்டி வியஷ்டியிலுண்டான தாகையாலுற்பத்தி யுள்ளதாயும் முன்பின்னில்லா மன்மத்தியிலு மதன் காரணமாக வபவாதிக்கில் அப்பிராணாதியில்லாததா ல் அசத்தாயுஞ் சுழுத்தி சொப்பன முதலியதிற் பாம்பாதி வருதலும் மூக்குத்தியைக் கழற்றுதலுஞ் சுவாச மின்னபக்கமோடு தென்பதுமறியாமையாற் சடமாயும் பசிதாகந் தலைபிடி வயிற்றுவலி முதலிய தாற் றுக்கமாயுஞ் சுவாசங் கழிதல் வசனாதியோய்த லால் அனித்தியமாயுந் தேகத்துக் குட்பிரிவாயிருத்த

லாற் கண்டமாயும் எப்ப முதலியதால் அசுத்தமாயும் மூலாதாரத்திலிருந்துண்டாதல் முதலிய விகாரமிருக்கையால் விகாரமுள்ளதாயுந் தளர்ச்சிதையறியப்படுதலாற் றிரிசியமாயு மிருக்கின்ற யுக்தியிருப்பதாலும் என் பிராணாதியென்பது முதலிய வனுபவ மிருப்பதாலும் பிராணாதிவாயுகன்மேந்திரியங்களும் அல்லவென்பார் உடலே யறிவாகுமெனிற் பொறிகளைந்துமிலாதறியாவெனவும்

சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களே அறிவென்று சுருதியிருப்பதாலும் ஆட்டுகின்றவனுள்ளபோது பாவையானது கூத்தாடுவதுபோல இந்திரியங்களுள்ளபோது சத்தாதிசகலவிடயமுந் தெரிகின்றது சகலகிருத்தியமு நடக்கின்றது முதலிய யுத்தியிருப்பதாலும் நான் கண்டேன் கேட்டேன் என்பது முதலிய அனுபவமிருப்பதாலும் இந்திரியங்களே அறிவென்னில் சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களறிவல்ல வென்று அனந்தஞ் சுருதியிருப்பதாலும் கூத்துக்கு முதன்மையானவனில்லாதபோது பாவையை யாட்டுகிறவனாலே அத்தொழில் நடவாததுபோல மனோராச்சியத்தினால் அந்தக்கரணமில்லாதபோது இந்திரியங்களிருந்துமவைகளாற்சத்தாதிகளிலொருவிடயமுந்தெரியாதிருத்தல் ஒருகிருத்தியமும் நடவாதிருத்தல்முதலியயுத்தியிருப்பதுமல்லாமல்-அந்தக்கரணத்தாலாட்

டியடக்கப்படுதலாலு மிதுகண் இதுகாது-முதலியதெ
ன அறியப்படுதலாலு மன்னியமாயுஞ் சூட்சும பூதச
த்துவகுண வியட்டியிலுண்டானதாகையா லுற்பத்தி
யுள்ளதாயுஞ் சுழுத்தி சொப்பன மூர்ச்சை தூஷ்ணீம்
பூதாவஸ்தை யோகஞ்சமாதிகாலத்திலும் இந்திரியநி
னைப்புவருகிறதற்கு முன்னும் அது நீங்கின பின்னில்
லாததுந் தவிர மத்தியகாலத்திலுமதன் காரணமாயப
வாதிக்கில் அப்பஞ்சேந்திரியங்களில்லாததால் அசத்
தாயும் மனோராச்சிய முதலான காலங்களிலெதிற்படும்
விடயமொன்றையு மறியாமையாலும் ஓரிந்திரியமற்ற
இந்திரியங்களையு மவையின்விடயங்களையு மறியாமை
யானுஞ்சடமாயும் வெறுப்பு விடயத்தை யறிதலாலும்
விருப்புவிடயத்தை யறியாமையாலுந் துக்கமாயுஞ்செ
விடாதியாய்ப் போதல் கனவாதியில் நீங்குதல் சத்தா
தியை யறிவதோய்தலால் அனித்தியமாயுங்காது முத
லிய தானத்தில் வேறுவேறாயிருப்பதாற் கண்டமாயு
மசுத்தமான சத்தாதியைக் கேட்டேன் முதலியதால்
அசுத்தமாயும் நினைவெழும்போ துண்டாதல் முதலிய
விகாரமிருக்கையால் விகாரமுள்ளதாயும் சத்தமுத
லிய விடயத்தையறிதலுமறியாமையுந் தெரிவதாற்
றிரிசியமாயுமிருக்கின்ற யுத்தி யிருப்பதாலும் என்
சுரோத்திராதி கேட்டன் முதலிய செய்ததெனுமனுப
வமிருப்பதாலு மிந்திரியமறிவல்லவென்பார் கவ்விய
விந்திரியந்தானறிவென்னு லந்தக்கரண மிலாதறியா

வெனவும் மனமேயறிவென்று சுருதியிருப்பதினாலும் மனமே தேகேந்திரிய பிராணாதிகளை விளக்கி ரட்சித்தல் மனது நினைத்தபடியாகுதல் ஆட்டுகிறவனுள்ள போது வேடதாரியாடுந்தொழில் நடத்தல்போல மனமுள்ளபோது இந்திரியாதியின் விவசார நடக்குதல் முதலிய யுத்தியிருப்பதாலும் நானிச்சாவன் துவேஷி யென்பது முதலியவனுபவமிருப்பதாலும் மனமே அறிவென்னில் மனமறிவல்லவென் றனந்தஞ்சுருதி யிருப்பதினாலும் எஜமானில்லாதபோது ஆட்டுகிறவனில்ல வேடதாரியாடுந் தொழில் நடவாததுபோலப் பித்தமுதலியதாற் புத்தியில்லாத காலத்தில் மனதிருந்தும் தேகாதியை விளக்கி ரட்சித்தலு நினைத்தபடி யாகுதலும் மிந்திரியாதியின் அறிதல் செய்தலாதி விவகார நடத்தலுமில்லாதிருத்தல் முதலிய யுத்தியிருப்பது மல்லாமற் புத்தியினாலாட்டி யடக்கப்படுதலாலு மிதுமனமென அறியப்படுதலாலும் அன்னியமாயுஞ் சூட்சுமபூத சத்துவ குணசமஷ்டியி லுண்டான தாகையா லுற்பத்தியுள்ளதாயுஞ் சமாதிசுழுத்தி மூர்ச்சை உபேட்சைசாலத்தி லில்லாததுந் தவிர மத்தியகாலத்தினும் அதன் காரணமாயிபவாதிக்கில் அம்மனதில்லாததால் அசத்தாயும் ஒன்றிற் புத்தி யழுந்திய காலத்திற் றோன்றிய நினைவு சத்தமாதியை யறியாமையாற் சடமாயும் டல விடயங்களை மெய்போற் கற்பித்து அதிற்காமாதியுறுதல் முதலியதால் துக்

கமாயுஞ் சமாதிமுதலிய காலத்திலும் நினைவோயுந் தோறும் ஒழிதலாலனித்தியமாயும் பிராணாதிக்குள்ளாகவு மந்தக்கரணங்களி லொன்றாகவுமிருப்பதாற் கண்டமாயும் காமாதி துர்நினைவுறுதலால் அசுத்தமாயுஞ் சுழுத்தியிலிருந் துண்டாதல் முதலிய விவகார மிருக்கையால் விகாரமுள்ளதாயும் தாமதராசதகுணத்தை யடைந்து மயக்க முதலியதும் இச்சை முதலியதும் அடைதலறியப் படுதலாற் றிரிசியமாயுமிருக்கின்ற யுத்தி யிருப்பதாலும் என்மனமென்பது முதலிய அனுபவமிருப்பதாலும் மனமும் இதுவன்றியில் புத்தியே யறிவென்று சுருதியிருப்பதாலும் புத்தியேயலை யுமனதை யுறுதிப்படுத்தல் இகலோக பரலோககாரியங்களிற் கர்த்தாவாய் நிருமித்தல் வாத்தியாருள்ள போது சட்டாம்பிள்ளை பாடஞ்சொல்லிக்கொடுத்துப் பிள்ளைகள் படிக்கும் விவகாரஞ் சரியாய் நடத்தல் போலப் புத்தியுள்ளபோது மனனமுதலியதின் விவகார நடத்தல் முதலாகிய யுத்தியிருப்பதாலும் நான் புத்திவந்தன் கர்த்தாவென்பது முதலிய வனுபவமிருப்பதாலும் புத்தியேயறிவென்னில் புத்தியறிவல்லவென்று அனந்தஞ்சுருதி யிருப்பதாலும் பணப்பிரியமில்லாதபோது வாத்தியார் ஏவிச் சட்டாம்பிள்ளை பாடஞ்சொல்லித்துப்பிள்ளைகள் படித்தலில்லாததுபோலப் பிரியமில்லாதகாலத்திலும் வேறுவிடயத்திற் பிரியமுள்ள காலத்திலும் புத்தியானதிருந்து மனதையுரு

திப்படுத்தலு மிகலோக பரலோக காரியங்களிற் கர்த்தாவாய் நிருமித்தலும் மனமுதலியதின் விவகார நடத்தலுமில்லாதிருத்தல் முதலிய யுத்தியிருப்பதுமல்லாமற் பிரியமில்லாவிட்டால் நிச்சயித்தல் முதலிய செய்யுஞ் சுதந்தர மில்லாமையாலு மிது புத்தியென்று அந்தக்கரணாதிக்கு மேலான சைதன்யமாகச் சீவனாலறியப்படுதலாலும் ஆட்டியடக்கப்படுதலாலு மன்னியமாயும் தன்மாத்திரை சத்துவகுண சமஷ்டியிலுண்டானதாகையா லுற்பத்தியுள்ளதாயும் தூஷ்ணீம்பூதாவஸ்தையோகஞ் சமாதிநித்திரை மூர்ச்சை முதலிய காலத்திலில்லாததுந் தவிர மத்தியகாலத்தினு மதன்காரணமாயபவாதிக்கில் அப்புத்தியில்லாததால் அசத்தாயும் பிரியமில்லாத விடயத்தைக் சரியாக நிச்சயத்தறியாமையார் சடமாயும் தேகாதியின் தர்மமாதியைத் தனதென்று அபிமானித்தல், பூரணாத்மாவை கர்த்தாவாதியாகப் பின்னப்படுத்தல், ஒன்றைப்பிழையாகவறிதல் முதலியதாற் றுக்கமாயும் யோக முதலிய காலத்திலுஞ் சாக்கிரத்திற்றிரீக்ஷணத்தில் நிச்சயமாறியோயுந்தோறும் ஒழிதலால் அனித்தியமாயு மனதுக்குள் ளிருத்தல் முதலியதாற் கண்டமாயும் இழிவாய் நிச்சயிக்கின்றதால் அசுத்தமாயு ஓர் சங்கற்பத்திலுண்டாதல் முதலிய விகாரமிருக்கையால் விகாரமுள்ளதாயும் நவகுணமடைதல் அபிமானமுறுதல் முதலியது அறியப்படுதலாற் றிரிசியமாயுமிருக்கின்

ற யுத்தியிருப்பதாலும் என்புத்தியென்பது முதலிய வனுபவமிருப்பதாலும் புத்தியுமறிவல்ல வென்பார் கரணமறிவென்று மெவ்விடயந் தானறிந்துந் தனையறியாததனை யெழிற் சீவனாட்டிவிக்குமெனவும்.

ஆனந்தமயனாகிய சீவனறிவென்பதாகச் சுருதியிருப்பதாலும் சுழுத்தியிற் புத்தி முதலிய தெல்லாமிறந்து சூனியமாயிருப்பது மறிதல் சம்பளப்பிரியமுள்ளபோது வாழைக்காயைப் பழுக்கச்செய்விக்குந் தொழில் நடத்தல்போல பிரியமுள்ளபோது புத்தி நிச்சயமுதலிய தொழில்நடத்தல் முதலாகிய யுத்தியிருப்பதாலும் நானறிவே னறியேனென்பது முதலிய வனுபவ மிருப்பதாலும் சீவனே அறிவென்னிற் சீவனறிவல்லவென்று அனந்தஞ்சுருதியிருப்பதாலுஞ்சுழுத்தியிற் சூனியமாயிருத்தலுஞ் சுகமாயிருத்தலு மறிகின்ற சீவனுபேட்சா வேளையில்லாதிருத்தல் பழஞ்சாப்பிடுகின்றதற்காகச் சம்பளங்கொடுக்குமி ராசனில்லாவிட்டால் வேலைக்காரனுமேலே பழுக்கவைக்குந் தொழில் நடவாததுபோல அகண்டாகார அறிவானந்தமாகிய ஆத்மாவில்லாவிட்டாற் பிரியந்தோன்றிப் புத்திமுதலியதின்றொழில் நடத்தற் கேதுவில்லாதிருத்தல் முதலிய யுத்தி யிருப்பதுமல்லாமற் பிரியமாதிபிடையிற் றோன்றியழிதலாலும் சீவனானவன் ஆத்மாவினாலிவன் சீவனென்று அறியப்படுதலாலும் ஆட்டியடக்கப்படுதலா

லும் அன்னியமாயும் மூலப்பிரகிருதியி ராசதகுண அவித்தையிற் பிரதிவிம்பித்திருக்கின்ற வகையாலுற் பத்தியுள்ளதாயும் உபேட்சாவேளை முதலான காலத் திலில்லாததுந் தவிர மற்ற காலத்திலும் அதன் கார ணமாக அபவாதிக்கில் சீவனில்லாததால் அசத்தாயும் தானல்லாததைத் தானென்று மயங்குதலாலும் ஆகாத விடயத்திற் பிரியமோதப் பிரமோத மடைதலாலுஞ் சடமாயும் கர்த்தாவாதியா யிருப்பதாற் றுக்கமாயும் அவ்விருப்பு நிலையற்றதானதால் அனித்தியமாயும் அத னுலும் பின்னமுதலியதினுலுங் கண்டமாயும் அறியா த தன்மையினுல் அசுத்தமாயும் ஆணவத்திலிருந்து வெளிப்பட்டதான வுண்டாதல் முதலிய விகாரமிருக் கையால் விகாரமுள்ளதாயும் மயங்குதல் அறிவறியா மையாயிருத்தலறியப்படுதலாற் றிரிசியமாயு மிருக்கி ன்ற யுத்தியிருப்பதாலும் என் சீவனென்பது முதலிய அனுபவமிருப்பதாலுஞ் சீவனறிவல்லவென்பார் சீவ னறிவென்றால் வவ்வியதானல்லாத வெல்லாந்தா னெ ன்றேமயங்குமெனவும்.

சீவன் முதலியவைகளை யறிகின்ற ஞானசொரூப மே யறிவென்று சுருதியிருப்பதாலும் பஞ்ச கோசங் களின் அன்னுவயவெதிரேகங்களைக்கண்டு கொண்டு எந்தக் காலத்திலுமிருப்பது மல்லாமலிதுவென மற் றென்றினுர் சுட்டியறியப்படாமலும் ஆட்டியடக்கப்

படாமலுமிருப்பதாற் ருனுயும் தானுற்பத்தி யாகின்ற தற்கேதுவான வேறொன்றில்லாதபடியா லுற்பத்தி யற்றதாயும் விருத்தி முதலியவை தோன்றி யிருந்தொடுங்குதற் கேதுவாயிருப்பதாற் சத்தாயும் அஷ்டப்பிரகாசத்தையும் விளக்கியறிதலாற் சித்தாயும் பொருளாதி ஆறையும்விட்டு விடப்படாத அதிப்பிரியவஸ்துவாதலாதலாலானந்தமாயும் நான்கு அபாவமு மற்றுச் சதோதயமாயிருத்தலால் நித்தியமாயும் மூன்று பரிச்சேதமுமற்றுச் சர்வத்திலும் சம்பந்தித்திருப்பதாற் பூரணமாயும் சகலமுந் தன்னிடத்தில் விவர்த்தமாகையாற் சுத்தமாயும் என்று மொருபடியாயிருத்தலால் விகாரமற்றதாயும் தன்னையறியத்திருக்குவேறொன்றில்லாதபடியால் அதிரிசியமாயு மிருக்கின்ற யுத்தியிருப்பதாலும் நான் சர்வவிலட்சணன் நான் சர்வசாட்சி நான் சர்வாதாரன் நான் சர்வாதிட்டானன் நான் சர்வாத்மா என்பது முதலிய அனுபவ மிருப்பதாலுஞ் சுயம்பிரகாச மானதானே அறிவென்பார் அதைப்பகுத்தறிய வந்த வறிவறிவேயெனவுங் கூறினுர்.

(இ-ம்) உடலாதி அறிவல்லவென் றுணரச் சுருதி யுத்தி அனுபவங்கூறி அறி வின்னதெனத் தெரிவித்ததாம்.

(அவதாரிகை.)

முதல்வாக்கியத் திரண்டாம் பதத்திற் கருத்தங் கூறல்.

(கவி)

இந்நிலையேஞான மென்ற பதத்தினுண்மையுரைத்தோமினிப் பிரமமென்ற பதத்திலக்கணங்கேண்மாணு, மன்னுபிரமாதிபலவுயிர்களுக்குமுயிராய் மற்றதனைப்படைத்தளித்து மாற்றுதற்கேதுவு மாய்த், துன்னுபரி பூரணமாயிருப்பதெதுவதுவாந் தூயபதமிரண்டினுக்குஞ்சோதியொன்றுகையினுல், நன்னிலையெநமதிடத்திலறிவுமது வெனலால்ஞானமே பிரமமெனநவின்றதுவாக்கியமே.

(இ-ள்) இந்நிலையே-இந்த முறைமைய ஞானமென்றபதத்தின் பிரக்கியான மென்னு மிந்தின பதத்தினுடைய உண்மை-எதார்த்தமான அர்த்தத்தை உரைத்தோம்-மொழிந்தோம் இனி-இப்பால் பிரமமென்றபதத்து-பிரமமென்ற - விரண்டாம்பதத்தினுடைய இலக்கணம்-இயல்பை கேண்மாணு-சீடனே, கூறுதங்கேட்பாய்-மன்னுநிலை பெற்றிருக்கின்ற, பிரமாதி அயன் முதலான பலவுயிர்களுக்கும் சராசரமான அனந்தசீவர்களுக்கும், உயிராய்-ஆத்மாவாய், அதனை-அச்சராசர

வுயிர்களை, படைத்துமாற்றுதற்கு-சிற்பிரதானத்தானிமித்தகாரணமாயிருந்து சிருட்டித்து-இரட்சித்து சங்கரிக்கின்றதற்கு ஏதுவுமாய்-ஜடப்பிரதானத்தாலுபாதான காரணமுமாய், துன்னுநிறைந்த, பரிபூரணமாய் அபரிச்சின்னமாய், இருப்பதெது இருக்கின்றசொரூபமியாதோ, அதுவாம்-அதுவேபிரமதத்திலக்கணமாம் ஓர் தேகத்திலிருக்குமறிவு எங்ஙனஞ் சிருட்டியாதிக்கேதுவாயும், பூரணமாயுமிருக்கும் பிரமமாகுமெனின்துப வாச்சியார்த்தமில்லாது பரிசுத்தமாகிய பதமிரண்டினுக்கும்-பிரக்கியானம் பிரமமென்னு மிரண்டுபதலட்சியார்த்தத்துக்கும்-சோதி சித்துலட்சணம்-ஒன்றாகையினால்-ஒருதன்மையாயுள்ளதாகையால்-நன்னிலேயே-ஆனந்தமாயிருக்கிற பிரமமானது பல வுயிர்களிடத்துமிருக்குமென்றமுறையே நமதிடத்திலறிவும் நம்மிடத்திலுள்ள ஞானசொரூபமும்-அதுவெனலால்-அந்தப் பிரமமேயென்று வேதங்கூறுகையினால் ஞானமே பிரமமென - பிரக்கியானமே பிரமமென்றுநவின்றது வாக்கியம் முதல்வாக்கியஞ் சொல்லப்பட்டது-எ-று மற்றென்பது அசை.

(ப-ம்.) ஏழுவகைப்பிறவிச் சீவர்களைக்காட்டிலும் நித்தியமாயிருக்கப்பட்ட பிரமாவென்பார் மன்னுபிரமாதியெனவும் ஆகாசம் நான்கு பூதபவுதிகங்களுக்குமுள்ளும்புறம்பும் வியாபகமாயிருத்தல் போலச்சகலசீ

வர்களுக்கு முள்ளும்புறப்பும் பிரமம் வியாபகமாயுஞ் சரீரத்திரயத்தைவிடச் சீவன் பிரியமாயிருப்பதுபோலச் சீவனிலும் பிரமம் பிரியமாயுஞ் சரீரத்திரயத்தை சீவனுட்டுவதுபோலச் சீவனைப் பிரமமாட்டுவதாயுமிருக்கின்றதென்பார் - பலவுயிர்களுக்கு முயிரெனவும் பழுதையினிடத்திற் பாம்பு முதலியவை தோற்றியிருந்தொடுங்சப் பழுதை யேதுவாயிருக்கின்றதுபோலச் சராசரப்பிரபஞ்சந் தன்னிடத்திற்றேற்றி யிருந்தொடுங்குதற்குப் பிரமமிடமாயிருப்பதென்பார் மற்றதனைப்படைத்தளித்து மாற்றுதற்கேதுவெனவும்-மூன்று பரிச்சேதமற்றபூரணமாயிருப்பதென்பார் துன்னு பரிபூரணமெனவும் திரிதீவட்டியென்று உபாதியினுற்பேதமாயிருந்தாலும் நெருப்பொருதன்மையாயிருத்தல்போல அறிவும் பிரமமுமென்று உபாதியால் வேறுபோலிருப்பினும் சித்துலட்சணத்திலொருதன்மையாயிருக்கின்றதென்பார் - பதமிரண்டினுச்கும் சோதியொன்றெனவும் எங்குமுள்ளவாகாசமே யோர்கடத்திலுள்ள ஆகாசமுமாதல்போலப் பிரமாதிசராசரங்களிலிருக்கும் பிரமமே நின்னுடைய வோர்தேகத்திலுமிருக்கிற அறிவுமென்று வேதங்கூறுவதாலென்பார் - நன்னிலையேகமதிடத்தி லறிவு மதுவெனலாலெனவுங்கூறினர்.

(இ-ம்.) சத்தியக்கியானவனந்தானந்தவஸ்துவே பிரமமெனக்கூறிக் கடாகாச மகாகாசமென்று வுபாதி

யாற்பேதமாய்த் தோற்றினு மொன்றாயிருத்தல்போல ஞானமும் பிரமமு முபாதியால் வேறுபோற் றோற்றினும் ஒன்றெனவயிக்கியங்காட்டியதாம். (௭௯)

(அவதாரிகை.)

இரண்டாம் வாக்கிய வுரைகூறல்.

கலி. வேறு.

அகம்பிரமாஸ்மியென்றே யறைந்திடும் வாக்கியந் தான், பகுப்பதமூன்றதாகுபன்னியவகமேதென்னிற், சகம்பரிபூரணத்தாற்றான் பரமார்த்தமாகி, யுகந்தோறுமழியாதாகி யொன்றொடுந்தாக்காதாகி.

(இ-ள்.) அகம்பிரமாஸ்மியென்று-அகம்பிரமாஸ்மியென்பதாக, அறைந்திடும் - இரண்டாம்வேதத்திற் கூறுகின்ற, வாக்கியம் - இரண்டாவது வாக்கியத்தில், பகும்பதம்-பிரிவானபதங்கள் மூன்றதாகும் அகமென்றும் - பிரமமென்றும் - அஸ்மியென்றும் - மூன்றும் - பன்னிய-சொல்லியவற்றுள், அகமேதென்னில்-அகம் பதத்தின் னருத்தமியாதென்றால்சகம்-பிரபஞ்சத்தில்

பரிபூரணத்தால் - வியாபகமாயிருப்பதால், தான் பரமார்த்தமாகிதானுண்மையாய், உகந்தொறும் - என்நாளும், அழியாதாகி-கெடாததாய், ஒன்றொடும் - சரீராதிய வொன்றின் விகாரத்திலும், தாக்காதாகி - கூடாததாய் என்றவாறு.

(ப-ம்) ஆகாயம்போற் சகத்தெங்கும் வியாபகமாயிருபத்தெட்டுத் தத்துவமாகின்ற கற்பிதங்கட்கு அதிட்டான மாயிருப்பதென்பார்- சகம் பரிபூரணத்தாற்றான்பரமார்த்தமாகியெனவும் கலி முதற்காலங்களு மதிற்றோன்றும் வஸ்துக்களும் அழிவதுடன்அழியாததென்பார்-உகந்தொறு மழியாதாகியெனவும் சலத்திற்குள்ளும் புறம்புமாயிருக்கு மாகாயஞ் சலவிகாரமான குமிழியாகாததுபோலத்தேகேந்திரியப் பிராணகரண அவித்தை சீவனுக்கு உள்ளும் புறம்புமிருந்தும் அவையின் சட்பாவவிகாரத்திற் கூடாததென்பார் ஒன்றொடுந் தாக்காதாகியெனவுங்கூறினார் (உ௦)

(அவதாரிகை)

இதுமது.

கவி

அனத்தையுங் கடந்ததாகி யனுபவித் தறிவதாகி,
நினைத்த தேகத்தினுள்ளே நிச்சயப்படுவதாகி, வினைத்

த சூக்குமதேகத்தை விளக்குவதாகித்தானே, தனக்கி ணை யென்னலாகுஞ் சைதன்னியமகங்காணென்பார்.

(இ-ள்.) அனைத்தையும்-சீவன்வரை சகலத்தையும் கடந்ததாகி-பொருந்தாததாய், அனுபவித்தறிவதாகி சுவானுபவத்தினாலுணர்வதாகி, நினைத்த தேகத்தினுள்ளே-விசாரஞ்செய்கின்ற முமூட்சுவின் சரீரத்திற்றானே நிச்சயப்படுவதாகி தானெனத் தெளிந்துக் கொள்ளத்தகுவதாய், வினைத்த பஞ்சவிடயத்தை-விளக்கியறியப்பட்ட சூட்சுமதேகத்தை லிங்க சரீரத்தை விளக்குவதாகி பிரகாசிப்பிக்கின்றதாய், தானே தனக்கிணை-தனக்குத் தானேசமானம், என்னலாகும் என்று கூறப்படுவதான சைதன்னியம்-சித்தே, அகங்காணென்பார்- அகம்பதார்த்தமெனப் பெரியோர்கள் கூறுவார்கள் எ-று.

(ப-ம்,) சலத்திற் சம்பந்தித்திருக்கு மாகாயத்திற் சலத்தினுடைய சீதளமொட்டாததுபோல நிரந்தரமாயிருப்பதாற் சரீர இந்திரிய பிராணகாரணம் அவித்தை சீவனுடைய சுபானுபவுத்தைப் பொருந்தாததென்பார் அனைத்தையுங் கடந்ததாகியெனவும் சமாதியிற்றானுயிருந்து அபரோட்சமா யறியப்பட்டதென்பார்-அனுபவித்தறிவதாகியெனவும் - இதரதெய்வங்களை யொவ்வோரிடத்தி லன்னியமாய்க் காண்பதுபோல

வின்றிச் சரீராதிகளை நேதிசெய்த விடத்திற்றானே ஆத்மாவாகின்ற தெய்வந்தானாகத் தெளிந்துகொள்ளத்தக்கதென்பார் - நினைத்த தேகத்தினுள்ளே நிச்சயப்படுவதாகியெனவும் சத்தபரிச ரூபரசகந்தமான பஞ்சவிடயத்தை விளக்கியறியப்பட்ட ஆரோபப்பிரகாசமானசூட்சுமதேகத்தையும் பிரகாசிப்பிக்குமெதார்த்தப்பிரகாச முடையதென்பார் வினைத்த சூக்குமதேகத்தை விளக்குவதாகியெனவும் தன்னைப்போற் சச்சிதானந்த லட்சணமுள்ளது வேறில்லையென்பார், தானேதனக்கிணையென்னலாமெனவுங்கூறின.

(இ-ம்.) இரண்டாம் வாக்கியத்திலகமென்னுமுதற்பதத்துக் குரைகூறியதாம், (உக.)

(அவதாரிகை.)

அவ்வகம் பதார்த்தத்தை யானறிந்து கொள்வதெங்ஙனமெனில்,

கவி.

இன்னவையறியுமாறு வியம்புது மஞ்ஞானத்தான்
முன்னகவென்றவுன்னை முடித்ததேயகமாங் கண்டா

யென்னனை மனையென்பாய்போ லென்னுடலென்றுகா
லன்னதேகத்தைவேறு யறிந்ததிந்திரியந்தானும். [ணி

(இ-ள்,) இன்னவை இவ்வகம்பத அருத்தத்தை அறியுமாறு-தெரிந்துகொள்ளும்விதத்தை, இயம்புது ட்-கூறுகின்றேம். அஞ்ஞானத்தால் - அறியாமையினுலேமுன்-பூர்வமக்கியானதிசையில், அகமென்ற - தேகேந்திரியாதிகளை நானென்ற உன்னை - சிதாபாசனுன உன்னை, முடித்து-கெடுத்தவிடத்தில், அதே-சேஷிக்கின்ற சைதன்னியமெதுவோ வதுவே, அகமாங்கண்டாய் - அகம்பதத்துக்கு அருத்தமாகு மறிந்துகொள்வாய். அவ்வகம் பதார்த்தத்தை வேறுபடுத்தி யறிவதெங்ஙனமெனில் என்னனை எனதுமாதா, மனை-எனதுமனைவி என்பாய் போல என்றுனக்கன்னியமாய் நீயிச்சிக்கின்றதுபோல என்னுடலென்று எனது தேகமென்று, காணில்-உனக் கன்னியமாய்க் காண்பாயாகில், அன்னதேகத்தை - அத்தன்மையான சரீரத்தை, வேருய்-அன்னியமாய், அறிந்தது-தெரிந்தது, இந்திரியம்-பொரிகள், தானும்-அவை கணியாகும் எ-று.

(ப-ம்,) அறியாமையால் மாதா பிதா மனைவி முதலியவர்களைத் தானுகக்கருதி அவர்கள்படுஞ் சுகதுக்கத்தையுறுகின்ற அஞ்ஞானியானவன் அறியாமைநீங்கி வேறுகண்டபோது சுகதுக்கம் நீங்கல்போல அறியா

மையாற் றூனென்றிருக்குந் தேகமுதற்சீவன் வரையு ள்ளதைத் தனக்குவேறெனக்கண்டாலவற்றால் வருஞ் சுகதுக்கமற்ற சாட்சியேயாவா யென்பார் அஞ்ஞானத் தான் முன்னகமென்றவுன்னை முடித்ததேயகமாங்கண் டாயெனவும் தேகம் நானென்பதென்று சுருதியிருப் பதினாலும் தீப்பட்டவிடத்திற் புத்திரமித்திர தாராதி களை விட்டு நான் பிழைக்கவேணுமென்று வோடிப் போயுடலைக்காக்கின்ற யுத்தியினாலும்நானின்ன வர்ணா ச்சிரமம் நாமரூப மூர்முதலிய துடையவனென்று பே சுமனுபவத்தினாலும் சரீரமே நானென்பதென்னில் சரீரம் நானென்பதல்லவென்றனந்தஞ் சுருதியிருப்ப தினாலும் தூளிக்காற்று கொசுகு முதலிய வுற்றவிடத் திற் சரீரத்தைவிட்டு இந்திரியங்களைப் பதனம்பண் ணுகின்ற படியால் அன்னியமாயும் பதினெட்டாம் பாட்டின் பதசாரத்தில்காட்டி யிருக்கின்றபடி உற்பத் தியுள்ளது அசத்து சடம் துக்கம் அனித்தியம் கண் டம் அசுத்தம் விகாரமுள்ளது திரிசியமாகவிருக்கின்ற யுத்தியிருப்பதனாலும் என்தேகமின்ன வர்ணாச்சிரமம் நாமரூபமுதலியதுடையதென்று பேசுமனுபவ மிருப் பதாலும் தேகம் நானென்பதல்ல இந்திரியநானென்ப தாமென்பார் என்னை மனை யென்பாய்போலென்னுட லென்று காணிலன்னதேகத்தை வேறாய்றிந்ததிந்திரி யந்தானு மெனவுங்கூறினார்.

(அவதாரிகை) இதுவுமது.

கலி.

இந்திரிய மகமென்றானு மென்கணென்காலென்
கையென், றுந்துமுட்கரண நீயாயுன்மனமென்கையா
லே, யந்தவுட்கரணந்தானு மகற்றிய சீவனீயாய்ச், சந்
ததமென் சீவன்றா னென்கையாற் சாட்சியாவாய்.

(இ-ள்,) இந்திரியம் வாக்காதிதசேந்திரியங்களை அகமென்றாலும் - நானென்று சொல்லுவையே யானு லும் என்கண் - எனது நேத்திரம் என்கால் - எனது பாதம் என்கை - எனதுகரம் என்று என்பது முத லாகக்கூறி, உந்தும் - வேறாக நீக்குகின்றபடியால் உட் காணம் - அங்ஙன நீங்குமந்தக்கரணங்கள் நீயாய் - நீ யாவாய் அவ்வகக்கரணங்களை யானென்பையானாலும் உன்மனமென்கையால்உனதுள்ளமென்றுனக் கன்னிய மாகக் கூறுகின்றபடியால் அந்தவுட்கரணந்தானும் அ வ்வகக்கரணத்தையும் அகற்றிய - வேறாக்கிய சீவன் சிதாபாசன் நீயாய் - நீயாவாய் சீவனையானெனப் பக ருவையானாலும், சந்ததம் எப்பொழுதும் என் சீவன் எனதுயிர் என்கையால் என்றுனக் கன்னியமா யியம் புவதால் சாட்சியாவாய் - சிவசாட்சியே நீயாவாய் எ-று.

(ப-ம்) இந்திரியங்கள் நாமெனென்பதென்று சுருதியிருப்பதாலும் ஆக்கினைவந்தவிடத்தில் அடித்தல் விலங்குபோடுதல்செய்து இந்திரியச்சேதஞ் செய்யாதென்னைக்காப்பாற்றென்று இந்திரியங்களைப் பேணிக்கொள்ளுகின்ற யுத்தியினாலும் நான்கண்டேன் கேட்டேன் நான் குருடன் செவிடன் நான் கொடுத்தேன் நடந்தேன் நாமெனுண்டி - கைமுடவன் என்பது முதலிய வனுபவமிருப்பதாலும் இந்திரியங்களே நாமெனன்பதென்னில் இந்திரியங்கள் நாமெனன்பதல்லவென்று அனந்தஞ் சுருதியிருப்பதாலும் யோசனை காலத்திற் பத்திந்திரியங்களைய நிக்கிரகம்பண்ணி அந்தக்கரணத்தைப் பேணுகிறபடியாலன்னியமாயுஞ் சூட்சுமபூத சத்துவ ராசதகுணவியட்டியிலுற்பத்தியானதாயும் முன் பின்னில்லாமல் மத்தியகாலத்திலும் அபவாதிக்கிவில்லாததாலசத்தாயும் மனோவாச்சிய முதலியகாலத்திற் சத்தாதி வசனாதிவிடயத்தை யறியாமையாலும் ஓரிந்திரியமற்ற விந்திரியங்களையு மவற்றின் விடயங்களையும் அறியாமையாலும் சடபாயும் வெறுப்பான சத்தாதி விடயத்தையறிதல் வசனாதிதொழிலைச் செய்தலாலும் விருப்பான விடயத்தையறியாமை, தொழிலைச் செய்யாமையாலுந் துக்கமாயுஞ் செவிடாதி ஊமையர்தியாய்ப் போதல் கனவாதியில் நீங்குதல் சத்தாதியையறிவதுவசனாதி தொழிலைச்செய்வதோய்தலால் அனித்தியமாயுங் காதுமுதலிய வாய் முதலிய தானத

த்தில் வேறுவேறாயிருப்பதாற் கண்டமாயும் அருவருப்பான சத்தாதியையறிதல் வசனாதிதொழிலைச் செய்தலால் அசுத்தமாயும் நினைவெழும்போ துண்டாதல் முதலியசட்பாவ விகாரமுள்ளதாயும் சத்தமுதலியதறிதல் அறியாமை வசனாதிதொழிற் செய்தல் செய்யாமை தெரிவதாற்றிரிசியமாயு மிருக்கின்ற யுத்தியிருப்பதாலும் என்கண் காது கண்டுது கேட்டுது குருடுசெவிடு எனவும் என்கைகால் கொடுத்தது நடந்தது நொண்டி முடமெனவும் பேசுமனுபவ மிருப்பதாலும் இந்திரியங்கள் நானென்பதல்ல அந்தக்கரணங்கள் நானென்பதாகுமென்பார் இந்திரிய மகமென்றாலு மென்கணென்காலென்கையென்றுந்துமுட் கரண நீயாயெனவும்- அந்தக்கரணம் நானென்பதென்று சுருதியிருப்பதாலும் அந்தக்கரணங்களுக்குத் துக்கம் வரும்போது நாஞ் சுகமாயிருக்கவேணுமென்று தன்பத்துக்கேதுவான இந்திரியங்களை நீக்குகின்ற யுத்தியிருப்பதாலும் நானிச்சாவான் புத்திமான் என்பது முதலிய வனுபவமிருப்பதாலும் அந்தக்கரணமே நானென்பதென்னில் அந்தக்கரணம் நானென்பதல்லவென் றனந்தஞ் சுருதியிருப்பதாலுஞ் சுழுத்தி சமாதி காலத்தில்அந்தக்கரணத்தை நீக்கிச் சீவனைப் பேணுகையால் அன்னியமாயும் பதினெட்டாம் பாட்டின் பதசாரத்திற் காண்பித்திருக்கின்றபடி யுற்பத்தியுள்ளது அசத்து சடந்துக்கம் அனித்தியங்கண்டம் அசுத்தம் விகாரமுள்ளது திரிசியமாக

விருக்கின்ற யுத்தியிருப்பதாலும் என்னந்தக்கரண மிச்சை முதலிய துடையதென அனுபவமிருப்பதாலும் அந்தக்கரணம் நானென்பதல்ல சீவன் நானென்பதாகுமென்பார் உன் மன மென்கையாலே அந்தவுட்கரணந்தானுமகற்றிய சீவனீயாமெனவும் சீவன் நானென்பதென்று சுருதியிருப்பதாலும் சீவனுக்குத் துக்கம் வரும்போது நாம் சுகமாயிருக்கவேணுமென்று துன்பத்துக்கேதுவான அந்தக்கரணத்தை நீக்குகின்ற யுத்தியிருப்பதாலும் நான் கர்த்தா போக்தாவென்று பேசல் முதலிய வனுபவமிருப்பதாலும் சீவனே நானென்பதன்னில் சீவன் நானென்பதல்ல வென்றனந்தஞ் சுருதி யிருப்பதாலும் மரணகாலத்திலுந்தற்போதமாய்க்கும் காலத்திலும் சீவனைநீக்கி ஆத்மசுகத்தைப் பேணுகையால் அன்னியமாயும் பதினெட்டாம் பாட்டின் பதசாரத்திற் காண்பித்திருக்கின்றபடி உற்பத்தியுள்ளது அசத்துசடம் துக்கம் அனித்தியம் கண்டம் அசுத்தம் விகாரமுள்ளது திரிசியமாக விருக்கின்ற யுத்தி யிருப்பதாலும் என்சீவனென்பது முதலிய அனுபவ மிருப்பதாலும் சீவன் நானென்பதல்ல சாட்சியே நானென்பதென்பார் சந்ததமென்சீவன்று னென்கையாற் சாட்சியாவாமெனவுங்கூறினர்,

(இ-ம்) தேகாதியகம் பதார்த்தமல்லவென்றுண ரச்சுருதியுத்தி அனுபவம் கூறினதாம், (உரு)

(அவதாரிகை)

இரண்டாம் வாக்கியத்தில் அகமென்னு முதற் பதத்தருத்த மிதுவெனக் கூறியிரண்டாம் பதத்துக் குரைகூறல்.

கவி.

அப்படி யெல்லாநீக்கி யறிவதே யகமாங்கண்
டாய், செப்பியபிரமமென்னச் செறிபதந்தானேதானு
யொப்புயர்வற்றுவேறோ ருபாதியற்ற கண்டரூபந்,
தப்பிலாப் பூரணத்தாற் சச்சிதானந்தமாமே.

(இ-ள்) அப்படி-முற்கூறியபிரகாசம், எல்லாம்-தேகமுதல் சீவன் வரையனைத்தையும், நீக்கி-வேருக்கி, அறிவதே-உணருகின்றதெதுவோவதுவே, அகமாங்கண்டாய்- அகப்பதார்த்தமென்று தெரிந்துக்கொள்வாய், செப்பிய-முன்சொல்லிய, பிரமமென்ன-பிரமசொரூபமென்பதாக, செறிபதம்- பொருந்தாநின்ற சொற்றுக்கருத்த மியாதெனில், தானேதானுய்-காரணமற்றுத்தானு யிருக்கின்றதாய் ஒப்புயர்வற்று-சமானுதிகமின்றி, வேறோருபாதியற்று - அன்னியமாகிய வொருபாதியுமின்றி, அகண்டரூபம்- கண்டிக்கப்படாத சொரூபமாய், தப்பிலா-கெடாத, பூரணத்தால்-வியாபகமாம், சச்சிதானந்தமாய் - அஸ்திபாதிப்பிரிய சொரூபமாகும்-எ-று.

(ப-ம்) தூலசரீரம்பூதங்கள் சூட்சுமபூதபவுதிகங்கள் அவித்தையாவிசிட்டன் மாயாவிசிட்டன் ஒன்றுக்குமேலொன்று காரணமாயிவைகட்குச் சுதந்தை தன்னியமான தான் காரணமாயிருத்தல்போற்றனக்கு வொருகாரணமுமின்றி யிருக்கின்ற அகாரணமென்பார் தானேதானுமெனவும்- மாயைமுதலிய உபாதியற்றதென்பார் வேறேருபாதியற்றதெனவும்- லோகசித்தாந்தம் அருகனுதியாகமம்-தேவகந்துருவாகமம் அயனுகமம் அரியாகமம் அரனுகமம் - புராணம் பாரதம் நீதிசாரம் கன்மகாண்டம் பத்திகாண்டமாகிய இவைகள் போல மேலொன்றினுற் கண்டிக்கப்படாத உபநிடதநிச்சயித்த சச்சிதானந்த சொரூபமென்பார் அகண்டரூபமெனவும்- ஆகாசாதிகளைப் போற்கெடுதலில்லாத வியாபகமென்பார் தப்பிலாபூரணமெனவும் - பழுதையைப்போலச் சிருட்டிக்கு முன்னும் - பிரளயத்துக்குப் பின்னும் மத்தியிலும் யிருப்பதென்பார் சத்தெனவுப்-சூரியன்போலத்தானுஞ்சுயம்பிரகாசமாயிருந்து சிருட்டி முதலுண்டாகப்பட்டதுகளெல்லாம் விளக்குவதென்பார் சித்தெனவும்- அமிர்தம்போலத்தானுமானந்தமாயிருந்து தன்னையடுக்கும் விருத்திக்குச்சமாதி சுழுத்திவிடயானந்தங் கொடுப்பதென்பார் ஆனந்தமெனவுங் கூறினர்.

(அவதாரிகை)

இரண்டாம்வாக்கியத்திற் பிரமபதத்தருத்த மிது வெனக்கூறி மூன்றும் பதத்துக்குறைகூறல்.

கவி,

இவையதுவஸ்மியென்னு மீறுளபதார்த்தஞ்சொல்லிற் சுவைதருமயிக்கியமாகித் துவிதத்தி லுபாதியற்றுப், பவமகற்றறிவானந்தப் பரங்கடலாகுமென்றே, தவவடிவானஞானத் தலைவர்களுரைப்பர்தாமே.

(இ-ள்) இவை-இங்ஙனங்கூறியது, அது - பிரமபதார்த்தமாம், அஸ்மியென்னும்- அஸ்மியென்கிற, ஈறுளபதார்த்தம்-அந்தத்திலுள்ள சொல்லுக்கருத்தம், சொல்லில்-அதைப்பகருமிடத்தில், துவிதத்தில்-அகம்பதம்பிரமபத மிரண்டிலுமுள்ள, உபாதியற்று- வாச்சியார்த்தங்கணீங்கி, சுவைதரும்-ஆனந்தரசத்தைக்கொடுக்காநின்ற, அயிக்கியமாகி - ஏகமாகி, பவமகற்று- சனனமரணத்தைநீக்குகின்ற, அறிவானந்த - சிற்சுக, பரங்கடலாகுமென்று-திவ்விய சிந்துவாயிருக்குமென்பதாக, தவவடிவான-தவசொரூபிகளான, ஞானத்தலைவர்கள்-பரஞானிகள் உரைப்பர்-ஓதுவார்கள்-எ-று

(ப-ம்) தேவதத்தன் ஒருவனுயிருப்பது போல வும் கடாகாசமும் மகாகாசமுமேகமாயிருப்பது போ லவும் இரண்டுபதவாச்சியமும் நீங்கி இலட்சியமானது துக்க நிவர்த்தியாகிய ஏகமாயிருக்குமென்பார் சுவை தருமயிக்கிய மாகித்துவிதத்தி லுபாதியற்றெனவும்-மனுடானந்த முதலிய பதிஞெரு வகையாகிய ஆனந் தமும் பிறவிக்கொடுப்பதாய்ச் சடமாய்த்திவலை போன் றிருப்பதால் அவையல்லபிறவி நீக்குவதாயறிவாய்ப் பிரளயகாலவெள்ளம்போன்றிருக்கும் அகண்டாகார சொரூபமென்பார் பவமகற்றறிவானந்தப் பரங்கடலெ னவும்-சுபேட்சையாதி - ஞானபூமி மூன்றினப்பியா சமாகிய தவத்திற்கு மேலான நாலாவது சத்துவாபத் தி முதலிய பூமியனுபவத்தை யடைந்து ஆத்மசாட் சாத்கார முடன்போதிக்கும் வல்லமையுடையவர்க ளென்பார், தவவடிவான ஞானத்தலைவர்களெனவுங் கூறினர்.

(வி-ம்) சுபேட்சையாதிமூன்று பூமியினப்பியாச மெங்ஙனந்தவமென்னில்-பஞ்சாக்கினி மத்தியாதிதப சைத் தவமென்றும் அதைச் செய்தோருக்குச் சொர் க்காதிலோகமுண்டென்றுஞ் சுருதிசொல்லுவதுபோ லச்சுபேட்சையாதி மூன்றுபூமியப்பியாசத்தைச்சத்து வ தவமென்றும் அதை யப்பியாசித்தோருக்கும் ஞா னம்வருமுன் சரீரம் நீங்கிப்போனுற் சொற்காதிலோக

முண்டென்றுஞ்சுருதி சொல்லுவதாவது மேலான தவமெனக்கொள்க

(இ-உ-கவி-ம்) அகாரண அத்துவித அகண்ட அபரிச்சின்ன அஸ்திபாதிப்பிரிய சொரூபமே பிரமமெனவும் வாச்சியநீங்கிய அகமும்பிரமமும் அயிக்கியமாகிய அகண்டாகாரசொரூபமே அஸ்மிபதார்த்த மெனவுங் கூறினதாம். (உரு)

(அவதாரிகை)

மூன்றும் வாக்கிய வுரைகூறல்-வேறு.

(கவி,)

தத்வமசிவாக்கியந்தான் பதமூன்று மதிலேதத் பதத்தின்பொருளுறைப்பாஞ்சமைத்தவொருகடங்கா, னித்தகைமைபெறுமுன்னங்கொருவடிவங்கது போவிருப்பனவும் வேற்றுமையாயிருப்பனவுமன்றிச், சத்தாகித்த மதாகிப்பெயர் தானுமின்றித்தானே தானுயிருந்தசைதான்யம்போல, வத்தகைமை யெப்பொழுதும் பெற்றிருக்குஞ் சத்தாயனிர்வசனமாய் விளங்குமது பிரமமாமே

(இ-ள்) தத்துவமசிவாக்கியம்-தத்வமசி யென்னும் மூன்றும்வாக்கியமானது பதமூன்றும்-தத்தென்றும் துவமென்றும் அசியென்றும் மூன்றுபதமுடையதாம் அதிலே அவற்றுள் தத்பதத்தின்தத்தென்னுஞ் சொல்லின் பொருள் பயனே உரைப்பாம் - அறைகின்றோம் சமைத்த - உண்டாக்கிய ஒருகடகம் - ஓர்குடம் இத்தகைமை-இந்தகடத்தன்மையை பெறுமுன்-அடைவதன் முன்னிருந்த அங்கொருவடிவு-அவ்விடத்தொப்பற்ற வுருவமாகிய மண்ணானது அங்கதுபோல- அவ்விடத்தமண்போல இருப்பனவும் - இருக்கின்றதும் வேற்றுமையாய்-அதற்குமாறுபட்ட இக்கடவடிவமாய் இருப்பனவும்-இருக்கின்றதும், அன்றி-அல்லாமல் உண்மையாயும் - தன்மையாயும் நாமமற்றதாயும் தன்மாத்திரமாயுமிருக்கின்ற பிசைந்த மண்மொத்தை போலவும் சத்தாகி-மெய்யாகியும் தமதாகி - தன்மயமாகியும் பெயர்தானுமன்றி - நாமமில்லாததாகியும், தானேதானாயிருந்த - தான்மாத்திரமாகியுமுள்ள சைத்தன்னியம்போல தூஷ்ணீர்பூத சொரூபம்போலவும் அத்தகைமை-அந்தத்தன்மயமாயுந்தான் மாத்திரமாயிருக்கின்ற தன்மையை எப்பொழுதும்-எக்காலமும் பெற்றிருக்கும் - பொருந்தியிருக்கின்ற, சத்தாய்-உண்மையாய் அனிர்வசனமாய்வாக்குமனதுக்கெட்டாததாய் விளங்கும்-பிரகாசிக்கின்றது எதுவோ அது-அஃதே பிரமமாம்- தத்பதார்த்தமாகிய பிரமசொரூபமாம்-எ-று.

(ப-ம்) விருத்தி நட்டமானபின்னு முண்டாகு முன்னுமிருக்கப்பட்டதென்பார்-சத்தாகியெனவும்-ஆகாயம் போலவிருத்தியின் கலப்பற்றதென்பார்- தமதாகியெனவும்-பஞ்சவிடயத்திலொருவிதமாயாவது சுட்டியறியக்கூடாதிருக்குஞ் சொரூபமென்பார் பெயர்தானுமின்றியெனவும் ஆகாயந் தனியேயிருக்குமாப்போலவிருத்தியின் சங்கமற்றதென்பார்தனே தானுமெனவும் மாயையவித்தைகலப்பற்றதாயு மிரண்டாம்வஸ்துவற்றதாயும் மெப்போதுமிருக்கப்பட்டதென்பார்அத்தகைமையெப்பொழுதும் பெற்றிருக்குமெனவும் சிருட்டிக்கு முன்னும் பிரளயத்துக்குப் பின்னு மிருக்கப்பட்ட தென்பார் சத்தாயெனவும்-அதிரிசியமா யச்சத்தாய் விளங்குவதென்பார் அனிர்வசனமாய் விளங்குமெனவுங் கூறினர்.

(இ-ம்) சுயம்புவாய் அத்துவிதமாய்ச் சதோதயமாய் திரிசியமா யிருக்கின்றபிரமமே மூன்றும்வாக்கியத்தில் தத்தென்னு முதற்பதத்துக் கருத்தமெனக் கூறியதாம். (உகூ)

(அவதாரிகை)

மூன்றும் வாக்கியத்தின் மூன்று பதத்திற்குஞ் சங்கிரகார்த்தங்கூறல்.

கலி,

இன்னமுந்தத்பதம் விளங்குமேதுவெலா முரைப்பே மிப்பதத்தின் பொருளது தொம்மென்றியம்பல் சீவ, னன்னபதமிரண்டினுக்குமயிக்கிய மசியென்பரவைகளுபாதியினிற் பிறிந்தயிக்கமும்பெற்றதுகேள், துன்னுசகதீசனுக்குச் சகலபிராணிகடன் றூலமே தூலமவர் சூக்குமமேசூக்க, மின்னிமறைந்திடுமாயை காரணமாமிதனைவேராக்கித் தானாகவிளங்கியது பிரமம்,

(இ-ள்) இன்னமும்-மேலும் தத்பதம்- தத்பதத்தினருத்தம் விளங்கும்-தெரியும்படியான ஏதுவெலாம்-வகையனைத்தும் உறைப்போம்- பின்பியம்புவோம் இப்பதத்தின்பொருள் இந்தத்தத்தென்னும் பதத்தினருத்தம் அது அந்தபிரமமெனவும் தொம்மென்றியம்பல்-தொம்மென்று சொல்லப்படுகின்ற பதத்தினருத்தம் சீவன்-உயிரெனவும்- அன்னபதமிரண்டினுக்கும்-அந்த தத்துவமென்னு மிருபதங்களுக்கும் அயிக்கியம்-ஏகத்துவமே அசியென்பார்-அசிபதத்தினருத்தமெனவும் மகான்கள் கூறுவார்கள், தத்பதத்துவம்பதமயிக்கமாதலெங்ஙனமெனில் - அவைகள் அந்தத் தத்பதத்தினருத்தமாகிய பிரமமும் துவம்பதத்தினருத்தமாகியகூடத்தரும்-உபாதியினிற் பிரிந்து விரா

ட்டாதி யொன்பதும்-தூலாதி யொன்பதும் ஆகிய வாச்சியங்களினின்று நீங்கி-அயிக்கியமும்- ஏகத்துவமும் பெற்றது - அடைகின்றது கேள் யாங்கூறுதுங் கேட்பாய் துன்னுசகதீசனுக்கு-நிறைந்த சகத்கர்த்தனாகிய அந்தரியாமிக்கு-சகல பிராணிகடன் தூலமே-சீவர்களனைவரின் றூலதனுவே தூலம் விராட்டாகிய, தூலசரீரமாம் அவர் சூக்குமமே-அவ்வுயிர்களினிலிங்க சரீரமே சூக்கம் இரணிய கர்ப்பமாகிய சூட்சம சரீரமாம் மின்னிமறைந்திடும்-தோன்றி நீங்குகின்ற மாயை மாயையே காரணமாம்-அவ்வியாகிருதமாகியகாரணசரீரமாகும் இதனை-இச்சரீரத்திரயாதி வாச்சியங்களை வேறாக்கி-விலட்சணப்படுத்தி தானாக-லட்சியமான தான்மாத்திரமாக விளங்கியது - பிரகாசிக்கின்றது பிரமம்-பரப்பிரமசொரூபமாம்-எ-று.

(ப-ம்) அவத்தாத்திரயங்கள் கெட்டுங் கெடாமற் சீவித்துக்கொண்டிருக்குங் கூடத்தரென்பார்-சீவனெனவும்-சராசரங்களிலெல்லா நிரைந்திருக்குஞ் சர்வக்ஞத்துவஞ் சர்வேசுரத்துவஞ்சர்வ நியந்திருத்துவஞ் சர்வாந்திரியாமித்துவம் சர்வகற்பிதத்துவம் சர்வசச்சித்துவமாகிய சட்குண அயிசுவரியசம்பன்னனென்பார் துன்னுசேகதீசனெனவும் ஆறுதத்துவமாய் வெளியாய் காணப்பட்டதென்பார் தூலமெனவும் இருபது தத்துவமாயனுமானத்தினாலே காணப்பட்ட

தென்பார் சூக்குமமெனவும் மேகத்திற்றோன்றி யழி யுமின்னல்போலத் தன்னிடத்தில் விவர்த்தமாய்த் தோன்றியழியப்பட்ட மாயையென்பார் மின்னிமறை ந்திடுமாயையெனவும்-இவ்விரண்டுசரீரத்துக்குமேது வென்பார் காரணமெனவும் விராட்டு இரணியகருப் பம் அவ்வியாகிருதம் சிருட்டிதிதிசம்மாரம் வைசுவா நரன் சூத்ராத்மா அந்தரியாமியாகியவிவைகளை நீக்கி யென்பார் இதனை வேருக்கியெனவும் ஈசுவரன்வரை க்கும் மாயாசபளிதப் பிரமமாகையால் அவை நிருபாதிகசுயம் பிரகாசப் பிரமமென்பார் தானுகவிள ங்கியது பிரமமெனவுங் கூறினர்.

(இ-ள்) தத்துவமசியென்னு மூன்று பதத்தின் சங்கிரார்த்தங்கூறி அயிக்கங்கூறும்பொருட்டுத் தத்ப தத்தின் வாச்சியார்த்த லட்சியார்த்தந்தெரிய விஸ்தா ரமாய்க்கூறியதாம். (உஎ)

(அவதாரிகை.)

தொம்பதவாச்சிய லட்சியார்த்த மியாதெனில்,

கவி.

சீவவுபாதியை யுரைக்கிற்றன்னளவேதூலஞ்
சிலகருவி சூக்குமமாங்காரணமஞ்ஞானந், தாவுமிதனை

பிமானிசீவனிவையனுகாச் சாட்சியது தொம்மென்
றே சாற்றிய கூடத்தர், காவலவன்சீவனெனுமுபாதி
யெலா நீங்கிக்கலப்பதுவே யசிபதமாய்க் காட்டுமது
நீங்கும், பாவனையுமயிக்கியமாம் பண்பும்விதிவழியே
பகுத்துரைப்பர் பெரியோர்கள் பக்குவரானவர்க்கே.

(இ-ள்) சீவவுபாதியையுரைக்கில்- சீவனதுபாதி
யைக்கூறுமிடத்து-தன்னளவேதூலம்- தன்தேகமட்
டுந் தூலதேகமாகும்சிலகருவி- இருபதுத்துவங்களே
சூக்குமமாம்-இலிங்க சரீரமாகும். காரணமஞ்ஞானம்
அவித்தையேகாரணசரீரமாகும்- தாவுமிதனபிமானி-
இச்சரீரத்திரயங்களைப்பற்றி அபிமானிக்கின்றவன்-
சீவன்-சிதாபாசனாகும்- இவையனுகா- வாச்சியமான
விச்சீவனையுஞ் சரீராதியையும் நீங்கிய, சாட்சி-லட்சி
யார்த்தமான சீவசாட்சியே தொம்மென்று நீயென்று
சாற்றிய சொல்லப்படுகின்ற கூடத்தர்- பிரத்தியேகா
த்மாவாகும்- அசிபதார்த்தமியாதென்னில் காவலவன்
சீவனெனும்-ஜகத்ரட்சகனான வீசனாதி சிதாபாசனாதி
யென்கின்ற-உபாதியெலாம் - வாச்சியங்களனைத்தும்-
நீங்கி வேறாகி கலப்பதுவே லட்சியார்த்தமான பிரம
கூடத்தரொன்றாயிருத்தலே அசிபதமாய்- அசிபதார்
த்தமாக காட்டும்- வேதந்தெரிவிக்கும் வாச்சியநீங்கில
ட்சிய மயிக்கமாதலெனக் கனுபவமாகும் வகைகூறவே
ண்டுமெனில் அதுநீங்கும் அவ்வாச்சியங்கள் வேறாகி

ன்ற பாவனையும் பாவித்தலும் அயிக்கியமாம் அந்தல ட்சியங்களொன்றுகின்ற பண்பும்-விதமும் பெரியோர் கள்-சத்துக்கள் பக்குவ ரானவர்க்கே- பருவமுற்றமா ணுக்கருக்கே விதிவழியே முறைப்படியே-பகுத்து ரைப்பார் விரிவாய்க்கூறுவார்கள்-எ-று

(ப-ம்) சாட்சிகாரன்போல சீதன் பஞ்சகோசத் திற்றுதான்மியப்படுவதைப் பற்றுதறிந்து தெரிவிக் குமறிவென்பார் இவையனுகாசாட்சியெனவும்-அடை கல்லானது நிர்விகாரமாயிருத்தல் போலச் சத்துவ குண காரியமான வைராக்கியாதியும் ராசதகுணகாரிய மான காமாதியும்- தாமதகுணகாரியமான சோம்பலா தியுந்தோன்றி யொடுங்குதற்கு ஏதுவாய் நிர்விகாரி யாய் விளங்கப்பட்டதென்பார் கூடத்தரெனவும்-இரா சாவானவன் சட்டமேற்படுத்திக் குடிகள் நன்மை பண்ணும்படிக்குச் செய்வதுந்தீமை செய்யாது நீக்கு வதும்போல வேதத்தில் விதிநிடேதங்கற்பித்து அவ் வழியாச் சீவர்களை ஆட்டப்பட்டஈசுவர னென்பார் காவலவனெனவும் சித்தசுத்திசாதன முள்ளவர்க்கே யன்றி அவையில்லாத. அபக்குவர்களுக்கு மேலோர் போதியாரென்பார் பகுத்துரைப்பார் பெரியோர்கள் பக்குவரானவர்க்கே யெனவுங்கூறினர்.

(வி-ம்) வைராக்கியமாதி சற்குணங்களாகின்ற

மலையி னுச்சியில் விளங்குகின்றவர் கூடத்தரெனவுங் கொள்க.

(இ-ம்) தொம்பதவாச்சியார்த்த லட்சியார்த்தமும் சிபதவயிக்கியார்த்தமுந் தெரிய விஸ்தாரமாய்க் கூறியதாம். (உஅ)

அவதாரிகை

தொம்பததத்பதவாச்சிய நீங்கி லட்சிமாய் அபிக்கமாதல் சீடனுக்கனுபவமாகும்படி தமது சம்பிரதாயப்படி யோகாப்பியாசக்கிரமங்கூறல்.

கவி

நீயென்னு முபாதிக்குத் தூலமுஞ்சூக்குமமு நிருவிப்ப தீசனென்று நிசசயிக்கும்பொழுதே, போயதுவஞ்ஞானமென்றும் பொருளது நீயென்றும் புகல்வரந்த வீசனுக்குப் பொருந்து முபாதிகளு,மாயையெனுங் காரணத்தைமித்தை யென்றேயறிந்தான் மற்றவிரண்டுடலும்போய் வகுத்த தொழிலிலனுப்த், தூயபிரமமென்றே சொல்லிறந்ததுவாஞ்சுத்தமிதிற்சிவபரஞ்சோதியுஞ்சோதியுமே.

(இ-ள்) நீயென்னுமுபாதிக்கு - தொம்மென்ற பதத்துக்குப்பாதியாகிய, தூலமும்-தூலசரீரத்தையும் சூக்குமமும்- இலிங்கசரீரத்தையும், நிருவகிப்பது - இதாகிதத்திதிசெய்கின்றது, ஈசனென்று - அந்தரியாமியென்று, நிச்சயிக்கும்பொழுதே-தணிகின்றகாலத்திலேயே, போயது வஞ்ஞானமென்றும்- அவித்தையொழியுமெனவும்; பொருளது நீயென்றும்- இலட்சிய வஸ்துதொம்பதார்த்தமாகிய நீயாகுமெனவும், புகலவர்-மேலோர் விளம்புவர். அந்த வீசனுக்கு- அப்பரனுக்கு, பொருந்துமுபாதிகளும் உள்ளவுபாதிகளும், மாயையெனுங் காரணத்தை மாயையாகின்றகாரணசரீரத்தை, மித்தையென்றே பொய்யென்பதாக, அறிந்தால்-உணர்ந்தால் மற்ற ஏனைய இரண்டுடலும் விராட்டு இரணியகர்ப்பமாகிய விருசரீரங்களும் போய்நீங்கி வகுத்த- பகுக்கபட்டிருக்கின்ற தொழில் கிருத்தியம் இலனாகி- இல்லாதவனாய் சொல்லிறந்த-அனிர்வசனியமான தூயபிரமமென வாச்சிய நீங்கிய பரிசுத்தமாகிய பிரமசொரூபமாக ஆம்-ஆகும்- சுத்தமிதில் - இவைகளிற்பரிசுத்தமான- சீவபரம் - கூடத்த பிரமமிரண்டும்-சோதியுஞ்சோதியும்-சித்துஞ் சித்துமாகையால் அயிக்கமாம்-எ-று.

(ப-ம்) ஒதுக்குக்குடியிருப்பவன் அபிமானம் விடில்வீடுடையவன் காப்பாற்றிக் கொள்ளுதலா லபி

மானஞ்சுகதுக்கம் நீங்குவதுபோல தூலசூட்சுமசரீரங்களை வினைப்பிரகாரங்காப்பது ஈசனெனத்துணிந்த அக்கணத்திலேயே அவையுடன் அவைகளுக்கேதுவான அறியாமையும் போய்விடுமென்பார் நீயென்னுமுபாதிக்குத்தூலமுஞ்சூக்குமமுநிருவகிப்ப தீசனென்றுநிச்சயிக்கும் பொழுதே போயதுவஞ்ஞானமெனவும்-கனவிற்கண்ட இராஜன் பொய்யானபோது அவன் செய்கிருத்தியமும் அவனுக்குப் பயந்து செய்யுந்தொழிலும் நீங்கிப்போதல் போல மாயையானது தன்னிடத்திற்பழுதையிற் பாம்புபோலமித்தையென்றறிந்தாலதனுடன் சமட்டி தூல சூக்குமவுடலும் பஞ்ச கிருத்தியமும் புண்ணியபாவத் தொழில்களும் போமென்பார் மாயையெனுங்காரணத்தை மித்தையென்றேயறிந்தால் மற்ற விரண்டுடலும் போய் வகுத்த தொழிலில்லை யெனவும் கூறினார்.

(இ-ம்) அவித்தைமாயை நீக்கமே அயிக்கம்பெறமுக்கியவேதுவெனத்தெரியச் செய்ததாம். (உகூ)

(அவதாரிகை)

இவ்வயிக்கியத்தைப் பக்குவர்கள் பெறுகின்றவிதம் வேறுமுளவோவெனில்.

(கவி)

இவையுணருமிடத் தயிக்கியமூன்றுவித முறைப் பரமதென்றாலவ்வறிவேபூரணமாயிருத்தல், அவயவ மாங்கடமட வுபாதிகளைநீக்கி யாகாயமெனவறிதலப் பொருளைத்தானே, சுவைபடவே தியானித்தலவை மூன்றுவித மாந்துவந்துவங்கள்பலவுமற்றுச் சுயம்பிரகாசமதாய், நவையிறந்து சொல்லிறந்து நானுமிறந்திற வாஞானமிறந்திராசியமாய்நவின்றதத்துவிதமே

(இ-ள்) இவை-இந்த, அயிக்கியம்-ஐக்யம்பெருகின்றவிதத்தை. உணருமிடத்து-அறியுமிடத்தில், மூன்று விதம்-மூவகையாக, உரைப்பர் - சத்துக்கள் சாற்றுவார்கள், ஏதென்றால்-அம்மூவகையும் யாதெனில், அவ்வறிவே - எந்தஞானப்பஞ்சவிடயத்தை யறிகின்றதோ அந்தஞானசொரூபமே, பூரணமாய்-வியாபகமென்பதாய், இருத்தல்-அறிந்திருக்கின்றதும், அவயவமாம்-அவயவங்களையுடைய, கடமடவுபாதிகளை-கடவுபாதிமடவுபாதிகளை, நீக்கி-வேறாக்கி, ஆகாயமென-கடாகாசமுமடாகாசமும் மகாகாசமென்றே யென்றறிதல்போல அறிதல்-தொம்பதத்பத வாச்சியங்களைநீக்கி லட்சியத்தை ஐக்யமாயறிதலும், அப்பொருளைத்தானே அவ்வஸ்துவையே, சுவைபடவே- ஆனந்தமுண்டாகும்படி, தியானித்தல்-பாவித்தலும், இவை ஆகியவிவைகளே, மூன்றுவிதமாம் முற்கூறிய திரிவிதமாகும்,

இப்படி ஐக்யமான சொரூப லட்சணமியாதெனில், திவந்துவங்கள் பலவுமற்று-தொந்தங்களனைத்து நீங்கி, சுயம்பிரகாசமதாய்-தானே விளங்குகின்றதாய், நவையிறந்து குற்றமற்று, சொல்லிறந்து-வசனாதீதமாய். நானுமிறந்து-அகங்காரவமுமொழிந்து, இறவாஞானமிறந்து-கெடாத அறிவுங் கெட்டு, அத்துவிதம்-இரண்டற்றிருப்பதென்பதாக, இரகசியமாய்-அந்தரங்கமாய், நவின்றது வேதங்கூறுகின்றது-எ-று.

(ப-ம்) உத்தம பதிவிரதையானவள் புருடனிறந்தானென்னுஞ் சத்தத்தைக்கேட்ட மாத்திரத்திலே யங்கினபடியேயிறந்துபோதல்போலவியட்டி தேகத்திலிருந்து பஞ்சவிடயத்தை யறியுமதிட்டானவறிவே சமட்டி தேகத்திலுமிருக்கப்பட்ட வறிவென்றுணர்த்திய மாத்திரமே யவ்வாறறிந்திருத்தலென்பார் அவ்வறிவே பூரணமாயிருத்தலெனவும் இரண்டாம்பட்சமானபதிவிரதையானவள் புருடனிறந்த விபரமெல்லாம் விசாரித்தறிந்த பின்பு இறத்தல்போல அவித்தை முதலிய தொம்பதவாச்சிய மொன்பதையும் மாயை முதலிய தத்பதவாச்சிய மொன்பதையுநீக்கி யவ்விருபத லட்சியமான கூடத்தரையும் பிரமத்தையும் அயிக்கிய ரூபமொன்றே யாகவறிதலென்பார், அவயவமங்கடமடவுபாதிகளைநீக்கியாகாயமென வறிதலெனவும் புழுவானது குளவியைநினைந்து அந்தவாகாரமாவது போ

லச்சத்தியக்கியானவனந்தானந்தவஸ்துவே தானென த்தியானிக்கின்றதால் சீவன் பிரமாகாரமாகக்கரைந் துபோதலென்பார் அப்பொருளைத்தானே சுவைபட வே தியானித்தலெனவும் சமட்டி வியட்டி சரீராதி யான வாச்சியங்களனைத்துமென்பார் துவந்துவங்கள் பலவுமெனவும் ஆரோபப்பிரகாசமின்றித் தானய் விளங்குமதிட்டானப் பிரகாசமென்பார் சுயம்பிரகாச மெனவும் பரோட்ச அபரோட்சக்குற்றமற்றதென் பார் நவையிறந்ததெனவும் அத்துவிதமென்பார் சொல் லிறந்ததெனவும் பாவனாதீதமென்பார் நானு மிறந்தெ னவும் அஞ்ஞானம் நீங்கினபடியால் அகண்டாகார விருத்திக்கியானஞ்சொரூபாகாரமாய்ப் போமென்பார் இறவாஞானமிறந்ததெனவும் - வேதஞ்சொல்லாமற் சொல்லுமென்பார் - இரகசியமாய் நவின்றதெனவுங் கூறினர்.

(இ-ம்) மூன்றுவிதமாய் ஐக்யம்பெறுதலும் ஐக் யசொரூபத்தின் இலட்சணமுங் கூறியதாம். (௩௰)

(அவதாரிகை)

நாலாம்வாக்கிய உரைகூறல்.

கலி.

அயமான்மாப்பிரம மெனவுரைத்த மொழிப்பத மூன்றிலயமேதென்னிற், சுயமாக விளங்குகையா லப ரோக்ஷமாயிருத்தல் சுபாவமாகும்.பயனுனதேததிலே யெவ்வுலகுமுதித்தொடுங்கும் பரமேதந்த, வியனுன வான்மாவே பிரமமென்ற ததன்பயன்ருன் விளைந்த வாறே.

(இ-ள்) அயமான்மாப் பிரமமென - அயமாத்மா பிரமமென்று உரைத்த - நான்காவது வேதத்திற் கூறியமொழி-நாலாவது வாக்கியமானது பதமூன்றில் அயமென்றும் ஆத்மாவென்றும் பிரமமென்றும் மூன் றுபதங்களாகும் அதில் - அயமேதென்னில் அயமெ ன்னு முசுறபதத்துக்கருத்த மியாதென்னில், சுயமாக தானுக விளங்குகையால்-பிரகாசிக்கையினுல் அபரோ ட்சமாய்-பிரத்தியட்சமாக இருத்தல் - இருக்கின்றதே சுபாவமாகும்-எதார்த்த அர்த்தமாகும் பயனுனதேது இங்ஙனம் பிரத்தியட்சமென்னு மருத்தத்தையுடைய தெதுவோ அதிலே - அதனிடத்திலே எவ்வுலகும்

தூலாதியான எந்தப்பிரபஞ்சமும் உதித்தொடுங்கும் தோன்றிமறையும் பரமேது - இவ்வளவு சிரேஷ்டமாயுள்ள தெதுவோ அதுவே - ஆத்மாவே அச்சிரேஷ்டமான ஆத்மசொரூபமே பிரமமென்றது - பிரம சொரூபமெனச் சொல்லப்படுவது அதன்பயன் - அவ்வயம்பதத்துக்கருத்தம் விளைந்தவாறு - உண்டானதிவ்விதமாம் எ - று.

(ப-ம்) தேகமுதல் சீவன்வரைபோல் மேலொன்றைப்பற்றாது தானே பிரகாசிப்ப தென்பார் - சுயமாகு விளங்குமெனவும் - இந்திரியக்காட்சி பாதனைக்காட்சி யோகக்காட்சி மூன்றுக்குமின்றி ஞானக்காட்சிக்குப் பிரத்தியட்சப்படுவதென்பார் அபரோட்ச மாகுமெனவும் - பாம்புதோன்றிமறைதற்கேதுவான பழுதையைப்போல ஆரோபமான சராசரப்பிரபஞ்சங்கள் தோன்றியிருந் தொடுங்குதற்குக் காரணமான அத்துவித அதிஷ்டான சொரூபமென்பார் பயனுனதேதத்திலே யெவ்வுலகுமுதித் தொடுங்குமெனவும் - தேகமுதல் சீவன்வரைபோல் விசாரணையில் அனாத்மாவாய்ப்போகுங் கற்பிதவாத்மா அல்லவென்பார் வியனுனவாத்மாவெனவுங்கூறினர்.

(இ-ம்) நாலாம் வாக்கியத்தில் அயமென்னு முதற்பதத்துக்குப் பிரத்தியட்சமும் ஆத்மாவும் பிரமமுமருத்தமெனக்கூறியதாம். (௩௧)

(அவதாரிகை)

நான்காம் வாக்கியத் திரண்டாம்பதத்துக்குரைகூறல்,

கவி.

இனியாத்மாவெனும் பதத்தினியல்பகங் காராதி யுடலீருயுள்ள, துணியானகாரணகாரியத்தொடர்பா யதைவிளக்குஞ் சோதியாகித், தனியாகி யறிவறியா மையிலறியா வறிவாகித் தானேதானுங், கனிவாய பிர மமெனுங் மதிப்பான பூரணமாங்கருதிங்காலே.

(இ-ள்) இனி-இப்பால் ஆத்மாவெனும் பதத்தின் ஆத்மாவென்னு மிரண்டாவது பதத்தினது இயல்பு-சு பாவமான அருத்தமியாதெனில் அகங்காராதி - அகங் கார முதலாக உடலீருயுள்ள தூலதேக வரையுள்ள துனியானதுக்கமான - காரணகாரியத் தொடர்பாய் அக்காரணகாரியசரீரங்களிற் சம்பந்தப்பட்டதாய் - அதைவிளக்கும்-அவைகளைப் பிரகாசிப்பிக்கின்ற சோ தியாகி - சுயம்பிரகாசமாகி தனியாகி ஒப்பற்றதாகி அறிவறியாமையில் - ஞானமஞ்ஞானமில்லாத அறியா வறிவாகி சுட்டியறியக்கூடாத சைதன்னியமாய் தா னேதானுப் - தான்மாத்திரமாயிருக்கின்றதாம் பிரம மென்னு மூன்றும்பதத்தினருத்த மியாதெனில் கரு துங்கால்-அப்பதத்தி னருத்தத்தை மதிக்குமிடத்து

கனிவாயபிரமம் - ஆனந்தகரமான பிரமசொரூபம் அதிட்டான ஆதாரமாயுள்ள எங்கும் பூரணமாம் - எவ்விடத்தும் நிறைந்ததாகும் எ-று.

(ப-ம்) இரும்பினுடைய நீளங்குறுகல் அடிபடல் முதலிய விகாரமபற்றாது அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் அழல்போலச் சூட்சும தூலசரீரங்களினது சுகதுக்கததிற் பொருந்தாது அவைகளிற் சம்பந்தப்பட்டிருப்பதென்பார் அகங்காராதி யுடலீறாயுள்ளதுனியான காரணகாரியத் தொடர்பாயென்னவும் - தானும் விளங்காமல் அன்னியத்தையும் விளக்குந்தன்மையில்லாமலிருக்குங் கடம்போலத்தானும் விளங்காமல் அன்னியத்தையும் விளக்காமலிருக்குஞ் சரீராதியைத்தானும் விளக்கிக்கொண்டு அன்னியத்தையும் விளக்குஞ் சூரியனைப்போலத்தானும் பிரகாசித்துக்கொண்டு பிரகாசிப்பிக்குஞ் சுயம்பிரகாசமென்பார் அதை விளக்குஞ்சோதியெனவும் - சமானரசித சச்சிதானந்தமென்பார் தனியெனவும் பரோட்ச அபரோட்சமற்ற அதிட்டானக்கியானமென்பார் அறிவறியாமையிலறியா வறிவெனவும் அசங்கமானகூடத்தரென்பார் தானேதாமெனவும் ஆரோபங்களுக் காதாரமான அகண்டத்துவமென்பார் எங்குமதிட்டான பூரணமாமெனவும் தன்னையடுத்த விருத்திக்குச்சமாதிசுழுத்திவிடயானந்தங்கொடுக்கப்பட்ட தென்பார் கனிவாய பிரமமெனவுங்கூறினார்.

(இ-ம்) அசப்பந்த அதிப்பிரகாச அஸ்திபாதிப் பிரிய அதிட்டானக்கியான அசங்கமான கூடத்தரே இரண்டாவது ஆத்மபதத்துக்கருத்தமெனவும் ஆதார அகண்ட ஆனந்தசொரூபமே மூன்றாவது பிரமபதத் துக்கருத்தமெனவுங் கூறினதாம். (௩௨)

(அவதாரிகை.)

நான்காம் வாக்கியத்தினயிக்கங்கூறல்.

(கவி)

ஆகையினலயமாத்மாவெனும் பதத்தால் விளங்கியசீ வாத்மாவுக்கு. யேகீகப்பிரமமென மொழிபதத்தாம் பரமாத்மாவினுக்கயிக்கிய, மோகவிபரீதமறநாலுவாக் கியத்தாலு மொழிந்தாரேனும், போகபூரண சொரூப ஞானமன்றித்தோன்றுதப்பொலிவுஞ் சொல்வாம்.

(இ-ள்) ஆகையினல் அயம்பதத்துக்கு மாத்மபத த்துக்கு முற்கூறியபடி யருத்தமிருக்கையினல் - அய மாத்மாவெனும் பதத்தால் அவ்வயமாத்மாவென்னு மிருசொல்லும் விளங்கிய - பிரகாசிக்கின்ற சீவாத்மா வுக்கும் - கூடஸ்தவுயிருக்கும் ஏகீக-ஒரு தன்மையா ன-பிரமமென மொழிபதத்தாம்-பிரமமென்று சொல்

லிய பதத்துக்கருத்தமாகிய - பரமாத்மாவினுக்கும் - பிரமசொரூபத்துக்கும்-அயிக்கியம் ஏகத்துவங்கூடும் இந்தவாக்கியங்களால் முன்னேமோட்சம் பெற்றோர்கள் கதை சொல்லப்பட்டதே இப்போ திவ்வாக்கியங்கேட் டவர்களனைவருமேன்மோட்சம் பெறவில்லை யெனில் மோகவிபரீதமற - மயக்கஞ்செய்யுந்திரிபு நீங்கும்படி நாலுவாச்கியத்தாலும் பிரக்ஞானம் பிரமமாதிநான்கு வாக்கியங்களினாலும் - மொழிந்தாரேனும் சத்துக்கள் அனுக்கிரகஞ் செய்தபோதிலும் - போகபூரணசொரூ பம் - அகண்ட சொரூபானுபவம் - ஞானமன்றி - அப ரோட்சக்கியானம் வந்தாலொழிய தோன்றாது - உண் டாகாது, வேதமாதிகளெல்லாம் பிரமமென்று சொல் லப்படுகின்றதே- ஆதலாலிந்நான்கு மகாவாக்கியங்க ளிற் கூறப்படும் பிரமத்தினிலக்கணமியாதென்னில்-அப் பொலிவுஞ்சொல்வாம்-மிகுதியான அவ்விலக்கணமுங் கூறுகின்றோம் - எ-று.

(ப-ம்) திரிநீவட்டியென்பது- உபாதியால் வேறு போற்றோற்றினும் - நெருப்பொன்றுதல் போலச் சீ வாத்மாபரமாத்மா வுபாதியினால் வேறுபோற்றோன்றி னுஞ்சித்துலட்சணத்திலொன்றென்பார் - ஏகீகப்பிரம மெனவும் - பரிபூரணமான தன்னைத்தானே தேகாதி யாகவும் தாரபுத்திரதனாதிகளாகவும் தனக்குவேறு போலச்செய்து சுகதுக்கங்கொடுக்கப்பட்டதென்பார்-

மோகவிபரீதமெனவும் - கறுப்பு செவப்பாதி கண்ணன்றி மற்ற இந்திரியத்தின லறியப்படாததுபோலப் பரிபூரணவஸ்துவினனுபவம் ஞானத்தாலன்றி சரியையாதிகளிால் விளங்காதென்பார் போகபூரணசொருப ஞான மன்றித் தோன்ருதெனவுங் கூறினர்.

(இ-ம்) கடாகாச மடாகாசமென்று முபாதியால் வேறுபோற்ருேன்றினும் ஒன்ருயிருத்தல்போல அயமாத்மாவென்றும்-பிரமமென்றும் உபாதியால்வேறு போலிருக்கினும் ஒன்றேயென்ன அயிக்கியங்காட்டி நாலுவாக்கிய வுபதேசம்பெறினும் ஞானமடையாவிடிற் பயனின்றென வறிவித்ததாம், (௩௩)

(அவதாரிகை.)

சொரூபவிலக்கண வாக்கியங் கூறல்.

(கவி)

பேசு சொரூபத்தியல்கேள் சத்தியக்கியாஞனந் தப்பிரமமென்று, மாசகலுமானந்தோப்பிரமமென்று, மிரண்டு மொழியதின் முன்னேது, நாசமில்லாச் சத்தியாதிபதங்களினுற் பிரமமதைநாமரூப, லேசமறச் சத்தி யக்கியாஞனந்தப் பிரமமென்றே யியம்பலாமே.

(இ-ள்) பேசுமுற்கூறிய சொரூபத்தியல்பு, சொரூபத்தினிலக்கணத்தை, கேள்-கேட்பாய்-சத்தியக்கியானனந்தப் பிரமமென்று- சத்தியக்கியானனந்தப் பிரமமெனவும் ஆசகலும் குற்றமற்ற-ஆனந்தோப்பிரமென்றும்-ஆனந்தோப்பிரமமெனவும் இரண்டுமொழி சுருதியிலிருவாக்கியங்கள் கூறப்பட்டிருக்கின்றன - அதின் - அவ்விரண்டுவாக்கியங்களில் - முன்னோதும் முந்திமொழியப்பட்ட வாக்கியத்தின்-நாசமிலாச் சத்தியாதி கெடாதசத்து முதலிய பதங்களினால் - சொற்களினால் விசாரிக்குமிடத்தில் - நாமரூபலேசமற பெயருருவ மற்பமுமில்லாது நீங்குதலால் - பிரமமதை பிரக்ஞானம் பிரமமாதி நான்கு மகாவாக்கியங்களிலுங் கூறிபபிரம சொரூபத்தை - சத்தியக்கியானனந்தப் பிரமமென்று மெய்யுணர்வின்பமா யிருக்கின்ற பிரமமென இயம்பலாம் சொல்லக்கூடும் எ-று.

(ப-ம்) மனுடானந்த முதலிய பதினொருவகையான ஆனந்தம்போலத் துக்கமில்லாததென்பார் ஆசகலுமானந்தமெனவும்சத்தியக்கியானந்த லட்சணத்தினாற்பிரமத்துக்கு அசத்து சடதுக்கலட்சணமின்றாகுமென்பார் சத்தியாதி பதங்களினாற் பிரமமதை நாமரூபலேசமறவெனவும்-தினமுதற்பிரளய மீறாகச்சொல்லுங்காலங்களிலழியுந் தேகாதியுடன்றோன்றி யழியாமலொருபடித்தாயிருப்பதென்பார்- சத்தியமெனவு

ம்-சிருட்டி முதல் மோட்சவரையிலுள்ள சீவர்களுடைய கன்ம வினையை யறிந்தூட்டுவதென்பார் - ஞானமெனவும் - கன்மத்தினாலுண்டாகு மானந்தம்போலன்றி நிரதிசயானந்தமாயிருப் பதென்பார் ஆனந்த மெனவுங் கூறினர்.

(இ-ம்) இரண்டு வாக்கியங்கூறி முதலாவது வாக்கியத்தால் அஸ்திவாதிப் பிரியவிலக்கண முடையதே முற்கூறியபிரமமெனத் தெருவித்ததாம் (௬௪).

(அவதாரிகை)

இதுவுமது. கவி.

ஆனந்தோப்பிரமமெனு மிரண்டாம் வாக்கியத்தினாலகண்டாகார,வானந்தம் பிரமமாத்துன்பறியாவின்பமாமாதலாலே,யானந்தமானந்திபெனும் வடிவமிரண்டுமறவவு வில்லாத, வானந்தஞ் சீவனிடத்தாதலால் வாக்கியத்தினயிக்கியங்கூடும்.

(இ-ள்) ஆனந்தோப்பிரமமெனும் - ஆனந்தோப்பிரமமென்ற-இரண்டாம் வாக்கியத்தினால் இரண்டாவது மொழியினால் விசாரிக்குமிடத்தில்- துன்பறியா-

துக்கமில்லாத- இன்பமாயாதலாலே சுகமாயிருக்கின்ற படியினாலே-அகண்டாகாரவானந்தம்-பரிபூரணசுகமே பிரமமாம் - பிரக்ஞானம் பிரமமாதி நான்கு மகாவாக்கியங்களிலுங் கூறியபிரமசொரூபமாகும் - இப்படி சத்தியக்கியானானந்தமாயும் அகண்டாகார வானந்தமாயுமிருக்கின்ற பிரமசொரூபத்துக்கும் இத்தேகத்திலிருக்கின்ற கூடத்தருக்கும் - எங்ஙனமயிக்கியங் கூடுமெனில் ஆனந்தம்சுகம்-ஆனந்தி-சுகி-எனும்வடிவமிரண்டுமற-என்கிற இருவகைச்சொரூபமுமில்லாது-அளவில்லாதவானந்தம்-மட்டில்லாதவின்பும் -சீவனிடத்தாதலால்-கூடத்தரிடத்திலுமிருப்பதால் - வாக்கியத்தினயிக்கங்கூடும் - மகாவாக்கியங்களுக்கேகத்துவஞ் சித்திக்கும் எ-று.

(ப-ம்) விடயானந்தமு மதையனுபவிக்குஞ் சிதாபாசனுந் தூஷ்ணீ பூதாவஸ்தை முதலியதில்லாதபடியாற் கூடஸ்தரப்போது மகண்டானந்தவடிவமென்பார் ஆனந்தமானந்தியெனும் வடிவமிரண்டு மறவளவில்லாதவானந்தஞ் சீவனிடத்தென்றார்.

(இ-ள்) இரண்டாம் வாக்கியத்தாலகண்டாகாரவானந்த விலக்கணமுடையதே பிரமமெனத் தெரிவித்து வெல்லக்கட்டி பெரிதிற்போற் சிறிதில் ரசமிருக்கிறபடியே பிரமத்தைப்போற் கூடத்தரும் அகண்டானந்த

மாதலால் உடம்பு மோர்விரலுமென வேறுபோற் றோ
ற்றினு மிரண்டுமோரேதேகமா யிருத்தல்போலப் பிர
மமுங் கூடஸ்தருமென வேறுபோற் றோற்றினு மிரண்
டுமொன்றென வயிக்கியங்காட்டியதாம். (௩௫)

(அவதாரிகை.)

பிரதிபத்திவாக்கியங் கூறல்.

கலி

அத்துவித மிப்படியே கூடுதற்கு வாக்கியத்தின
டைவேயாசான் பத்திகொடு வீடுபெறுஞ்சீடனுக்குச்
சொல்பிரதிபத்திவாக்கிய, நித்தசுத்தபுத்தமுத்தசத்தி
யபரமானந்தாத்துவிதநீங்கா, வொத்தபிரமம் மகமஸ்
மியென் பரதன்பொருளுமுரைத்தும்யாமே.

(இ-ள்) இப்படியே-இவ்வண்ணமே வாக்கியத்தி
ன்-மகாவாக்கியத்தினுடைய அத்துவிதம்-ஏகத்துவம்
கூடுதற்கு - உண்டாதற்பொருட்டு அடைவே - முறை
யே ஆசான் - ஆசிரியர், பத்திகொடு-சிரத்தையுடன்
வீடுபெறும்-மோட்சமடையத்தக்க சீடனுக்கு-மாணா
க்கனுக்கு, சொல் உபதேசிக்கின்றபிரிதிபத்தி வாக்கிய

ம்-பிரிதிபத்திவாக்கியமானது, நித்தசுத்தபுத்தமுத்த சத்தியபரமானந்தாத்துவிதம்-நித்தப்-சுத்தம்-புத்தம் முத்தம்-சத்தியம்-பரமானந்தம்-அத்துவிதமெனவும், நீங்காவொத்த - பிரியாதுபொருந்திய, பிரமமகமஸ்மி யென்பர்-பிரமமகமஸ்மியெனவும், பத்துப்பதங்களா யிருக்கு மென்றுமேலோர்கூறுவார்கள், அதன்பொ ருளும்-அவ்வாக்கியத்தினருத்தமும், உரைத்துயாம்-நாங் கூறுகின்றோம் எ-று.

(ப-ப்) ஆப்தமுதலிய நான்குவிதப் பணிவிடை யென்பார்-பத்தியெனவும்-அவித்தியா நிவர்த்தியானந்த லாபமடையவே யிச்சிக்கு மதிதீவிர முமுட்சுவென் பார் வீடுபெறுஞ் சீடனெனவுங்கூறினர்.

(இ-ம்) பிரதிபத்திவாக்கியம் பத்து லட்சணமுள் ளபதங்களையுடைய தெனக்கூறி அதினுரைகூறத்து டங்கினதாம். (ந௬)

(அவதாரிகை)

மேற்கூறியலட்சணங்களின் தாற்பரிய சொரூப மேதானெனக்கூறல்,

(கவி)

எந்தைமொழிந்தது மஞ்ஞானமுமஞ்ஞானத்தினு ளவியல்புதானு, முந்தைபரமார்த்தமாயில்லை நமக்கதி னுமேலே முடிவாய்நின்றோ, மிந்தவகையவயவங்கணமத ன்று நமதுருவிங்கேதென்றோதி, லந்தவிந்தவாக்கியத் தினுற்றகுணமுடையதேததுவேவதாமால்.

(இ-ள்) அஞ்ஞானமும்- அறியாமையும், அஞ்ஞா னத்தினுளவியல்பும-அஞ்ஞானத்திசையினுள்ள சுபா வமும், எந்தைமொழிந்ததும் எமது பிதாவாகிய ஞா னுசாரிய ருபதேசித்ததும், பரமார்த்தமாய்-எதார்த்த மாய், முந்தை-அவ்வஞ்ஞானதிசைக்கு முன்பே, இல் லைநமக்கு-எமக்கின்றாகும், அதனுமேலே-ஆனதினுலே, முடிவாய்நின்றோம் -அவைகளுக்கு விலக்ஷணமாயிரு க்கின்றோம் விலக்ஷணமென்கின்றநீர்-கரசரணுதியவய வங்களுடனே யிருக்கின்றீரேயெனில், இநதவகைய வயங்கள் இவ்வதுப்பான வுறுப்புகள் நமதன்று-எம் முடைய அவயவங்களல்ல, இங்கு இவ்விடத்துநமதுரு நம்முடையசொருபம் ஏதென்று-யாதென, ஓதில்-வி னுவில் அந்த மகிமையுள்ள, இந்த வாக்கியத்தில், முற்கூறிய பிரதிபத்தி வாக்கியத்தினுள்ள, குணம்- நித்தசுத்தாதி லட்சணத்தை, உடைத்தானதாயிருக் கின்ற தியாதொருசொரூபமே, அதுவே-அச்சொருப மேயாகும் எ-று.

(ப-ம்) பிரமாதி தேவதைகளாலுங் கிட்டுதற்கரி தான பாவனுதீத சொரூபமே மானிடச்சட்டைசாத் தித் தனக்குக்கிட்டியதென்பார்-எந்தையெனவும் பழுதையிலா நாபிதமாய்த் தோன்றும்பாம்பும் அதனுலுண்டானமதிக்கயேதுவும் பாம்பில்லையென்னு மாப் தன்சொல்லுங்காலத்திலுங் காலத்திரயத்திலு மதிட்டானமாகிய பழுதையினிடத்தி லில்லாதுபோல அறியாமையும் அதன் காரியமான சரீராதிபயமாசை முதலியதும் அந்தவஞ்ஞானுதிகளுமில்லை நீ பிரமமென்கின்ற ஞானுசாரியருபதேசமு மதிட்டானமான தனக்குக் காலத்திரயத்திலுமில்லையென்பார் எந்தைமொழிந்தது மஞ்ஞானமு மஞ்ஞானத்தினுள வியல்பதானுமுந்தை பரமார்த்தமாயில்லை நமக்கெனவும் தேகாதி பிரவஞ்சம் பொய்சத்தியமாயிருக்கின்ற பிரமமே தானென்கின்ற ஞானத்துக்குத் தேகந்தான் பிரபஞ்சம் சத்தியமென்கிற வஞ்ஞானத்துக்கு மிதன்காரியங்களுக்கும் விலட்சணமா யிருக்கின்ரேமென்பார் முடிவாய் நின்ரேமெனவுங் கூறினர்.

(இ-ம்) பாதிருஷ்டிக்குப் பிராந்திபாற் ருேன்று மவயவவுருவந்தம தல்லவெனக்கூறியதாம். (௩௭)

(அவதாரிகை.)

மேற்கூறிய லட்சணங்களுக்குரைமையைத் தன்சுவா னுபவமாகக்கூறல்.

கவி.

இக்குணங்களுடையபரப் பிரமமேநாமானே மெ வ்வாறென்று, னெக்ககசுஞ திமெயனச்சனிப்புமரிப்பின் மையினு னித்தியமானோம், தொக்குடலம்போன்மலத் தின் றுவக்கற்றுவநின்றமையாற் சுத்தமானோ, மக்கர ணம்போனசிக்கு மறிவுபெறுமையிற் புத்தமானோநா மே.

(இ-ள்.) இக்குணங்கள்-இந்தநித்தசுத்தாதிலட்ச ணத்தை, உடைய-உள்ளதுவாகிய, பரப்பிரமமே-மே லான பிரமசொரூபமே, நாமானோம்-யாமாயிருக்கின் றோம், எவ்வாறென்றால் - எந்தவிதத்திலென்றுகேட்கி ல், நெக்க-கெட்டுப்போகின்ற, ககஞதிமெயன-ஆகாய முதலானவைகளைப்போல, சனிப்பு-உற்பத்தியும், மரி ப்பு-நாசமும், இன்மையினால்-இல்லாதபடியினால், நித் தியமானோம்-நித்தியலட்சணமுடைய சொரூபமே நா மாயிருக்கின்றோம், தொக்குடலம்-தோல்பொதிந்த ச ரீரத்தைப்போல-போன்று, மலத்தின்-அழுக்கின், துவக்கற்று-தொடர்ச்சியின்றி, நின்றமையால்-இருக்கின்ற

தினுல், சுத்தமானேம்-சுத்தலட்சணமுடைய சொரூபமேம நாமாயிருக்கின்றோம் - அக்காரணம்போல் - போன்று, நசிக்கு மறிவுபெருமையில் - அழிகின்ற ஞானமா யிராததினுல் புத்தம்-புத்தலட்சண முடைய சொரூபமேம நாம் - யாம் ஆனேம்- ஆயிருக்கின்றோம்- எ-று.

(ப-ம்)சடமாயுற்பத்திநாசமுள்ளதான ஆறுவகை பிரமத்துக்கும் பெரிதான பிரமமென்பார் பரப்பிரம மெனவும்-ஆகாசாதிகளும் சூட்சும சரீரமுஞ் சிருஷ்டியிலுண்டாய்ப் பிரளயத்தில் நசித்தலும் தூலசரீரமுண்டாகி நூறுவருடத்தில் நசித்தலும் அவித்தைமாயை தத்துவக்கியானவுதயத்தில் நசித்தலும்போல அகண்டமாயிருக்கிற தனக்குற்பத்தி நாசமில்லையென்பார்- நெக்கக கஞதியெனச் சனிப்புமரிப் பின்மையினு னித்தியமானே மெனவும் - தூலதேகமுதலிய முப்பத்தைந்து தத்துவத்துக்குமுள்ள இருவகைமலத்திற் பற்றியும் பற்றுதிருத்தல் தானென்பார் தொக்குடலும் போன் மலத்தின்று வக்கற்று நின்றமையாற் சுத்தமானேமெனவும் கடத்தைச்சுட்டி விட்டுப் படத்தைச் சுட்டும்போது அவ்வறிவு கெட்டுப் பழமையாவது போலக் கெடுதலற்று எப்போது மொரு தன்மையாயிருக்கு மறிவுதானென்பார் அக்காரணம்போன சிக்கு மறிவுபெருமையிற் புத்தமானேமெனவுங் கூறினர்.

(வி-ம்) ஆறுவகைப் பிரமமாவன - நான்குவன்ன த்திலும் பெரிதாயிருப்பதால்-பிராமணனொருபிரமம் நூலனைத்துக்கும் பெரிதாயிருப்பதால்- வேதமொருபி ரமம், மந்திரங்களுக்குப் பெரிதாயிருப்பதாற்-பிரணவ மொருபிரமம், தேவர்களுக்குப் பெரிதாயிருப்பதாற்- பிரமனொருபிரமம், அந்தப்பிரமனுக்குப் பெரிதாயிரு ப்பதால் விஷ்ணுவொருபிரமம், அந்தவிஷ்ணுவுக்கும் பெரிதாயிருப்பதால் - உருத்திரன் ஒருபிரமமெனவு மாம், முப்பத்தைந்து தத்துவத்தி னிருவகை மலமா வன, சர்மம்-உதிரம்- மாங்கிஷம்-நரம்பு - அஸ்தி மச் சையாகிய ஆறுதத்துவமான தூலதேகத்துக்கு வாத பித்த சிலேத்துமமும் - குறும்பி-சளி-கோழை-வேர் வை- மலசலாதியுமாம், வாக்குபாதம் பாணிபாயுருவு பஸ்தம் பிராணன் அபானனுதானன் வியானன் சமா னன் சுரோத்திரந்தொக்கு சட்சு சிங்குவையாக்கிரா ணம் தேயசுமனப்புத்தி சித்தம் ஆங்காரமாகிய இரு பதுதத்துவமான சூட்சும சரீரத்துக்குக் காமக்குரோ தாதியும் துர்பலம் ஊமை செவிடு மயக்கமாதியுமாம் அவித்தைக்கு அறியாமையும் வாசனையும் சீவனுக்குச் சுட்டறிவும், அவித்தையும் பஞ்சபூதத்துக்குச் சேறு கலங்கல் புகை புழுதியாயும் மலமூத்திர மழுக்கு னு ரையாதியும் மாயைக்குச் சகத்காரணமும் சர்வக்ஞா தியும் ஈசனுக்குக் கிருபையவதாராதியும் மாயைமா மெனவுங்கொள்க.

(இ-ப்) நித்தமுதலிய மூன்றும் லட்சணத்துக் குறைகூறியதாம். (௩அ)

(கவி)

அகங்கார விருத்தியெனப் பந்தமிலாமையின் முத்தமானேமிந்தச், சகம்போல விளக்குமிந்திர சாலமிலாதிருக்கையினற் சத்தியமானேஞ், சுகங்காணிற்றன்னையல்லாற் சுகமில்லையென்றே பரமானந்தமாகு, மிருங்காலதேசவஸ்துவெனப் பிரியாவானந்தவேடமானேம்.

(இ-ள்) அகங்கார விருத்தியென - அகந்தையின் றொழில்போல்பந்தமிலாமையின்-கட்டுப்படுதலில்லாததினல் முத்தமானேம் - முத்தலட்சணமுடைய சொரூபமே நாமாயிருக்கின்றோம் இந்தச்சகம் போலே-இப்பிரபஞ்சத்தைப்போல விளக்கும்-இந்திரசாலக்காரனலுண்டாக்கப்படும் இந்திரசால மிலாதிருக்கையினல் - மாயமாயில்லாதிருப்பதினல் - சத்தியமானேம் - சத்தியலட்சணமுடைய சொரூபமே நாமாயிருக்கின்றோம் சுகங்காணில்-இன்பத்தை விசாரித்துப்பார்க்குமிடத்தில் தன்னையல்லால் - தன்னைவிட சுகமுள்ளதென்று ஆனந்தமில்லையென் றனுபவமிருப்பதால் பரமானந்த

மாகும்-பரமானந்த லட்சணமுடைய சொரூபமே நா மாயிருக்கின்றோம், அன்றியும்-மிகும் பலவாயிருக்கி ன்ற காலதேசவஸ்து - காலங்களும் தேசங்களும் வஸ் துக்களும்என ஒன்றிலொன்றில்லாது பரிச்சேதப்பட் டிருத்தல்போல பிரியா-பரிச்சேதப்படா திருத்தலினல் ஆனந்தவேடமானேம், பரமானந்த சொரூபமே நாமா யிருக்கின்றோம்-எ-று.

(பு-ம்) திருடன் அன்னியபதார்த்தத்தைக் கவர் ந்து கட்டுப்பட்டுத் துன்புறுதல்போலச் சீவன் தனக் குரிய பிரமானந்தத்தைவிட்டு வுரித்தல்லாத விடயா னந்தத்தைப் பொசித்துப் பஞ்சகோசத்திற் கட்டுப் பட்டு சுகதுக்க மடைதல்போலின்றி யெப்போது நித் தியமுத்தனுபிருக்கப்பட்ட சொரூபநாமென்பார் அக ங்காரவிருத்தியெனப் பந்தமில்லாமையின் முத்தமா னேமெனவும், இந்திரசால சத்தியாலுண்டான இந் திரசாலப் பிரபஞ்சந் தோற்றியிருந் தழிவதையறிந் துகொண்டு மெய்யாயிருக்கின்ற இந்திரசாலக்காரன் போல அக்கியானத்தினு லாரோபமாய்ப் பிரபஞ்ச மு ண்டாயிருந் தழிவதைக்கண்டிருக்கும் அதிட்டான சொரூபநாமென்பார் இந்தச்சகம்போல விளக்கு மிந் திரசாலமில்லாதிருக்கையினுற் சத்தியமானேமெனவு ம் காணிமுதல் சீவன்வரையுள்ள எழுவகையுந் தன் ணைக்குறித்து விடப்படுவதால் தானேயவைகளுக்கு

மேலான பிரியசொரூபமென்பார், சுகங்காணிற் றன்னையல்லாற் சுகமில்லையென்றே பரமானந்த மாகுமெனவும், காலதேசவஸ்துவைக் குறித்துப் பரிச்சின்னமாயிருத்தல்போலின்றி யெல்லாக்காலதேச வஸ்துவிலுந் தான் அபரிச்சின்னமாயிருத்தலாலும் ஆனந்தசொரூபமென்பார் மிகுங்காலதேசவஸ்துவெனப் பிரியாவானந்தவேடமானே யெனவுங்கூறினர்.

(வி-ப்) எப்போதுங் கர்த்தா போக்தாவாய் தன்மாதன்மத்தினாற் பெத்தனாயிருப்பன் ஒருக்காலு முத்தனல்லவென்று கன்மகாண்டத்திற்குறித்த பிரமாதாவிற்கும் ஞானம் வருமுன் மலமாயாகன்மத்தாற் பெத்தனாயிருப்பன் ஞானம்வந்தபின்பு முத்தனாவனென்று உபாசனா காண்டதிற்குறித்த சீவனுக்கு மன்னியமாய் ஒருக்காலு மொருபந்தத்துடக்கு மற்றி நக்கின்ற நிருவிகாரசாட்சி சைதன்யமே நித்திய முத்தமெனவும் பரமானந்தமபோற் ீருற்றுங்-காணி வீடு மாடு ஆடு தன தானியாதி ராஜன் சோரன் கோளனாதியாற் பீடைவந்தவிடத்தில் விடுபட்டுக் கையிடைங்கின தனப்பிரியமாயதுவும் புத்திரனுக்கு வியாதி விலங்குற்றதைத் தீர்க்கச்சிலவு செய்யுமிடத்தில் விடுபட்டுப் புத்திரன் பிரியமாய்ப் புத்திரனு மிவனுடன் குளிருந்த வீடு தீப்பற்றியவிடத்தும் அவனைக்குறித்துத் தனக்கு விலங்காதி யுற்றவிடத்துந் தன்றேகத்தைக் காப்பாற்

றுகின்றதைக்குறித்து விடப்படுவதாற் றேகம் பிரிய மாய் அதுவுந் தூளிக்காற்று கொதுகாதி யுற்றவிடத்தி லிந்திரியங்களைப் பேணுகின்றதைக் குறித்து விடப்ப டுவதா லிந்திரியம் பிரியமாய் அதுவும் யோசனை தியா னஞ்செய்யும்போது மனது யேகாக்கிரகப்படச் செய் கின்றதைக் குறித்து அடக்கிவிடப்படுவதா லந்தக்கர ணம் பிரியமாய் அதுவும் நித்திரை மறேலையஞ் செய் யுமிடத்திற் சீவனுக்குச் சுகமுண்டாக்குகின்றதைக் குறித்து விட்சேபமான சங்கற்பத்தெயொடுக்கிவிடப் படுவதால் சீவன் பிரியமாய் அச்சீவனும் மரணவேத னைப் படுங்காலத்திலு மொன்றைச் சுட்டுப்போதுஞ் சீவத்துவநீங்கி அசங்ககூடத்தராகிய தானே யவைக ளுக்கு எல்லா மேலானபிரிய சொரூபமெனவுங் கொ ள்க.

(இம்) முத்தமுதலிய மூன்றுலட்சணத்துக்குரை கூறியதாம். (௩௧)

(அவதாரிகை)

இதுவுமது. கவி.

தோற்றிய வான்பொருள்களெல்லாந் தானகத் தோற்றலினத்துவிதமானே, மாற்றலுடையார்களிவ்

வாறகண்டமுந் தாமல்லாவானந்தமாதல், போற்றுபிர மச்சொருப சமாதியென்பரதைச் சுருதிபுகலும் வாக்கிய, மேற்றிலகம் பிரமேவாவஸ்மியெனு மிதனையினி யியம்பக்கேண்மோ.

(இ-ள்) தோற்றிய-தனக் கன்னியம்போற் காணப்பட்ட-வான்பொருள்களெல்லாம்-ஆகாசாதி வஸ்துக்களனைத்தும் தானாக-தன்சொரூபமாக - தோற்றலின்-காணப்படுதலின்-அத்துவிதமானேம்-அத்துவித லட்சணமுடைய சொரூபமேனாமாயிருக்கின்றோம்- ஆற்றலுடையார்கள் - திடமுள்ளஞானிகள்-இவ்வாறு இந்தப்பிரகாரம் - அகண்டமும் - அபரிச்சின்னமாயிருத்தலாலும்-தாமல்லா-தாமாகாத-ஆனந்தமாதல் - இன்புருவாகின்றது-போற்று யாவருந் துதிக்கும் பிரமச்சொரூப பிரமாகார சமாதியென்பார் நிஷ்டையெனக் கூறுவார்கள் அதை-அச்சமாதியை சுருதி-வேதமானது புகலும்-சொல்லாநின்ற வாக்கியம்- வாக்கியத்தை ஏற்றில் சொல்லுமிடத்தில் அகம் பிரமேவா அஸ்மியெனும் அகம்பிரமேவா அஸ்மியென்றுகூறும் -அச்சமாதியையடையுங் கிரமமியாதெனில் இதனை - இச்சமாதியைபடையுங் கிரமத்தை இனி-இப்பால் இயம்பக்கேள் சொல்லுகின்றோ முற்றுக்கேட்பாய்-எ-று.

(ப-ம்) தெரிந்தவனுக்குப் பொன்னின் காரியமான கடக மகுடகேயூர குண்டலாதிக ளன்னியம்போற்

றேற்றினும் பொன்னாய்த்தெரிவதுபோலவும் மண்ணி ன்காரியமான கடகல சகுதிராதிக ளன்னியம் போற் றேற்றினும் மண்ணாய்த்தெரிவதுபோலவும் இரும்பி ன்காரியமான ஈட்டி பாலா அரிவாளாதிக ளன்னியம் போற்றேற்றினும் இரும்பாய்த் தெரிவதுபோலவும் சிதாகாச சொரூபமாகிய தன்னுடைய விவர்த்தமான சீவேஸ்வர சகத்தெல்லா மன்னியம்போற் றேற்றினு ஞ் சுவானுபவத்தினாற் றன்மயமாய்க் காணுதலினத் துவித சொருபந்தானென்பார் தோற்றியவான் பொ ருள் கவிஎல்லாந் தானாகத்தோற்றலினத்துவிதமானே மெனவும், அஞ்ஞானியானவ னூறுபேரைச் செயிக் கும் வலியுள்ளவனாயினுந் தேகம், ஸ்திரீயாதிகளேயா

னெனதென்கின்ற புத்தியாலும் அபிமானத்தாலும் அவ்வகளுக்குச் சுகதுக்கம் வந்தபோது கலங்குதல் போலின்றித் தேகாதியைப் பொய்யாகவும் பிரமமே தானாகவுங் கண்டிருக்கையால் எதற்குச் சுகதுக்கம் வந்தாலுங் கலங்காத வலுவுள்ள ஞானிகள் சர்வமுந் தானாகக் காணலும் விவகாரத்தன்றிப் பரமார்த்ததில் இல்லாமையால் அத்தன்மைய தோற்றமுமில்லாத வானந்தத்தை யடைதலானது ஜனன மரணத்தைக் கொடுக்கும் உபாசனை யோகஞ்சமம் ஆகிய விம் மூன் றுவகை யஞ்ஞான சமாதிபோலின்றிச் சனன மரணத் தை நீக்கு ஞானசமாதியிதுவென யாவருந் துதிக்கப்

பட்ட பிரமாகாரநிட்டையெனச்சொல்வார்களென்பார் ஆற்றலுடையார்களிவ்வா றகண்ட முந்தாமல்லா வானந்தமாதல் போற்று பிரமசொரூப சமாதியென்ப வெனவுங் கூறினார்.

(இ-ம்) அத்துவிதலட்சணத்துக்குரைகூறி மற்ற மூன்றுலட்சணமுடையது சமாதியெனத் தெரிவித்தலாம். (௪௭)

(அவதாரிகை.)

சிரவணாதி கூறல்.

(கவி.)

இந்தமொழிவழிகேட்டல்சிந்தித்தறெளிதனிட்டையின்பங்கூடல், சந்ததந்தானயிருத்தலேந்தின்முதற் கேள்வியென்பதாசான்வார்த்தை, யந்தவசனார்த்தமனத்தாராய்வேசிந்தித்தலருத்தமியாவுந், தொந்தமறபகுத்துணர்ந்துதெளிவதுவேதெளிவெனவுஞ் சொல்வர்தாமே.

(இ-ள்) இந்தமொழி-முற்கூறியவகம் பிரமேவா. அஸ்மியென்னும் வாக்கியத்தை-வழி-கிரமமாக கேட்

டல் - சிரவணஞ் செய்தல் சிந்தித்தல்-மனனஞ்செய்தல்-தெளிதல் நிதித்தியானஞ் செய்தல் நிட்டையின்பங்கூடல்-சுகமுண்டாகின்ற சமாதிகூடுதல் -சந்ததந்தானுயிருத்தல்-எப்போதுஞ் சர்வமுந் தானுயிருக்கின்ற சாட்சாத்கார மடைதலாகிய, ஐந்தின்-இவ்வைந்தில், முதற்கேள்வி யென்பது-முந்தின சிரவணமென்றது, ஆசான்வார்த்தை- குருவினிடத்தி லுபதேசமுஞ் சாத்திரார்த்தமுங் கேள்விப்படுதலென்றும், அந்தவசனார்த்தம்-அக்குருவாக்கியப்பயனை, மனத்தாராய்வே-உள்ளத்துசாவறே, சிந்தித்தல்-மனனமென்றும், அருத்தமியாவும் - அப்பொருளனைத்தையும், தொந்தமறதுவிதபுத்திநீங்கும்படி, பகுத்துணர்ந்து-பிரித்தறிந்து, தெளிவதுவே-தேர்தலே, தெளிவெனவும்- நிதித்தியாசனமென்றும், சொல்வர்-மேலோர் கூறுவார்கள் எ-று.

(ப-ம்) ஆசாரியரிடத்தின் மகா வாக்கியோபதேசம்பெற்றுப் பரமாத்துவிதப் பிரமசொருபத்தை உபக்கிரமம்-உபசங்காரம்-அப்பியாசம் - அபூர்வதைபலம்-அருத்தவாதம்-உற்பத்தி-ஆகிய இவ்வாறு லிங்கத்தினாலும் அர்த்தவிசாரஞ்செய்தல் சிரவணமென்பார் கேள்வியென்ப தாசான் வார்த்தையெனவும், ஏகாந்தத்திலிருந்துகொண்டு யுக்திதர்க்க மனுமானத்துடன் குதற்கமன்றியிற் சிரவணார்த்தங்களைச்சிந்தித்து நிச்ச

யித்தல் மனனமென்பார் அந்தவசனார்த்த மனத்தராய் வே சிந்தித்தலெனவும் அபிக்கியசொரூபமே தானென்று தைலதாரைபோலச் சாத்திகவிருத்தியுடனே சதாத்தியானம் பண்ணுகிறதே தியானமென்பார் அருத்தமியாவுந் தொந்தமறப் பகுத்துணர்ந்து தெளிவதுவே தெளிவெனவுங்கூறினர்.

(இ-ம்) ஐந்து சௌபானக்கிரமநாமங் கூறியதின் மூன்றினிலக்கணத்தைத் தெரிவித்ததாம். (சக)

(கவி)

நேராகத்தோற்றுகின்ற துவிதமறந் தொழியாத நிட்டைகூட, லாராலுமறியவொண்ணுவத்துவிதமுங்கடந்தங்கப்பாலேதுஞ், சாராத சொச்சொரூபமாத்திரமாயிருத்தலது சாட்சாத்காரந், தூராதிதூரமென நான்மறையின் முடிவுறைக்குந் தொன்மையாமே.

(இ-ள்) நேராகத் தோற்றுகின்ற-எதிராகக் காணப்படுகின்ற, துவிதமறந்து-இருமைத்தோற்றத்தையயர்ந்து, ஒழியாத நிட்டைகூடல் - நீங்காத சமாதிகூடுதல், ஆராலும் - இயாவராலும், அறியவொண்ணு - உணரக்கூடாத, அத்துவிதமுங்கடந்து - இரண்டற்ற சமாதியையும் நீங்கி, அங்கப்பால்-அதற்குமேல், ஏதுஞ்சாராத இயாதுப்பொருந்தாத, சொச்சொரூபமாத்

திரமாய் - சுயம்பிரகாச சொருபமேயாக, இருத்தல்-இருக்கின்றது, சாட்சாத்காரம்-சாட்சாத்கார மடைதலாம், தூராதி தூரமென-அப்பாலுக்கப்பாலென்று, நான்மறையின் முடிவு - இருக்காதி நான்குவேதத்தினந்தமாகிய வுபநிடதத்துக்குள் உரைக்கும்-கூறுகின்ற, தொன்மையாம் - பழமையாகிய நிலையிதுவேயாம் எ-று.

(பஃம்) சாக்கிர சொப்பனத்தில் விருத்தியுண்டானபோது துக்கமுற்றவர்கள் சுழுத்தியிலவ்விருத்தியற்றபோது சுகமடைதல்போலத் தியானிக்கின்ற விருத்தியும் பாலிற்கலந்த சலம்போற் சொரூபத்திற் கரைந்து ஆனந்தமடைதலே சமாதியென்பார், நேராகத் தோற்றுகின்ற துவிதமறந்தொழியாத நிட்டைகூடலெனவும் மூன்றாம்பூமி வரையடைந்த அப்பியாசிகளாலுமறியக்கூடாததாய்ச் சுத்தசத்துவ விருத்தியுஞ் சொரூபாகாரமாய்க் கரைந்திருக்குஞ்சமாதியும் விவகாரமாதலாலதையுநீக்கி அஞ்ஞானத்தையுநீக்கு மகண்டாகார ஞானமும்பொருந்தாத சொப்பிரகாசமாயிருத்தல் சகசமென்பார் ஆராலுமறியவொண்ணு வத்துவிதமுங் கடந்தங் கப்பாலேதுஞ் சாராத சொச்சொருப மாத்திரமாயிருத்தலது சாட்சாத்காரமெனவும் பிரமாதிதேவதைகளாலும் அறியக்கூடாததாய் எவ்விதமானவர்க்கும் முகபாவத்தை யடைவதாயிருக்கு மங்

நிலையே பழமையான நிலையென்பார் தூராதி தூரமெ ன நான்மறையின் முடிவுரைக்குந் தொன்மையாமெ னவுங் கூறினர்.

(இ-ம்) மற்றவிரண்டினிலக்கணமுங்கூறிச் சகசமேபண்டநிலையெனத் தெரிவித்ததாம். (சஉ)

(அவதாரிகை.)

இச்சாட்சாத்கார மடைதற்கு வேறு அப்பியாச முளவோவெனில்.

கலி.

சங்கற்பம் விகற்பநிர் விகற்பமே சாற்றுங்காலை,
சங்கற்பந்தன்னின்மூன்று தகுவிகற்பத்தின் மூன்று,
சங்கற்பமாதிநிர்வி கற்பத்தின்மூன்றுந்தேரிற், சங்கற்
பம் விகற்பநிர்வி கற்பமாஞ்சாட்சாத்காரம்.

(இ-ள்) சங்கற்பம்-சங்கற்பமும்-விகற்பம் - விகற்பமும், நிர்விகற்பம்-நிருவிகற்பமே, அச்சாட்சாத்காரமடைவதற்கு வேறப்பியாசமாகும், இவைகளில் பேதமுமுளவோவெனில், சாற்றுங்காலை-அவைகளின்பேதத்தைச் சொல்லுமிடத்து சங்கற்பந்தன்னின் மூன்று ச்ங்கற்பத்திற் சங்கற்பம், சங்கற்பத்தில் விகற்பம்- சங்

கற்பத்தில் நிருவிகற்பமென்ற மூவகையும் தகு-பெருமைபொருந்திய, விகற்பத்தின் மூன்று - விகற்பத்திற் சங்கற்பம், விகற்பத்தில் விகற்பம் - விகற்பத்தில் நிருவிகற்பமென்ற மூவகையும், சங்கற்பமாதி நிருவிற்கற்பத்தின் மூன்று, நிருவிகற்பத்திற்-சங்கற்பம், நிருவிகற்பத்தில் விகற்பம்-நிருவிகற்பத்தில் நிருவிகற்பமென்ற மூவகையும் பேதங்களாம் இவைகளிற் சாட்சாத்காரந் தருவதியாதெனில், தேரில்-விசாரிக்குமிடத்தில், சங்கற்பம்-சங்கற்பத்தில் நிருவிகற்பமும், விகற்பம்-விகற்பத்தில் நிருவிகற்பமும், நிருவிகற்பம்-நிருவிகற்பத்தில் நிருவிகற்பமும், சாட்சாத்காரம்-சாட்சாத்காரத்தைத் தருகின்றதுகள், ஆம்-ஆகும். (௩௫)

(இ-ம்) அப்பியாசக்கிரமஞ் சங்கிரகமாகத் தெரிவித்ததாம்.

(அவதாரிகை)

சங்கற்பத்திற் சங்கற்பாதிக் குறைகூறல்.

கவி.

சங்சகற்பந்தனிற்சங்கற்பந்தான் கிரியாதிநாடல்
சங்கற்பந்தனிலவிகற்பந்தான்றுறவதனில்மூழ்கல்
சங்கற்பநிருவிகற்பந்தானேதானென்றிபேசல்
சங்கற்பமாதிமூன்றுந்தவிர்தமேலவிகற்பந்தானும்.

(இ-ள்) சங்கற்பந்தனிற்சங்கற்பம் - சங்கற்பத்திற் சங்கற்பமாவது, தான் கிரியாதிநாடல்-தானே சரியையாதிகளைச்செய்து தத்துவபேதத்தை நோக்குதலாம், சங்கற்பந்தனில் விகற்பம் - சங்கற்பத்தில் விகற்பமாவது, தான்றுறவதனின்மூழ்கல் - சரீராதியைத்தானல்லவென்று நீக்கி நீக்கினபடியே நிற்றலாம், சங்கற்பநிருவிகற்பம் - சங்கற்பத்தில் நிருவிகற்பமாவது தானே தானென்றுபேசல்-ஆத்மாவேதானெனக் கூறுதலாம், சங்கற்பமாதி மூன்றுந்தவிர்தலே-சங்கற்பத்திற் சங்கற்பஞ்-சங்கற்பத்தில் விகற்பம்-சங்கற்பத்தில் நிருவிகற்பம் ஆகிய மூவகையப்பியாசத்தையும் நீங்குதலே-விகற்பமாம் விகற்ப அப்பியாசமாம்-எ-று.

(ப-ம்) உழவாதி யிகலோக கிருத்தியங்களையும் யாகாதி பரலோக கிருத்தியங்களையும் காமியார்த்தமாய்ச் செய்வதாகிய சங்கற்பமுடையவன் நிட்காமியமாய்ச்சரியைகிரியை யோகங்களைச்செய்து சித்தசுத்தியுமேகாக்கிரமும் பெற்றுச் சாதன சதுட்டயம் பொருந்திச் சற்குருவையடைந்து ஆத்மாநாத்ம விவேகமாகிற சிரவணஞ்செய்து இருபத்தொன்பது தத்துவங்களின் றன்மையறிதல், சங்கற்பத்திற் சங்கற்பமென்பார் சங்கற்பந்தனிற் சங்கற்பந்தான் கிரியாதி நாடலெனவும், சிரவணபெலத்தினாலும் மனனத்தாலுந்தூலமுதலிய சரீரத்திரயம் அவஸ்தாத்திரயம்அபிமான

த்திரயமாகிய வொன்பதுந்தானல்லவென்றுநீக்கி அப்படிநீக்கினதை மறுபடி தானென்னுபவிருப்பதே சங்கற்பந்தனில் விகற்பமென்பார் சங்கற்பந்தனில் விகற்பந்தான்றுறவதனின் மூழ்கலெனவும், அம்மனனபலத்தினால் அவ்வொன்பதையுமறிந்துநீக்கி விலட்சணமாயிருக்குஞ்சாட்சியே தானென்ன அனுசந்தானஞ்செய்துவருவதுமன்றி யார் கேட்கினும் அப்படியே சொல்லுதல் சங்கற்பத்தில் நிருவிகற்பமென்பார் சங்கற்ப நிருவிகற்பந்தானே தானென்று பேசலெனவும் தியானத்தாலொருதேகத்தில் சாட்சிதானென்பதையும்விட்டுச்சிருட்டியாதிகள்செய்யு மீசுவரன்றானென்ன இருப்பது விகற்பமென்பார் சங்கற்பமூன்றுந் தவிர்தலே விகற்பந்தானுமெனவுங்கூறினார்.

(இ-ம்) இவ் வப்பியாசஞ் செய்பவன் புண்ணிய பாவசுகதுக்காதிகள் தனக்கில்லையென்று விலட்சணமாயிருப்பனென்பதாம். (சச)

(அவதாரிகை)

விகற்பத்திற் சங்கற்பாதிக் குறைகூறல்.

(கவி)

விகற்பத்திற்சங்கற்பந்தான்மிகுந்துறவாகி நிற்றல்
விகற்பத்தில்விகற்பமந்தவிரத்தியிற்பற்றிலாமை
விகற்பத்தில் நிருவிகற்ப மெய்யுணர் வெங்குமாதல்
விகற்பத்தின் மூன்றுந்தேர்ந்துவிடுதலேநிருவிகற்பம்.

(இ-ள்) விகற்பத்திற் சங்கற்பம்-விகற்பத்திற் சங்கற்பமாவது-மிகுந்துறவாகிநிற்றல், சமஷ்டி-சரீராதியைத்தானல்லவென்று நீக்கியிருத்தலாம், விகற்பத்திலவிகற்பம் - விகற்பத்தில் விகற்பமாவது - அந்தவிரத்தியிற்பற்றிலாமை, அங்ஙனந் துறந்ததில்-வாசனேயற்றிருத்தலாம், விகற்பத்தில் நிருவிகற்பம், விகற்பத்தில் நிருவிகற்பமாவது-மெய்யுணர் வெங்குமாதல்-எவ்விடத்துமுள்ள சத்தியக்கியான சொரூபந்தானுதலாம், தேர்ந்து-பிரபஞ்சமுந் தானெனன்றறிந்து, விகற்பத்தில்மூன்றும்-விகற்பத்தில் சங்கற்பம் விகற்பத்தில் விகற்பம் விகற்பத்தில்நிருவிகற்பமாகிய மூவகையப்பியாசத்தையும் விடுதலே-நீங்குதலே, நிருவிகற்பம் - நிருவிகற்ப அப்பியாசமாகும்-எ-று.

(ப-ம்) சந்ததத்தியானத்தினுல் விராட்டாதியொன்பதும் உற்பத்தியானதாயுந் தன்னுலறியப்படுவதாலன்னியமாயு மிருப்பதாற் றானல்லவென்றிருப்பது விகற்

பத்திற் சங்கற்பமென்பார், விகற்பத்திற் சங்கற்பங்காண்மிருந்தூறவாகி நிற்றலெனவும், சந்ததத்தியான பலத்தினால் தானல்லவென்றுவிட்ட அவ்வொன்பதும் உற்பத்தியானது அழியுமாகையாற் பொய்யாயுந் தன்னையறியாதாகையாற் சடயாயும் இருப்பதாலவைகளிற் ருனொன்று வாராதிருத்தல் விகற்பத்தில் விகற்பமென்பார் விகற்பத்தில் விகற்பமந்த விரத்தியிற் பற்றிலாமையெனவும், சமாதியினால் சத்தியஞானமாய்ச் சர்வசாட்சியாயிருக்கப்பட்ட பிரமந்தானென்றிருத்தல் விகற்பத்தில் நிருவிகற்பமென்பார், விகற்பத்தில் நிருவிகற்பமெய்புணர்வெங்குமாதலெனவும் பொய்யென்று நீக்கின பிரபஞ்சத்தையுஞ் சமாதிபலத்தினாற் சர்வாத்மகசொரூபமான தன்னைவிட வேறல்லவென்று கண்டிருத்தல் நிருவிகற்பமென்பார் விகற்பத்தில் மூன்றுந் தோர்ந்துவிடுதலே நிருவிகற்பமெனவுங் கூறினார்.

(இ-ப்) இவ்வப்பியாசஞ் செய்தவன் ஜகத்திற் சத்திற் சத்தியபுத்தி நீங்கியிருப்பனென்பதாம். (சரு)

(அவதாரிகை)

நிருவிகற்பத்தில் சங்கற்பாதிக் குறைகூறல்.

கவி

நிருவிகற்பத்திற் சங்கற்பநித்தியான்ந்தமாதல்
நிருவிகற்பத்தில் விகற்பம் நிரானந்தமாகி நிற்றல்
நிருவிகற்பத்தில் நிருவிகற்பமே நிற்குநேர்மை
நிருவிகற்பத்தின் மூன்று நீங்கலே நிராமயந்தான்.

(இ-ள்) நிருவிகற்பத்தில் சங்கற்பம் - நிருவிகற்பத்திற் சங்கற்பமாவது-நித்தியானந்தமாதல், நிலையான வின்புருவாதலாம் - நிருவிகற்பத்தில் விகற்பம்-நிருவிகற்பத்தில் விகற்பமாவது நிரானந்தமாகிநிற்றல், அச்சுகமுமற்றிருத்தலாம் நிருவிகற்பத்தில் நிருவிகற்பம்-நிருவிகற்பத்தில் நிருவிகற்பமாவது நிற்குநேர்மை, விருத்தி சூட்சுமமா யிருக்கின்றதாம் நிருவிகற்பத்தில் மூன்றும் நிருவிகற்பத்தில் சங்கற்பம் நிருவிகற்பத்தில் விகற்பம் நிருவிகற்பத்தில் நிருவிகற்பம்ஆகிய மூவகை யப்பியாசத்தையும் நீங்கலே-தவிர்தலே நிராமயம்-நோயற்ற நிலையாம்-எ-று.

(ப-ம்) அந்த நிருவிகற்பசமாதி பெலத்தினாற் சர்வமுந் தானாகக் கண்டவிருத்தியும் பாலிற்கலந்த சலம் போலக்கரைந்து மெய்யான பிரமானந்தந் தானாயிருத்தல் நிருவிகற்பத்திற் சங்கற்பமென்பார் நிருவிகற்பத்திற் சங்கற்பம் நித்தியானந்த மாதலெனவும் அவ்வான

ந்தமும் தன்னிடத்தில் கற்பிதமென்று நீங்கிநிற்றல் நிருவிகற்பத்தில் விகற்பமென்பார் நிருவிகற்பத்தில் விகற்பம் நிரானந்தமாகி நிற்றலெனவும் அவ்வாசனையு மிறந்து விருத்தி அதிசூட்சுமமாயிருத்தல் நிருவிகற்பத்தில் நிருவிகற்பமென்பார் நிருவிகற்பத்தில் நிருவிகற்பமே நிற்கு நேர்மையெனவும் எப்போது மிருந்தபடியே யிருத்தல் சாட்சாத்காரமென்பார் நிருவிகற்பத்தின் மூன்று நீங்கலே நிராமயந்தானெனவுங் கூறினார்.

(இ-ம்) இவ்வப்பியாசஞ் செய்தவன் சங்கற்பமற்றுச் சகசானந்தமா யிருப்பனென்பதாம். (சஙு)

(அவதாரிகை)

சீவன் முத்தர்களுக்குப் பிராரத்தம் புசித்துத் தீரவேண்டுமே புசிக்கின் மனம் விரியுமே அதனான் ஞானத்துக் கானியில்லையோ வென்னின்.

கவி.

இப்படியே பெரியோர்களி நக்குமிடத்தஞ் ஞானிக்கின்பமான, மெய்ப்பரிசைமறந்து மொன்றை விரும்புதல் போலிவனிதயம் விரிகின்றானுந், தப்பறவேசை

நன்யத்து வக்கான பொருளனு சந்தானத்தோடுஞ், செப்புமதன் வழித்தான காரியத்தும் விரிதன்மிகத் தெளிவென்பாரால்.

(இ-ள்) இப்படியே - இங்குரைத்த சாட்சாத்கார வனுபவமாகவ்வ பெரியோர்கள்-மகான்கள் இருக்கு மிடத்து-இருக்குங்காலையில், மெய்ப்பரிசை-சரீர சுபா வத்தை, மறந்தும்-அயர்ந்தும், அஞ்ஞானிக் கின்ப மான-அறிவிலிக்குப் பிரியமான, ஒன்றை-ஓர்விடயத் தை, விரும்புதல்போல-இச்சிக்கின்றதுபோல, இவனி தயம்-இஞ்ஞானிய துள்ளமானது, விரிகின்றாலும்-பர விறலும், தபபறவே-பிசகாதபடி, சைதன்னியத்துவக் கானபொருள்-ஐக்யசித்து ரூபவஸ்துவின், அநுசந்தா னத்தோடும்-அனவரத் தியானத்துடனே, செப்பும்-கூறிய, அதன்வழித்தான-அவ்விஷயமார்க்கமான, காரி யத்தும்-தொழில்களிலும், விரிதல் மனம் விரிகின்றது, மிகத்தெளிவென்பார்-மிகவுந் தெளிதலெனச் சத்துக் கள் கூறுவார்கள்-எ-று.

(ப-ம்) ஆயுளாதியினற் பெரியவராயிருப்பதின்றி மகத்தான சொரூபமே தானயிருக்கும் அப்பிரதிபந் தாபரோட்சக்கியானத் தால்மகாத்துமாவா யிருப்பவர் களென்பார் பெரியோரெனவும்-ஆவேசம் வந்தவன் தேகத்தை மறந்து ஆவேசவசமா யிருந்து பேசல்

செய்தலாதி விவகாரம் பண்ணுதல் போலவும் சுத்த வீரன் தேகத்தை யதில் வெட்டுப்படுங்காயந்தெரியாத படி மறந்து வீரத்தன்மையின்வசமாயிருந்துகொண்டு எதிராளியை வெட்டுதலாது விவகாரஞ்செய்தல்போலவும் மடலூருங்காமியானவன் தன் தேகத்தைப் பனங் கருக்கறுப்பதுதெரியாதபடி அத்தேகத்தைமறந்துகாம வசமாயிருந்துக்கொண்டு தா நெருங்கியஸ்திரீயைப் புகழ்தல்முதலிய செய்தல்போலவும் ஞானிகள் தேகத்தை யதுலுறுஞ்சுகதுக்கந்தெரியாதபடி மறந்துபிரமந்தானாயிருந்துக்கொண்டு விவகாரஞ்செய்வாரென்பார் அஞ்ஞானிக்கின்பமான மெய்ப்பரிசைமறந்து மொன்றை விரும்புதல்போலிவனிதயம்விரிகின்றலெனவும்-பர புருடனே நச்சியநாரியானவள் தன் புருட னுக்குப் பணிவிடைசெய்யும்போதும் பரபுருடனிடத்தில் மனதழுத்தமாயிருத்தல்போலவும் தீபமானது எண்ணெயைச்சாப்பிட்டுக்கொண்டு அதிகமாகப்பிரகாசித்தல் போலவும் ஞானிகள் சர்வாதிட்டமாயுஞ் சர்வாத்மகமாயுமிருக்கின்ற பிரமமேநாமென்னுஞ்சிந்தனையுட னிருந்துகொண்டு விடயவிவகாரஞ்செய்வதும் நம்மிடத்து லேசுகற்பிதமிதுவுநாமேயென்கின்றவனுசந்தானத்தாலவர்கள் அனுபவுங் குறைவின்றித்திடப்படுமென்பார் தப்பறவேசைதன்னியத்துவக்கான பொருளனுசந்தானத்தோடுஞ்செப்புமதன்வழித்தான காயத்துவிரிதன்மிகத்தெளிவெனவுங்கூறினர்.

(இ-ம்) சீவன் முத்தர்கள் பிராரத்துவப்புசிக்கும்படி மனதேசு தேசமாய் விரியினுந்தாங்கள் பிரமமென்கின்ற நிலைவிடாதிருத்தலால் ஞானத்துக்கனு கூலமேயென்றி ஆணியின்றெனபதாம் (சஎ)

(அவதாரிகை)

நிட்பிரபஞ்ச சொரூபத்தைத் தேகத்தோடிருந்து எவ்வாறு அடையாலமெனவினுவலுமதற்குத் தாமுங் கூறல்

கவி

தேகாதிகாரிங்களெல்லாந் தானல்லாத சிற்சொரூப, மாகாயமிருக்கையிலேகூடுமோ விடயமெலா மாளிற்றேக, மாகாயமாய் விடுமேயென்பாயே லஞ்ஞானிக்கமலவாய்மை, யேகானுபூதிசொன்ன லேறு தேதன்விடையத் திச்சைபோலும்,

(இ-ள்) தேகாதிகாரியங்களெல்லாம்-சரீரமுதலான காரியங்களாயிருக்கின்ற பிரபஞ்சங்களனைத்தும், அல்லாத-ஒழிந்த, சிற்சொரூபம்,-ஞானவடிவமானது, மாகாயமிருக்கையிலே-தூலசரீரமிருக்கின்றபோது, கூடுமோ-அடையப்படுமோ விடயமெலாம் - திரிசியங்களனைத்தும், மாளில்-நசிக்கின் அடையப்படுமெனில்,

அங்ஙனம் நசிக்குமிடத்தில், தேகம்-சரீரமும், ஆகாயம்-விசும்புபோல, ஆய்விடுமே- சூனியமாய்விடுமே, அப்போதச்சொரூபத்தை யெதனாலடையப்படும், என்பாரேயல்-என்றுசங்கிப்பாயானால், அஞ்ஞானிக்கு-அறிவில்லாதவனுக்குஏகானுபூதி-அத்துவிதானுபவத்தை, சொன்னால்-கூறினால், அமலவாய்மை அந்தநிர்மலவசனமானது, தன்விடயத்திச்சைபோலும்-தனதிச்சாவிடயம்போல, வருது-மனதில்நுழையாதுஎ-று.

(ப-ம்) அஞ்ஞானகற்பிதமான இல்லாதநாமரூபப்பிரபஞ்சத்தை யிதுவில்லையென்பதாக லயப்பண்ணும்படி வேதோபதேசமு மப்படியே பெரியோர்செய்தவனுபவமுமிருக்கப் பிரபஞ்சத்தை யுண்மையாய்ச்கருதிக்கொண்டு நிட்பிரபஞ்ச சொரூபத்தை யெப்படியடையலாமென்று மூடசங்கையைக் கேட்பாயேலென்பார்-தேகாதிகாரியங்களெல்லாந்தானல்லாதசிற்சொரூபம் மாகாயமிருக்கையிலே கூடுமோவிடயமெலாமாளிற்றாறக மாகாயமாய்விடுமே யென்பாயேலெனவும் அத்துவிதானுபவம் நிராசையுள்ள முமூட்சுவுக்குக்கூறினால் மனதிற்றேற்றுமேதவிர விடயவாசையுள்ளவருக்குக்கூறிற்றெறியாதென்பார் அஞ்ஞானிக் கமலவாய்மையேகானுபூதி சொன்னாலேருந்த தன்விடயத்திச்சைபோலுமெனவுங்கூறினார்.

(இ-ம்) சொப்பன பிரபஞ்சம்போலக் காலத்திரயத்திலுமில்லாத சோபாதிகமான தேகாதிபிரபஞ்சத்தையிதுவில்லையென்று புத்தியாலழிக்கிறஞன் நிஷ்பிரபஞ்சசொரூபமாமாகலாமென்பதாம். (சஅ)

(அவதாரிகை)

அப்பியாசிகள்தான் அஞ்ஞானிகள் சங்கமும்விடயப்பற்றுமின்றி யிருக்கவேண்டுஞ் சர்வமும் தாஞய்க் கண்டஞானிகள் அங்ஙன நிற்கத் தேவையில்லையே யெனில்.

கவி

பெரியோருந்தாமிருக்குந்தன்மையிலேகாக்கிரமாய்ப்பேதாபேதத், துரியோரைக்கலவாமலொருவிடயந்தனிலுமனதுறவாகாமற், பரிவோடுகொடுத்தாலுமருந்துபோலருந்துவரப்பான்மையாலே, யெரியோடுகலந்தபஞ்சாம் விடயமெலாமவர் மலமற்றிருப்பர்தாமே.

(இ-ள்) பெரியோரும்-மேலோர்களும், தாமிருக்குந்தன்மையில்-தாங்களிருக்கின்றநிலையில், ஏகாக்கிரமாய்-மனமொருமித்து, பேதாபேதத்துரியோரை-துவிதாத்துவிதத்துக் குரித்தானபேரை, கலவாமல்-சேராமல், ஒருவிடயந்தனிலும்-சத்தாதி விடயங்களொன்றி

னிடத்தும், மனதுறவாகாமல்-உள்ளம் விருப்பமுறும ல்-பரிவோடுகொடுத்தாலும்-அன்னபானாதிகளையன்பு டனேயீந்தாலும், மருந்துபோல-மனதுக்கொவ்வாத அவிழ்தம்போன்று, அருந்துவர்-நுகர்வர், அப்படியா வது புசிக்கும்போது அதனால் ஆணியில்லைபோலெவனி ல், அப்பான்மையால்-அங்ஙனம் புசிக்குந்தன்மையால், விடயமெலாம் அவ்வஸ்துக்களனைத்தும், எரியோடும்-அக்கினியினிடத்து, கலந்த-சேர்ந்த, பஞ்சாம்-பஞ்சு போற்சேஷமில்லாமற் கெட்டுப்போம், அவர்-அப்பெரி யோர் மலமற்றிருப்பர்-நிருமலராயிருப்பார்கள்-எ-று.

(ப-ம்) ஞானிகளெல்லாமாயிருக்கின்ற பிரமமே தா மாகவிருப்பதால் அவர்களது விருத்தி சுட்டுதற்கு வேறொன்றற்றிருக்கு மென்பார்-பெரியோருந்தாமிரு க்குந் தன்மையிலே காக்கிரமாயெனவும்-பிரபஞ்சமும் பிரமமும் வேறென்பவருடனும் வாக்குமாத்திரமா யொன்றென்பவருடனும்-அனுசந்தானவிரோதம் வரு மென்று சேராதிருப்பாரென்பார் பேதாபேதத்துரி யோரைக்கலவாமலெனவும்-மனுடானந்த முதலிரணி யகர்ப்பானந்தம் வரையுள்ள சர்வகர்மமுமடைந்தவ ராதலால் நாமடையவேண்டிய திதுவென வோர்விடய த்திலும்பற்றாரென்பார் ஒருவிடயந்தனிலு மனதுறவா காமலெனவும்-உடன்கட்டையேறப்போகின்றவள் பந் துக்கள் கொடுக்கும்போகத்தை விருப்பமற்றுப் புசித்

தல்போல ஞானிகள் பிறர்வருந்தி விடயபோகங்கள் கொடுக்கினு மின்னுமிந்தப்பிராரத்தந் தொலையவில்லையோவென்னும் வெறுப்புடன் புசிப்பாரென்றோர் பரிவோடுகொடுத்தாலு மருந்துபோலருந்துவரெனவும்-சர்வமுமாயிருக்கின்ற ஞானத்துடனும் நிராசையோடும் புசிப்பதாலவ்விடயபோகவாசனையுஞ் சத்தியபுத்தியுமுண்டாக மாட்டாதென்பார் அப்பான்மையாலேயெரியோடுகலந்த பஞ்சாம்விடயமெலாமவர் மலமற்றிருப்பரெனவுங்கூறினர்.

(இ-ம்) ஞானிகள்பிராரத்தவசத்தாய்ப்போகப்புசிக்கினும் பற்றற்றிருப்பரென்பதாம். (சகூ)

(அவதாரிகை)

அப்படி ஞானிகள் பிறர்வருந்திக் கேட்டுக்கொள்ளுவதாலாகாத விடயங்களையும் புசிக்கலாமோவெனின்,

(கவி)

அப்படியாகினுமனல்போலே தேனுமருந்துவரென்றறைதல்வேண்டாந், தப்பறவேயஞ்ஞானிபோற்புசிப்பனெனவுரைத்ததகைமையாலே,யொப்புரைத்ததல்லாதிங்குலகிகழப்புசியான் மற்றுண்டானேனு, மெய்ப்பரிசையுணர்ந்தாரை யிகழ்ந்தார்க்கு நரகமென்று விளம்புவாரே.

(இ-ள்) அப்படியாகினும் - அங்ஙனங் கொடுத்தருந் துகின்றதே யானாலும், அனல்போல-நெருப்புபோன்று, ஏதேனும்-எதனையேனும், அருந்துவனென்று-புசிப்பானென்று, அறைதல்-சொல்ல, வேண்டாம்-வேண்டுவதில்லை, அப்படியானால்-முன்னம் அஞ்ஞானிக்கின்பமானவிடயத்தை விரும்புவானென்றதற் கிங்குரைசெய்தது விரோதமாகின்றதேயெனில், தப்பறவே-பிசகாது, அஞ்ஞானிபோல - அறிவிலிபோன்று, புசிப்பனென-அருந்துவானென்று, உரைத்தகைமையாலே-கூறினதன்மையினாலே, ஒப்புரைத்ததல்லாது - ஒருவமைகூறினதேயன்றி, இங்கு-இவிடத்து, உலகிகழ-சகத்தோர் நிந்திக்கும்படியாய், புசியான்-அருந்தான், அப்படியானால்-நிடேதபோகம் புசிப்பவரை நிந்திக்கலாமோவெனில், உண்டானேனும்-ஞானியானவன் நிந்திக்கத்தக்க போகம்புசித்தானேயானாலும், மெய்ப்பரிசை-சத்தியசொரூபந் தானென்னுமியல்பை, உணர்ந்தாரை-அறிந்தமகான்களை. இகழ்ந்தார்க்கு-நிந்தித்தவர்களுக்கு, நரகமென்று-நிரயத்துன்பமுண்டாமென்று விளப்புவார்-அறிஞர்கள் கூறுவார்கள்-எ-று.

(ப-ம்) அக்கினியானது எட்டிவிருட்சம் சந்தனவிருட்சமெனப்பாராமல் தகிக்கின்றதுபோல ஞானிகள் போகம்புசிக்காமல் நிடேதத்தைவிட்டு விதியைச்செய்து அப்படியேபோகமும்புசிப்பாரென்பார் அப்படியாகி

னுமனல்போலேதேனுமருந்துவறென்றறைதல்வேண் டாமெனவும்-ஞானிகள்தங்களேஉலகஜனங்கள் நிந்தித் தாலிம்மையிலு மறுமையிலுந் துன்புறுவார்களேயெ ன்றுஅவர்கள் நிந்திக்கும்படியான போகத்தைப்புசித் தாலும் விடத்தைத்தின்னுததுபோலப் பிறர்வேண்டு தலேக்குறித்தேனும் புசியாரென்பார் உலகிகழப்புசியா னெனவும் - ஆற்றுச்சலங் கடலிற்போயுப்புச்சலமான பின்றிருப்பினுலுமுப்புச்சலமா யிருப்பதுபோலச் சீவ னுயிருந்தவர்கள் அப்பியாசத்தாற் சிவமாய் மறுபடி விவகாரஞ் செய்யும்போதுஞ் சிவமாயிருத்தலிற் சிவத் தைநிந்தித்தவர்களேப்போல அவர்களே நிந்தித்தவர்க ளும் நரகத்தையடைவரென்பார் மெய்ப்பரிசை யுணர் ந்தாரையிகழ்ந்தார்க்கு நரகமெனவுங்கூறினர்.

(இ-ப்) ஞானிகள் என்னசெய்யினும் புசிக்கினும் விதிநிடேதங் கற்பிக்கக்கூடாதென்பதாம். (ருಌ)

(அவதாரிகை)

இந்நூலாசிரியர் தமது குருவைத் துதிசெய்தல்.

(கவி)

அற்றைதொறுமாயிரமா யிரம்பிழைகள் செய்தா லுமடியேன்றன்பாற், பெற்றதிருதருட்கடலிற் குளிப் பாட்டித்தாண்மலரும் பேறுய்ச்சூட்டிச், சொற்றதே

லாந்தோத்திரமாய்ப் புனைந்தருளி யெனைவளர்க்குந் தொட்டிலாகி, யுற்றகுருநாயனெங்கள் விநாயகபாரதி தமியேனுள்ளத்தானே.

(இ-ள்) அற்றைதொறும்-நாடோறும், ஆயிரமாயிரம்பிழைகள் - அனந்தகுற்றங்கள், செய்தாலும் - இயற்றினுமவைகளைப் பொறுத்துக்கொண்டு, அடியேன்-நாயேன், தன்பால்-தம்மிடத்தில், பெற்ற-பெற்றிருக்கின்ற, திரு - அழகிய, அருட்கடலில் - கிருபாசமுத்திரத்தில், குளிப்பாட்டி-குளிக்கச்செய்து, தாண்மலரும்-திருவடித்தாமறை யுரிபெறுய்ச்சூட்டி, இதுவே பிரயோசனமெனத் தபத்து, சொற்றதெலாம்- அடியேன் கூறியதனைத்தையும், தோத்திரமாய்-துதியாக, புனைந்தருளி-கொண்டருளி, எனைவளர்க்கும்- நாயேனைக் காக்கின்ற, தொட்டிலாகி - தொட்டிலாகி, உற்ற-இருந்த, விநாயகபாரதி-விநாயக பாரதியென்னு நாமதேயத்தை யுடைய, எங்கள் குருநாயன் - எமது தேசிகராஜன், தமியேனுள்ளத்தான் - நாயேனிதயத்தில் வசிக்கின்றவராம்.

(ப-ம்) குழந்தை புழுதியிற்புரளினும் மாதாவானவள் கிருபையுற்றுக் குளிப்பாட்டல்போலத் தானறியாமையாற்செய்த மிகுந்த குற்றங்களைக் குருமூர்த்தியானவர் பேரருளினாற் பொறுத்து மகாவாக்கியோபதேசஞ்செய்து பிரமசாகரத்தில் மூழ்கச்செய்தாரென்

பார் அற்றறதொறு மாயிரமாயிரம் பிழைகள் செய்தானுமடியேன் றன்பாற் பெற்றதிருவருட் கடலிற் குளிப்பாட்டியெனவும் குழந்தைக்குச் சக்கிரவர்த்தியானவன் முடிசூட்டுதல்போலப்பிரமாகாரமான இதைவிட வேறு பரமோட்சமில்லையெனத் தாமறைபோன்ற திருவடிதீட்சை செய்தாரென்பார் தாண்மலரும் பேருய்ச்சூட்டியெனவும், குழந்தையானது சொல்லினும் பிதவானவர் பிரியமாய்க் கேட்டுக்கொள்ளுதல் போலத்தன்னைப்பிள்ளையாக வங்கிகரித்தபடியாற்றான் சொல்லியதெல்லாந் துதியாகப்பேணிக் கொண்டாரென்பார் சொற்றதெலாந் தோத்திரமாய்ப் புனைந்தருளியெனவும் குழந்தையின் சவரட்சணைக்குத் தொட்டில் சகாயமாயிருப்பதுபோலச் சகசானந்தானுபவம் தனக்குண்டாகும்படி சந்தேகநிவர்த்திகளைச் செய்து கூடவே வைத்திருந்தா ரென்பார் எனைவளர்க்குந் தொட்டிலாகியுற்றவெனவும், தத்துவக்கியானம்வந்து போதிக்கும் வல்லமை யுடையவரென்பார், குருராயரெனவும் பரிபூரணப் பிரம சொரூபமாகத் தன இதயத்தின்கண் விளங்குகின்றாரென்பார் தமியேனுள்ளத் தானெனவுங்கூறினார்.

(இ-ம்) குரு ஸ்துதிசெய்து அதின்மூலமாய் இந்நூலைச் சம்பூரணமாகச் சமாப்தஞ் செய்ததாம்.

மகாவாக்கியஉரை - முற்றிற்று.